
ஆவது
60
அகவை

பொது சன நூலகம்
22 FEB 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# தேவதீபம்



வலிகாமம் கல்வி வலய

திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்

**உயர் திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்**

அவர்களின் சேவைநலன் பாராட்டு

## மணிவிழா மலர்
## 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகனின் பதிவுகள்...





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்
உயர்திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின்

சேவைநலம் பாராட்டு மணிவிழா மலர்

# தேவதீபம்




9047(P)

09.02.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழா நாயகன்

வலிகாமம் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்,

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

## உயர்திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்

B.A., PGDE, M.E.D, M.A, PGDEM, SLEAS III

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
9047(P)
PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ♦ அருளுரை | 5 |
| ♦ நெஞ்சில் நிலைத்தவர் | 6 |
| ♦ செஞ்சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகனின் ஆசிச்செய்தி | 7 |
| ♦ அருட்சகோதரியின் ஆசிச்செய்தி | 8 |
| ♦ அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | 9 |
| ♦ பேராசிரியர். விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 10 |
| ♦ சத்தியசீலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 11 |
| ♦ வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | 12 |
| ♦ வலிகாம கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 13 |
| ♦ பிரதேச செயலர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 14 |
| ♦ சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் வாழ்த்துச் செய்தி | 15 |
| ♦ பேராசிரியர். தேவராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி | 16 |
| ♦ ஊரும் உலகம் கூடி வாழ்த்தும் நிகழ்வு | 17 |
| ♦ ஒழுக்கசீலமுள்ள விடா முயற்சியாளர் | 18 |
| ♦ வவுனியா கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 19 |
| ♦ Retirement is (Happy) Wonderful | 20 |
| ♦ வலிகாம பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 21 |
| ♦ கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 22 |
| ♦ சண்முககுலகுமாரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 23 |
| ♦ ஆனந்தகுமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 24 |
| ♦ சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உள்ளத்திலிருந்து... | 25 |
| ♦ நாவன்மை படைத்தோன் வாழ்க | 26 - 27 |
| ♦ ஜெகதீஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 28 |
| ♦ பிராந்திய உதவிப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 29 |
| ♦ பஷீர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 30 - 31 |
| ♦ எல்லோரும் நலம் வாழ வழி காட்டுபவர் | 32 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பிலோமின் அவர்களின் வாழ்த்துச் செய்தி 33
♦ Retirement is Wonderful 34
♦ கடமை உணர்வு கொண்ட சித்தப்பா 35 - 36
♦ மன்னவரே வாழியவே! 37
♦ துரைசிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி 38
♦ பாராட்டித் திருத்திய பண்பாளன் 39
♦ இந்திரபாலா அவர்களின் வாழ்த்துச் செய்தி 40
♦ வாழ்வியல் சரிதம் 41 - 46
♦ பின் - நவீனத்துவமும் கல்வியும் 47 - 51
♦ இலங்கையிற் கல்வி வளர்ச்சியும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியும் ஒரு கண்ணோட்டம் 52 - 57
♦ மலையகத்தில் சைவ சமயம் 58 - 59
♦ பரீட்சையில் வினாக்களுக்கு விடையளிக்கும் போது கவனிக்க வேண்டியவை 60 - 62
♦ சைவசமயமும் நடைமுறை வாழ்க்கையும் 63 - 64
♦ மனித விழுமியங்களைப் பின்பற்றி நலமாய் வாழ்வோம்! 65 - 67
♦ விருந்தோம்பலின் சிறப்பு 68 - 70
♦ நல்ல ஆசான் 71
♦ சைவப்புலவர் தேர்வும் பட்டமளிப்பும் 72 - 74
♦ சைவ விழுமியப் பண்புடன் வாழ்வோம் 75 - 76
♦ மலையக கல்வி வளர்ச்சியில் திரு. சு. தேவமனோகரன் அவர்களின் பங்களிப்பு 77 - 78
♦ நன்றியுரை 79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாச் சபை மலர்க்குழு



**இருப்பவர்கள்**

திரு. த. சிவகுமாரன், திரு. ஆ. பேரின்ப நாயகம், திரு. செ. இலகுநாதன், திரு. சு. தேவ மனோகரன், செல்வி. இ. சாமந்தி, திரு. இ. கணேசானந்தன், திரு. இ. துரைசிங்கம்

**நிற்பவர்கள்**

திரு. செ. கந்தசத்தியதாசன், திரு. இ. தயாகரன், திரு. ந. சபாரட்ணசிங்கி,
திரு. ந. ஞானசூரியன், திரு. மே. இந்திரபாலா, திரு. ப. பிரதாபன்,
திரு. செ. பரமேஸ்வரன், திரு. க. ஜெகதீஸ்வரன், திருமதி. க. கிருஸ்ணபிள்ளை



வலய உத்தியோகத்தர்களுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருளுரை



மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து - திருக்குறள்

தமிழர் தம் பண்பாட்டின் கருவூலம் வந்தாரை வரவேற்கும் பண்பு. உபசரிக்கும் உயர் எண்ணம், இன்சொல் உரையாடல் விருந்தோம்பலில் கூட இன்முகம் தான் முக்கியத்துவம் பெறுகின்றது. மணிவிழா நாயகர் திருவாளர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள் எப்போதுமே இன்முகத்தோடு சம்பாஷிக்கும் பண்பு கொண்ட பண்பாளர். அனைவரையும் அரவணைத்து அவரவர் நாடி வந்த தேவையை உணர்ந்து சேவையாற்றுவார். உழைப்பை உயிரெனக் கொண்ட விவசாயக் குடும்பத்திலே அவதரித்து, கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்று உயர் பெறுபேற்றோடு யாழ் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் சிறப்புப் பட்டப்படிப்புக்களை நிறைவு செய்து திருகோணமலை, கண்டி போன்ற பல பிரதேசங்களிலும் ஆசிரியப் பணி புரிந்து பெரும்புகழ் ஈட்டியவர். தொடர்ந்தும் பல்வேறு துறைசார் பரீட்சைகளில் தோற்றி பல உயர் நிலை பட்டங்களைப் பெற்று கல்வி அதிகாரியாகத் திகழ்ந்தவர் எம் கிராமத்திற்கும். தான் சார்ந்த குடும்பத்திற்கும் பெருமை சேர்த்தவர்.

கல்விப் புலத்தோடு மட்டுமல்லாது தான் சார்ந்த கிராமச் சூழலோடு இணைந்து ஆலய வழிபாட்டு சைவ மரபுகளைப் பேணி, வளர்க்கின்ற பக்திமானாக அவரைக் காண்கின்றேன். 2004 ஆம் ஆண்டு சைவப்புலவராகப் பரிணமித்தவர்.மழையெனப் பொழியும்தன் சொல்லாடலால் இலங்கை வானொலி மலையக சேவையில் முத்திரை பதித்தவர். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே என்றனர் சான்றோர்கள். பிறந்த ஊருக்கும், தாய் தந்தைக்கும், தமிழுக்கும், நாட்டிற்கும் புகழீட்டியவர் திரு. சு. தேவ மனோகரன் அவர்கள்.

எப்போதுமே என்னோடு இயல்பாக உரையாடி உறவுக்கு மெருகேற்றுபவர். அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டு லயித்திருக்கின்றேன். ஒரு கல்வியாளனாக, பக்தி ஆன்மீகச் செயல்வீரனாக, நிறைந்த தலைமைத்துவப் பண்பாளராக, சேவைத் தொண்டராக என அவரின் பன்முகப்பட்ட தோற்றங்களையும் வியந்து ஊரே போற்றும்.

இன்று அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் எம்மோடு இணைந்து சமய, சமூக, கல்விச் சேவைகளைத் தொடர்வார் என்பதில் ஐயமில்லை. அவரின் ஓய்வு காலம் குடும்பத்தோடும். கிராமத்தோடும் இணைந்த மகிழ்ச்சி மிகு இன்பக் காலமாக அமைய கருணாகரப் பெருமானின் திருவருள் கைகூட ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

*"மந்திர கிரியா சுரபி"*

**சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் J.P**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிலைத்தவர்



மருதநிலம்சூழ்மட்டில்லாசெழிப்போடுஇறைவன்அருள்இனிதே நிறையப் பெற்ற இணுவில் தாய் பெற்றெடுத்த அரவணைப்பில் சுவாமிநாதபிள்ளை இராசமணி தம்பதியரின் தவப்புதல்வனாய் தேவமனோகரன் அவர்கள் இம்மண்ணிலே அவதரித்தார். ஆரம்பம் முதலே ஆற்றல் மிக்கவராய் திகழ்ந்த இவர் ஆரம்பக் கல்விதனை இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று கல்வியுடன் கலை , கலாசாரம் ,சமயப்பற்று என பன்முக ஆற்றல் பெற்று மிளிர்ந்தார். அறிவை வளர்ப்பதிலும் தனிமனித ஆளுமையை கட்டியெழுப்புவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர். விடா முயற்சியுடன் கற்று பல பட்டங்களையும் தனதாக்கினார். கலைமாணி, முதுகலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி, பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் என கல்விப் புலத்தில் அகலக்கால் பதித்த இவர் கல்வி நிர்வாக சேவை தரம் 2 என்ற நிலமையையும் எய்தினார். அத்துடன் சைவத்திலும் தமிழிலும் புலமை வாய்ந்த இவர் 2004ம் ஆண்டு முதல் சைவப் புலவர் எனும் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் 1989 இல் ஆசிரியராக துளிர்விட்ட இவரின் கல்விப் பணி கண்டி கஜவல வரை பரந்து , வலிகாமம் வரை நீண்டு விரிந்தது. 2000 தொடக்கம் 2007 வரை சைவ சமய ஆலோசகராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மலையக சேவையின் பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணி புரிந்த இவர் 2007 முதல் 2012 வரை தெல்தெனிய வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் 2012 முதல் 2019 வரை வலிகாமம் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய இவர் இன்று பதவி நிலை ஓய்வினைப் பெறுகின்றார். இளமை தொடக்கம் இன்று வரை அரும்பணியாற்றி பல வித்துக்களை விருட்சமாக்கியவர் இவரெனின் அது மிகையாகாது. இவ்வாறாக ஆசானாய் ஆலோசகராய் , கல்வி அதிகாரியாய் சைவப்புலவராய் பார் போற்றும் பணிகள் பல செய்து மலையின் விளக்கென ஒளிர்ந்தார். பண்பான வாழ்வாள் தரணியில் அழியாத் தடம் பதித்திட்ட தங்களை நிறைந்து வாழ்த்தி மகிழ்கின்றேன். உடல், உள ஆரோக்கியத்துடன் இன்று போல் என்றும் நீங்கள் நலமுடன் வலம்வரவும் இறையாசி மேலும் கிடைத்திடவும், இறைவரம் வேண்டி வாழ்த்துகிறேன்.

"வாழ்க வளமுடன் வளர்க நலமுடன் மிளிர்க இறைஅருளுடன்"

**வண யோ.அ.ஜேசுதாஸ்**

கிளி.மறைக்கோட்ட முதல்வர் கிளிநொச்சி

(முன்னாள் அதிபர்,

யா/புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாநாயகனின் குடும்பத்தினர்





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசிச் செய்தி



இணுவில் கிராமத்தில் இறைபக்தியோடு நிறைவாக வாழ்ந்தவர்கள் அமரர் சுவாமிநாதபிள்ளை தம்பதிகள் இத்தம்பதிகளின் மைந்தன் திரு. சு. தேவமனோகரன் அவர்களின் மணி விழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். சமய நெறிகளைப் பேணுவதில் மிகுந்த அக்கறையுடைய மணிவிழா நாயகன், சைவப்புலவர் பரீட்சையில் சித்திபெற்றுப் பல காலம் பாடசாலைகளில் சமய விரிவுரைகளை ஆற்றி நன்மதிப்புப் பெற்றவர். ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக கல்விப்பணியாற்றி ஓய்வு பெறும் இவரின் சேவை நலம் குறித்து ஊர் மக்கள் கல்வியியலாளர்கள் இணைந்து விழா எடுத்துக் கௌரவிப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

அரச ஓய்வு நிலையில் சைவசமய, சமூகப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து நலத்துடன் வாழ இறையருளை வேண்டி, இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

*கலாநிதி.* **ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை,
சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



கல்விப் புலத்தில் கம்பீரமாய் பணியாற்றி 60வது அகவையில் கால் பதித்து மணிவிழாக்காணும் யா/வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு. சு. தேவமனோகரன் ஐயா அவர்களின் மணி விழா நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றோன்.

அறுபது ஆண்டுக்கு முன்னர் அன்னை உதரத்தில் புகழொடு தோன்றி கலைத்துவமும் பண்பாடும் நிறைந்த குடும்பத்தில் பிறந்து பல்கலை வித்தகனாக குழந்தையில் இருந்தே உருவாக்கம் பெற்ற திரு. சு. தேவமனோகரன் ஐயா அவர்களது மணிவிழாவிலே அவரைப்பற்றி எனது அனுபவங்களில் சில

"ஒல்வது அறிவது அறிந்து அதன் கண் தங்கி செல்வார்க்குச் செல்லாதது இல்"

தன் சக்தியால் என்ன முடியும் என்பதையும் எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து செயற்பாட்டில் தளராமல் இருந்து முயல்பவர்களுக்கு முடியாத செயல் எதுவும் இல்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஐயா அவர்கள் கல்விப் புலத்தில் பல்துறைகளிலும் பாண்டித்தியம் பெற்று சவால்களுக்கு மத்தியில் ஏணிப் படியேறி பல சாதனைகளை நிலைநாட்டி உயர்ச்சிகள் பல அடைந்தவர். இலங்கையின் பல பாகங்களிலும் இன மத மொழி கடந்து பணியாற்றி யாழ் வலிகாம வலயத்தில் திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று திட்டங்களை திறமையுடன் தீட்டி அதில் நேர்த்தியாக நேர்மையுடன் பணியாற்றி பணிக்களமான வலயத்தில் மனிதமும் ஆன்மீகமும் நிறைந்தவராக ஆற்றிய பணி மூலம் அதிபர் ஆசிரியர்கள் மனதில் ஆழமான இடம் பிடித்த மனிதம் நிறைந்தவர்.

அகவை அறுபதை நிறைவு செய்து பணி வாழ்வில் ஓய்வு பெறும் இவருக்கு பரம்பொருள் பரமனின் ஆசீர் நிறைவாகக் கிடைக்கவும், கல்வி நிரிவாகி உயர்திரு . சு. தேவமனோகரன் ஐயா அவர்கள் புதிய அகவையில் மனம் நிறைந்த மகிழ்வான வாழ்வு வாழ இறைவன் ஆசீர் அருள வேண்டியும், தொடரும் ஓய்வு கால வாழ்வுப் பயணத்தில் பரமன் அருள் நிலைத்திருக்கவும் வேண்டி இறையாசி கூறி நிற்கின்றோன்.

*அருட்சகோதரி* **செ.மரிய டெய்சி**
அதிபர்
யாழ்/மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ்.றோ.க.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விழாநாயகனின் திருமண நிகழ்வின் போது...





விழாநாயகன் குடும்பத்தினருடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



திருவாளர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சுவாமிநாதபிள்ளை இராசமணி அம்மையாருக்கு மகனாக இணுவிலில் பிறந்த திருவாளர் தேவமனோகரன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, பட்டப்பின்படிப்பு பின்னர் முதுகலைமாணி ஆகியவற்றினையும் பெற்றுக்கொண்டவர். நல்லாசிரியராக தி/குச்சவெளி விவேகானந்தா மகாவித்தியாலயம், கண்டி இராஜவல த. ம. வித்தியாலயம் ஆகியவற்றிலும் கடமையாற்றியவர். கல்வி நிர்வாக சேவையில் சித்தியெய்தி, ஆசிரிய ஆலோசகர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளராக தெல்தெனிய வலயத்திலும் பிரதிக் கல்விப் பணிப்பாளராக வலிகாமம் வலயத்திலும் கடமையாற்றி மணி விழா காணும் இவ் வேளையில் அவரது ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைபரம் பொருளின் பாதங்களை பணிந்து வேண்டுகின்றேன்.

மணிவிழா மலரினை வெளியீடு செய்யும் மணிவிழா குழுவினரையும் ஊர் மக்களையும் பாராட்டி மலரும் மணிவிழா சிறப்பு மலர் அவரது புகழ் பரப்பும் என வாழ்த்தி என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மணிவிழா காணும் திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரனின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. சு. தேவமனோகரன் இணுவையூரில் பிறந்தவர். அவரை எனக்கு நன்கு தெரியும். இவர் 78ஆம் ஆண்டில் குபேரன் ஏஜென்சிஸ் (மட்டக்களப்பு) முகாமையாளராகவும், பின் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் திட்ட உதவியாளராகவும் பின் குச்சவெளி விவேகாநந்த மகா வித்தியாலயம், திருகோணமலையில் ஆசிரியராகவும் அதிபராகவும் அதன் பின் திகண இரஜவலய தமிழ் தேசிய கல்லூரி கண்டியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், பின் சைவசமய ஆசிரிய ஆலோசகராக தெல்தெனியா, வத்தேகம, கட்டுகஸ்தோட்டை வலயங்களில் பணியாற்றினார். பின் உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்தெனியா வலயம், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் பணியாற்றி 2019 வரை தனது சேவையினை நிறைவு செய்கிறார்.

அதே நேரத்தில் தனது சேவைக்காலத்தில் பகுதிநேர அறிவிப்பாளராக இலங்கை வானொலியிலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் கண்டி மத்திய நிலையத்தில் விரிவுரையாளராகவும், அகில இலங்கை சைவப்புலவர், சங்க தேர்வுச் செயலாளர், நிர்வாக சபை உறுப்பினராகவும், உளவளத்துணை ஆலோசகராகவும் தனது சேவையினை திறம்பட வழங்கியுள்ளார்.

இவரது தாய், தந்தை இணுவில் கோயில்களில் மிகுந்த பக்தி உடையவர்கள். இவரது குடும்பம் படித்த குடும்பம், ஊரில் மதிப்பு, மரியாதை மிகுந்த குடும்பம். பிறருக்கு உதவி செய்வதில் மிகுந்த விருப்பமுடையவர்கள்.

இவர் உடல் ஆரோக்கியத்துடன் சுகமாக இருக்க வேண்டும் என்று இணுவில் நொச்சியோலைக் கந்தனின் பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

*பேராசிரியர்.* **இ. விக்னேஸ்வரன்**
உபவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



60வது அகவையை பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின் அரச சேவையை பாராட்டுவதுடன் சேவைநயப்பு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள் இணுவில் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப் பெற்று இடைநிலைக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்கல்வியை கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மற்றும் முதுமாணி கற்கையையும் கற்றுள்ளார். 1989 ஆம் ஆண்டு ஆசிரியராக பணியேற்ற பின்பு ஆசிரியப்பணியை செவ்வனே ஆற்றுவதற்கும் நல்ல மாணாக்கரை உருவாக்கவும் துறைசார் கற்கையான பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி போன்றவற்றை கற்றுள்ளார்.

தி/ குச்சவெளி விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் ஆசிரியப் பணியினை 1989 ஆம் ஆண்டு ஆரம்பித்து 1995 ஆம் ஆண்டு கண்டி இரஜவல த.ம.வித்தியாலயத்தில் கடமையாற்றி 2000 ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகராக கடமையேற்று தெல்தெனிய கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக 2007 ஆம் ஆண்டு இருந்து 2012 அம் ஆண்டுவரை கடமையாற்றி பிரதிக் கல்விப் பணிப்பாளராக (திட்டமிடல்) வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் 2013 முதல் 2019 வரை கடமையாற்றி கல்விச் சமூகத்திற்கு பணியாற்றியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பகுதிநேர அறிவிப்பாளரா கலைத்துறையிலும் காலடிபதித்துள்ளார். சைவப்புலவராக சமயத்திற்கு பணியாற்றிய பெருமைக்குரியவர். கல்விச் சமூகத்திற்கு அளப்பெரிய பணியினை ஆற்றியதுடன் இவர் தனது கடமைக்காலத்தில் சமூகம் சார் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையினை பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுகாலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப்பிராத்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. சு. தேவமனோகரன் அவர்களது சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவரான இவர் முதுகலைமாணி, முதுகல்வி மாணிப் பட்டங்களினைப் பெற்றுள்ளதோடு சைவப்புலவர் பட்டத்தினையும் பெற்றவராவார். இவர் சிறிது காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் பகுதிநேர அறிவிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வில் செல்லும் இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும், இவரது சைவசமய சமூகப்பணி தொடரவும் வேண்டுகின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம், மருதனார்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள் 09.02.12019 ஆம் நாளில் அகவை அறுபதில் ஒய்வு பெறுவதனையிட்டு அவருக்கான மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

திரு. சு. தேவமனோகரன் 1989 ஆம் ஆண்டு முதல் கல்விப் புலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஆசிரியராகக் கால்பதித்து, தனத ஆளுமை மூலம் பகுதித்தலைவராக, உதவி அதிபராக, சைவசமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக என ஆசிரிய சேவையில் பல பரிமாணங்களிலே சேவையாற்றி, பின்னர் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 2007 ஆம் ஆண்டு முதல் தெல்தெனியா வலயத்திலே திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், பின்னர் 2013 ஆம் ஆண்டு முதல் இன்று வரை வலிகாமம் கல்வி வலயத்திலே திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று தன் அகவை அறுபதில் ஒய்வு பெறுகின்றார். தனது 30 வருட அரச சேவைக்காலத்தின் பெரும் பகுதியினை அதாவது 23 ஆண்டுகளை வெளிமாகாணங்களில் ஆற்றிய அனுபவத்துக்குரியவர். சைவசமய விழுமியங்களை கடைப்பிடிப்பதிலும்., அதனை ஏனையோருக்கு அறிவுறுத்துவதிலும் நாட்டம் மிக்கவர்.

தான் வகித்த ஒவ்வொரு பதவியிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்துவதற்குத் தயங்காதவர். இவர் ஒரு சிறந்த அறிவிப்பாளர், என்பதுடன் 2000 - 2006 ஆம் ஆண்டு வரை இலங்கை வானொலியின் மலையக சேவை நிலையத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகக் கடமையாற்றியமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். தனது சேவைக்கு அணிசேர்க்கும் விதமாக தேசிய கல்வி நிறுவகத்திலும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்திலும் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.

வலிகாமம் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இறுதி ஆறுவருடங்களிலும், தனது அர்ப்பணிப்பான சேவையை வலயக் கல்வி அலுவலகத்துக்கும். பாடசாலைகளுக்கும் ஆற்றியிருந்தார்.

904T(P)

சமூகத்துக்குப் பல கல்விமான்களை உருவாக்கியது மட்டுமன்றி அவர்களுக்கான வழிகாட்டியாகவும், வாழ்ந்து ஒய்வு பெறுகின்ற திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள் தனது ஒய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்று இனிதே வாழ இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



அக இருள் அகற்றும் அறிவு ஒளியை விளக்கப்பயன்படுவதாய் அமைந்த கல்விச் சேவையின் சிறப்புஅளவிடற்கரியது. அத்தகு கல்வித்தானம் செய்வோர் கடவுளை ஒத்தவராவார். அச்சிறப் புக்களை உடைய கல்விச் சேவையில் மணிவிழாக் காணும் திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

இணுவில் பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர் தேவமனோகரன் அவர்கள். தமது பாடசாலைக் கல்வியை இணுவில் கிராமத்தின் பாடசாலைகளில் கற்று தனது உயர்தர பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாண இந்துக் கல்லூரியிலும், இளமாணிப் பட்டப்படிப்பு மற்றும் முதுமாணிப் பட்டப்படிப்புகளை பேராதனை பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தவராவார். மேலும் கல்விப்புலம் சார்ந்த பட்டப்பின் படிப்புகளையும் பூர்த்தி செய்தவராவார்.

திருகோணமலை, கண்டி முதலிய பிறமாவட்டங்களில் கல்விப் பணியாற்றிய இவர் சைவப்புலவர் பட்டத்தைப் பெற்றவராவார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மலையக சேவையில் நீண்ட நாட்களாக பகுதி நேர அறிவிப்பாளராகவும் சேவையாற்றியவராவார்.

கல்வியுலகைச் சேர்ந்த ஒருவரைக் கௌரவித்தல் என்பது ஏன் ஒரு சமூகக் கடமை யாகின்றது என்பதற்குப் பல காரணங்களைக் கூற முடியும். இது தனி மனித ஆளுமைக்கு அப்பாற் போய் ஒரு சமூக ஆளுமையோடு சம்பந்தப்பட்ட விடயமாகின்றது. என்பது இவற்றுள் தலையாய காரணமாக அமைகின்றது. அந்த வகையில் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளருக்கான இன்றைய பாராட்டுவிழா ஒரு சமூகம் தன்னைத் தானே பாராட்டுவதற்குள்ள தார்மீகத் தகுதியினை வெளிப்படுத்த எடுக்கும் முயற்சியின் வெளிப்பாடாகவே தோன்றுகின்றது.


திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள் இன்று போல் என்றும் வாழ வாழ்த்துகின்றேன். அவர் ஆற்றுவதற்குப் பல பணிகள் இருக்கின்றன. அவற்றை ஆற்றி நிறைவு செய்ய அவருக்கு நிறைந்த ஆயுளும் நல்ல உடல், உளவலுவுடனும் எல்லா வகை நலன்களும் கிட்ட வேண்டுமென இறையருளை வேண்டி இந்த வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**சி. ஜெயகாந்த்**
பிரதேச செயலர், பிரதேச செயலகம்,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நாம் பிறந்த ஆண்டு அறுபது வருடங்களுக்கு ஒருமுறை திரும்பவரும். இவர் பிறந்தது. விளம்பி வருடம் அது அறுபது ஆண்டு வட்டத்தில் மீண்டும் வருகிறது. இதுவே மணிவிழா ஆண்டாக மலர்கிறது. ஒருவரின் வாழ்க்கையில் அவர் செய்த சாதனைகளுக்கு உரைகல் போன்றது மணிவிழாவாகும்.

இணுவில் கிழக்கில் திரு. சு. தேவமனோகரன் அவர்கள் ஒரு விவசாயின் மகனாகப் பிறந்து தனது தளராத முயற்சியால் கல்வியில் உயர்ந்து, உத்தியோகத்தில் உயர்ந்து. தான்வாழும் சமூகத்தில் உயர்ந்து ஒரு சாதனையாளனாக இன்று எல்லார் உள்ளங்களிலும் உயர்ந்து நிற்கின்றார்.

இவரது தந்தை எனது துணைவி வழி உறவினர் என்பதுடன் எனக்கு இனிய நண்பராகவும். நல்ல வழிகாட்டியாகவும் வாழ்ந்தவர். விவசாயத் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்ட தன் நவீனத்துவ தொழில் ஆற்றலால் தன் பெரிய குடும்பத்தை உலகில் உயர்ந்து வாழச் செய்தவர். பிள்ளைகளை உயர் கல்வி கற்க வைத்து. உயர் உத்தியோகம் பார்க்க வைத்துக் குடும்ப வாழ்விலும் உயர்ந்து பலர் போற்ற வாழ வைத்தவர்.

நகைச்சுவையாக, வாழ்க்கை அனுபவங்களைச் சொல்வார், எந்த இடத்திலும் அவரது அறிவுரையைக் கேட்க ஒரு கூட்டம் அவரைச் சூழ்ந்திருக்கும். "தந்தை அறிவு மகன் அறிவு" என்ற பொன்மொழிக்கு ஏற்ப மணிவிழா நாயகன் தேவமனோகரன் அவர்களும் தன் தந்தை முயற்சியால் கல்வியில் உயர்ந்து B.A., PGDE, MED, MA, PGDEM SLEAS, சைவப்புலவர் முதலான உயர்பட்டங்களைப் பெற்றவர். பெற்ற கல்விக்கேற்ப ஆரம்பத்தில் தனியார் கம்பனி முகாமையாளராகவும், ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும், முதன்மை ஆசிரியராகவும், உதவி அதிபராகவம், உதவிக்கல்விப்பணிப்பாளராகவும் உயர்ந்த சேவை செய்து நிறைவில் தன் சொந்தப் பிரதேசமான வலிகாமத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பலர் போற்றக் கல்விப்பணி செய்து கல்விச் சாதனையாளனாகக் காணப்படுகின்றார்.

கல்விப் புலத்துக்கு அப்பால் சைவப்புலவர் சங்கத் தேர்வுச் செயலாளராகவும், உளவள வழிகாட்டல் ஆலோசகராகவும், தலைசிறந்த சொற்பொழிவாளராகவும், கட்டுரையாளராகவும், சமூகத்தில் சிறந்து நிற்கின்றார்.

பன்முகக் கல்வி அறிவுபெற்றுப்
பன்முகப் பணிகள் பலசெய்து
தனக்கும் பிறர்க்கும் பயன்படவாழும்
மணிவிழா நாயகன் தேவமனோகரன் அவர்கள்
சகல செல்வ யோகம் மிக்க
பெருவாழ்வு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

*கலாபூஷணம் சைவப்புலவர்*
**சு. செல்லத்துரை**
ஓய்வுநிலை அதிபர், இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உயர்திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின் மணிவிழாவிற்கு தலைமை தாங்குவதிலும் வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எமது கிராமத்தவரான அவர் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி கல்வியுலகிற்கு பெரும் பணியாற்றியமையை நாம் நன்கறிவோம். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்பையும் பட்டப்பின் படிப்பையும் நிறைவு செய்து இன்று கல்வி தொடர்பான பல பட்டங்களுக்கு சொந்தக்காரராக அவர் வலம் வருவது எமக்குப் பெருமை தருகின்றது. எவரது மனதையும் புண்படுத்தாது கல்விச் சேவையாற்றிய ஒரு கல்விப் பணிப்பாளர் எனக் கூறக்கூடிய தகுதி இவருக்கு மட்டுமே உண்டு எனக் கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

உயர்திரு. சு. தேவமனோகரன் அவர்கள் என்றுமே நேர்கணியச் சிந்தனை கொண்ட கல்விப் பணிப்பாளர் ஆவார். இதன் காரணமாகவே மக்கள் மனதைக் கவரக்கூடிய மனித நேயம் அவரிடம் குடிகொண்டிருந்தது பிரச்சனைகளை அக்கறையுடன் செவிமடுத்துத் தீர்த்து வைக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது. என்றுமே சிரித்த முகத்துடன் பிரச்சினைகளை அணுகும் அவரது சுபாவம் கல்வியாளர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது என்று கூறினால் ஐயமில்லை.

உயர்திரு. சு. தேவமனோகரன் அவர்கள் யாழ் மாவட்டத்தில் மட்டுமல்லாது வெளி மாவட்டங்களிலும் பணியாற்றியதன் காரணமாக கல்விச் சமூகம் எதிர்நோக்கக் கூடிய எல்லா வகையான சவால்களையும் நன்கறிந்தவராக இருந்தார். இதன் காரணமாகவே மக்கள் மனம் கவர்ந்த கல்விப் பணிப்பாளராக அவரால் பரிணமிக்க முடிந்துள்ளது. எமது கிராமத்திற்கு பெருமை தேடித்தந்த உயர்திரு. சு. தேவமனோகரன் அவர்கள் இன்னமும் இளமைத்துடிப்புடன் பணியாற்றக் கூடிய ஆளுமை கொண்டவராக இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இதன் காரணமாகவே அவரது கல்விப் பணி அவர் இளைப்பாறியதன் பின்னரும் தொடர வேண்டுமென நாம் விரும்புகின்றோம். அதற்கேற்ப இறைவன் அவருக்கு நல்ல உடலாரோக்கியத்துடன் நீண்டகாலம் குடும்பத்தினருடன் வாழ அருள் செய்ய வேண்டுமென இறைஞ்சி அவருக்கான வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க வளமுடன் என வாழ்த்தும்

*பேராசிரியர்* **க. தேவராஜா**
தலைவர், சுற்றுலாப் பணியகம், வடமாகாணம்,
முன்னாள் பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரும் உலகும் கூடி வாழ்த்தும் நிகழ்வு



திருமிகு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரனது பணி நிறைவையொட்டி நடத்தப்படும் விழாவிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

திரு. தேவமனோகரன் அவர்கள் நான் படித்த பாடசாலைகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்விகற்று இன்று கல்வி நிருவாக சேவையாளராக உயர்ந்து பணி நிறைவுறுவது எனக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

இந்த இடத்தில் எமது ஊரவரின் பெருங்குணம் நினைத்து நான் மகிழ்ச்சி கொள்கின்றேன். தமது ஊர்ப்பிறந்தான் அடைந்த உயர்ச்சியில் அவர்கள் கொண்ட பெருமித உணர்ச்சியின் வெளிப்பாடாகவே இதனைக் கருதுகிறேன். நமது ஊரில் கல்வி நிருவாக சேவையாளர் பலர் இருந்துள்ளனர். அவருள் தலையாய பதவி வகித்தவர். அமரர் இ. சுந்தரலிங்கம். அந்த வழியில் திரு. சு. தேவமனோகரனும் இலங்கை கல்வி நிர்வாக சேவை III கல்வித்துறைப் பணியில் உயர்ந்து இன்று சேவை நிறைவு கொள்கிறார். இவர்களது வரலாறும் உயர்வும் நமது இளைஞர்களுக்குப்பாடமாகவும் முன்மாதிரியுமாக அமையவேண்டும். என விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் படித்த காலத்தில் இணுவிலில் இருந்து நாங்கள் சேர்ந்து போய் வருவோம். அது மிக மகிழ்ச்சியான காலம் திரு. சு. தேவமனோகரன் திரு. நந்தகுமார், திரு. ப. நவேர்திரன் போன்றவர்கள் “பொலிஸ் கடேற்” பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தனது நண்பர்கள் உறவினர்களுக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுத்தவர் மற்றவர்களும் முன்னேற்றமடைய வழிகாட்டிய பெருந்தன்மை கொண்டவர். திரு. சு. தேவமனோகரனின் ஓய்வுக் காலம் பயன்மிக்கதாகவும், பெறுமதிமிக்கதாகவும் அமைய எனது வாழ்த்துக்கள்.

*கலாநிதி.* **வல்லிபுரம் மகேஸ்வரன்**
தமிழ்ப் பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
அதிதிப் பேராசிரியர்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கசீலமுள்ள விடாமுயற்சியாளர்



அகவை அறுபதை அறுவடை செய்து அரசசேவையிலிருந்து ஓய்வு நிலை அடைந்திருக்கும் திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி அளிப்பதில் அக நிறை மகிழ்வுறுகின்றேன்.

கல்விப்பணி என்பது வாழ்நாளில் ஒருவருக்கு வாய்க்கின்ற வளம்நிறை வரப்பிரசாதமாகும். அதனோடு அண்மித்த கல்வி அதிகாரிக்குரிய செயற்பாடுகளும் சேர்ந்திருப்பின், அவை கிடைத்தற்கரிய அரும்பேறுகளுமாகும். இதுபோன்ற கல்விச் செயற்பாடுகளுடன், தனது வாழ்நாளின் பெரும்பகுதியை ஒன்றிணைத்துக் கொண்டிருக்கும் சு. தேவமனோகரன் அவர்கள் தம் பெயரின் உள்ளார்ந்த அர்த்தத்திற்கு அமையச் செயற்படும் நிலைப்பாடுகளும் ஏற்றிப்போற்றி, பதிந்து பகிர்ந்து பாராட்பட வேண்டியனவாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் நான் கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய அற்றை நாள் முதல் இற்றை நாள் வரை இவர் என்னுடன் நெருங்கிய தொடர்புடையவராகவுள்ள ஒருவர். திருகோணமலை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கல்விச் சேவைகளைச் செவ்வனே செய்து சிறப்புறு பெருமை பெற்றவர்.

இவரிடத்துக் காணப்பட்ட விடாமுயற்சி சமூகநல முன்னேற்றப் பணிகள் நல்லொழுக்க விழுமியங்கள் - அவை சார்ந்த பழக்கவழக்கங்கள் குறிப்பிட்டுக் கூறவேண்டிய நற்பண்புகளாகும் இற்றைவரை இயன்றளவு அனைத்துத் தரப்பினரிடத்தும் அன்பசார் இன்முகத்துடன் பயனுறு வகையில் பணியாற்றி முன்னேறியவர். கடமை கண்ணியத்தன்மையும், கட்டுப்பாடுணர்வும், கல்விப் பகிர்முனைவும் இவரது செயற்பாடுகளுக்கு மெருகூட்டி மேனிலைப்படுத்துகின்றன. பன்முக ஆளுமை வெளிப்பாடும். முகாதைத்துவத் திறனும், சிறந்த செயற்படு தன்மையும் கொண்டமைந்த இவர், பல்தரப்பினரிடத்தும் பரவலாகச் செல்வாக்குப் பெற்றுத் தன் நல்நிலைப்பாட்டைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தி ளெல்லாத முளன்"

எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய மதிக்கப்படுபவர். இவரது அரசபணி ஓய்வுறு நிலை அடைந்தாலும், கல்வி, சமூகப் பணிகள் மேலும் தொடர்ந்து, பரவலாக்கம் பெற வேண்டுமென்பது என் எதிர்பார்பாகும். உடல் பலமும், உள நலமும் ஒருங்கே அமைந்து எல்லாம்வல்ல இறைவன் அருளாசியுடன் இனிய குடும்பச் சூழலுடன் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் நலவ்வாழ்வு வாழ இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**செ. அழகரெத்தினம்**
ஓய்வுநிலை பீடாதிபதி, வவுனியா தே.க.கல்லூரி
29/2, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திரு,சுவாமிநாதபிள்ளை-தேவமனோகரன் அவர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெறும் இந்த வேளையில் வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு அவரைப்பற்றிய செய்தியையும்,வாழ்த்தையும் எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நான் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி விவேகாநந்தா மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த வேளையில் 06.07.1989 அன்று பட்டதாரி உதவி ஆசிரியராகத் தனது கடமையை ஏற்றுக்கொண்டார். இதுவே அவரது முதல் நியமமும் ஆகும்.

நம் முன்னோர்கள் ஒரு நல்லாசிரியரிடம் எத்தகைய நல்ல பண்புகள் இருக்க வேண்டும் என்று கூறி வைத்தார்களோ, அத்தனை நல்ல பண்புகளையும் இவர் கொண்டிருந்தமையை இங்கு நான் விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். எமது பாடசாலை திருகோணமலை நகரத்தில் இருந்து இருபத்தொரு மைல்கள் தூரத்தில் அமைந்திருந்தது. உரிய நேரத்தில் பாடசாலைக்கு வந்து சேர்ந்து விடுவார்.

சக ஆசிரியர்களுடனும்,மாணவர்களுடனும் இனிமையாகப் பழகும் சுபாவத்தைக் கொண்டிருந்தமையால் ஆசிரியர்களும்,மாணவர்களும் இவர் மீது அளவு கடந்த மரியாதை வைத்திருந்தனர். மாணவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்கள் ஒழக்கவிழமியப் பண்புகளைச் சொல்லிக் கொடுப்பதுடன் தானும் அவ்வாறு நடந்து காட்டியமை ஏனையயோரிலிருந்து அவரை வேறுபடுத்தி உயர்வாக மேலோங்கச் செய்தது. நியமனம் பெற்று வந்து எம்முடன் சகல வழிகளிலும் ஒத்துழைத்து விளையாட்டுப்போட்டி பரீட்சைகள் பொது நிகழ்வுகள் அனைத்திலும் தானாக முன்வந்து ஈடுபாடு காட்டியமை அன்றே இவர் ஒரு உயர்பதவிக்கு வருவாரென்பதை உணர்ந்து கொள்ள வைத்தது. காலச்சூழ்நிலை,நெருக்கடிகள் ஏற்பட்டதால் நாம் இடம் பெயர வேண்டி ஏற்பட்டது.

நான்வவுனியாவிற்குச்சென்றேன்எனதுபதவிஉயர்ந்ததுகல்விப்பணிப்பாளாரகினேன். சு.தேவமனோகரன் திருகோணமலையில் பெருந்தெரு விக்னேஸ்வர வித்தியாலயத்திலும் மெதடிஸ்த பெண்கள் கலிலூரியிலும் கடமையாற்றினார். திருமணம் கைகூடவே மனைவி கண்டியில் ஆசிரியையாகக் கடமையாற்றிமையால் அங்கு சென்று செய்த சேவையின் பயனாக ஆசிரிய ஆலோசகராகவும் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் உயர்ந்தார்.இன்று பெரிய வலயமாகிய வலிகாம கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக உயர்நிலைக்கு வந்துள்ளார்.

திரு.சு.தேவமனோகரன் அவர்கள் நான் வவுனியாவில் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுவதை அறிந்து தொலைபேசியில் உரையாடுவார். நட்பினை மறக்காத நல்ல சீலன் இவரது தாயார் இறந்த வேளையிலும் (23.09.2018) பத்திரிகையில் செய்தியை அறிந்து துயர்பகிர்ந்து கொண்டேன். அதிக சகோதரங்களுடன் பிறந்த இவர் அவர்களின் முன்னேற்றத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அவர்களை உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் மாண்புற வைத்தார். பெற்றோர் மூத்தோரைப் பேணுவதில் அதிக அக்கறையுடையவர். இவர் மேலும் பல காலம் சிறப்போடு வாழ வாழ்த்துகின்றேன்.

**ஆசைப்பிள்ளை-பொன்னையா J.P. SLEAS**

ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர்-வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Retirement is (Happy) Wonderful



Mr. S. Devamanoharan assumed duty as an office of Sri Lanka Education service Class 111 in Teldeniya Education Zone on 23.07.2007 .He was assigned duty as the Assistant Director of Tamil Medium Section. In addition to that he gave his fullest support to the planning section of the zone from 23.07.2007 to 13.01.2013 .He is a driven ,and organized officer who developed inspiring relationship with the principals .Teachers & students in all the fourteen tamil medium schools. He gained a good competency in all the three languages within a short period of time. He was able to hold a friendly relationship with Sinhala medium schools as well as with the staff in the zonal office. His dedication ,hard work and commitment has enable to uplift the attitudes of the tamil medium school community and I adore his his service done to the zone. May the triple gem bless him.

**S.N.Weerasundara**
*Deputy Director of Education (Development)*
*Zonal Education Office*
*Teldeniya.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற பாரதியாரின் வரிகளுக்கிணங்க, உயரிய கல்விப் புலத்திலே முப்பது ஆண்டுகள் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக செவ்வனே கடமையாற்றி பணி ஒய்வு பெறும் திருவாளர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வலிகாமம் கல்வி வலயத்தில் அவர் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்திலே கடந்த மூன்று ஆண்டுகள் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. தனிப்பட்டதும், தொழில் ரீதியானதுமான பல்வேறு இடர் நிலைகளில் அனைவருக்கும் நல்ல ஆலோசகராகவும் வழிகாட்டடியாகவும் விளங்கிய அவரது ஆளுமைப் பண்புகளை இந்நாட்களில் உணரக் கூடியதாக இருந்தது. எப்போதும் இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்று அனுசரித்துப் பழகும் பண்பு எல்லோரிடத்திலும் காண்பது அரிது. வலயத்தின் அதிபர்கள் ஆசிரியர்கள், தன் கீழுள்ள உத்தியோகத்தர்கள் அனைவரையும் தன் ஆளுமைதிறத்தினால் வழிநடத்தி கருமமாற்றிய பண்பாளன். திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக வலிகாமம் வலயத்தில் ஆறு ஆண்டுகள் கடமையாற்றியது மட்டுமல்லாது சில காலம் நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பதில் கடமையாற்றியிருந்தார்.

மேலும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பணிகளிலும் நீண்ட காலம் பிரதம மதிப்பீட்டாளராக கடமையாற்றியுள்ளார்.

சிறந்த பேச்சாற்றலும், வர்ணணைத் திறனும் கொண்டு வலயத்தின் பல்வேறு நிகழ்வுகளை கலகலப்பூட்டியவர் நகைச்சுவையாக கனதியான விடயங்களையும் எல்லோரது கவனத்திற்கும் கொண்டு செல்வதில் வல்லவராக திகழ்ந்தார். அத்துடன் சிறந்த குடும்பத் தலைவராக விளங்கி தான் பெற்ற மக்களையும் நல் வழிப்படுத்தியுள்ளார். இவ்வாறாக பல்துறை ஆற்றலும் பண்பும் மிக்க ஒருவரது மணிவிழா நேரத்தில் அவரை வாழ்த்துவதில் அக மகிழ்வடைகின்றேன். ஒய்வு காலததிலும் அவரது பணிகள் சிறக்கவும், அவரும் அவரது குடும்பமும் நீடூழி வாழவும் வாழ்த்துகின்றேன்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" - (திருக்குறள்)

**ந. காண்டீபன்**

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
வலிகாமம் வலயக் கல்வி பணிமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மணிவிழாக் காணும் மறக்க முடியாத மனோசேர் கம்பீர நடையும், கணீரென்ற குரலுடனும் வேலைத் திறனுடனும், வலிகாம வலயத்தின் பிரசாரப் பீரங்கியாய், திட்டமிடும் அதிகாரியாய் பல வகிபாகங்களுடன் வலம் வந்த எங்கள் தேவமனோகரன் சேர். திருமலை - குச்சவெளி தொடங்கி கண்டி இராஜவல வழியாக தெல்தெனியாவை ஊடறுத்து பல சந்து பொந்துகளைக் கடந்து வலிகாமம் வந்து மணிவிழாவுடன் தன் இனிய சேவையை நிறைவு செய்கின்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாடனத்தில் ஒலித்த குரல் இங்கும் ஓங்கி ஒலித்திருக்கின்றது. அனுமார் வால் போல் நீளுகின்றது. பக்திக்கும் மனப் பாட்டுக்கும் பெயர் போன இணுவில் பெரும் பகுதியில் தோன்றி பல நகர் வலம் வந்து அப்புனித பூமியிலே மணிவிழாக்காணும் பெரும் பேற்றைப் பெற்றவர்.

சிறந்த முதிர்ச்சி பெற்ற கல்விச் சேவையானரை கேவ நிறைவுடன் பிரிவது மிகவும் கஸ்டமாக இருந்தாலும் இவரை மனதார வாழ்த்தி வணங்குகின்றோன்.

**த. மாதவன்**
கோட்டக்கல்வி அதிகாரி,
உடுவில் கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழா நாயகனின் பதிவுகள்...














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மணிவிழா நாயகர் உயர் திரு. சு. தேவமனோகரன் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆரம்ப கால நண்பராவார். ஆசிரியராக சேவைக்கால ஆலோசகராக பணியாற்றிய போது இலங்கை கல்வி நிருவாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து. கண்டி மாவட்டததில் சேவையாற்றினார். இடமாற்றம் பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இணுவிலில் கல்வி நிருவாக சேவையை அலங்கரித்த பெருமை இவரைச் சாரும் தமிழ், ஆங்கிலம், சிங்களம் போன்ற மும்மொழி வித்தகராக திகழ்ந்தமையால் கல்வி உலகில் புதுமுத்திரை பதித்தார். சிறந்த நகைச்சுவை கலந்த பேச்சாற்றல் மிக்கவர், இலகுவில் கோபப்படாமல் செயலாற்றும் திறமையும், எதையும் கேட்டு ஆலோசனை வழங்கும் ஆற்றலும் கொண்டவர் இவரின் துணைவியார் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். மகள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பீட மாணவியாகவும், மகன் உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றும் உள்ளார் தனிப்பட்ட வாழ்விலும் உயர்வு கண்ட பெருந்தலைவராவார் எதிர்காலத்திலும் எல்லாச் சிறப்பும் பெற வாழ்த்துகின்றேன்.

**க. சண்முககுலகுமாரன்**
*MED. B.A. PGDE Sc. Trd.*
ஓய்வு நிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர், *S.L.P.S-1*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



அகவை அறுபது கண்டு கல்வி நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு. சு. தேவமனோகரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

காரியாலயம் என்பது கற்றாங்கு ஒழுகச் செய்கின்ற இடம் "திருவருள் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம் மருவு பல்கலையின் சோதி வல்லமை என்பதெல்லாம் வருவது ஞானத்தாலே" என்பது பாரதியாரின் கருத்து. ஞானம் உண்டானால் வாழ்வில் எல்லா நலன்களும் தானாகக் கைகூடும். இதற்கு இலக்கணமாய் இணுவையூர் இராசமணி சுவாமிநாத பிள்ளை ஈன்றெடுத்த தீரரே நம் ஆசான் தேவமனோகரன் அவர்கள் விளங்கு கலை நிறைந்த இணுவையூரின் சைவ மகாஜன பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார் இடைநிலைக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கலைப் பட்டதாரியானார்.

"அன்ன யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" எனும் மகாகவி பாரதியாரின் வாக்கிற்கு இணங்க ஆசிரிய சேவையாற்ற 1989 இல் தன்னை இணைத்துக் கொண்டார். வாண்மைத்துவமும் பெற முதுகல்வி மாணி, முதுகலைமாணி ஆகிய கற்கை நெறிகளை கற்றுக் கொண்டார். தனது அயராத முயற்சியினால் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்தி உதவிக்கல்விப் பணிப்பாளராக. பிரதிக்கல்விப் பணிப்பாளராக நல்லதோர் வீணை நலங்கெடாது பார் பயனுற வாழ்ந்த பெருமைக்குரிய பேசாப் பொருள். நாவன்மையால் என்றும் இன்பம் பெருக்கும் இயல்பினார் அனைவரையும் ஈர்த்து நின்ற பெருந்தகை. சைவப்புலவர், வானொலி அறிவிப்பாளர், நகைச்சுவைப் பேச்சாளர் எனத் தன் முகங்களையும் இனங்காட்டியவர்.

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு" - தமிழ்மறை இவ்வாக்கிற்குச் சான்றாய் சைவ சமயப்பணி, கல்விப் பணி, சமூகப்பணி, அறப்பணி ஆற்றியவர். " அறிவும் அடக்கமும் அன்பும் உடனே" என்ற திருமந்திர வாக்கிற்கு இணங்க திகழ்ந்து நற்சேவையாற்றிய நல்லாசானின் ஓய்வுக் காலம் நலனுற வாழ்த்தி வணங்குகின்றேன்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

**மா. ஆனந்தகுமார்**
கோட்டக்கல்வி அலுவலகம், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்,
மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து




திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களை வலிகாமம் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னரே நான் அறிவேன். அன்பாகவும் பண்பாகவும் பழகும் ஆற்றல் மிக்கவர். தமிழ்ப்புலமையாளர் வேடம் பூண்டு அவர் பேசும் போது அவரை நயந்து ரசித்திருக்கின்றேன். நகைச்சுவையுடனும், பாடல்வரிகளுடனும் தான் சொல்ல வந்த விடயத்தை நாசூக்காக எம் காதில் நுழைக்கும் வல்லமை கொண்டவர். முக்கிய கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியாத நிலையிலும் நடந்தவற்றைப் பக்குவமாகக் கேட்டறிந்து கொள்ளும் திறமை மிக்கவர். வலயப் பாடாசலைகளின் நிலையறிந்து பணியாற்றக்கூடியவர். அவருடன் முரண்படுபவர்கள் யாருமிலர் என்றே கூறலாம். அதிகாரியாக அன்றி நண்பனாகவே பழகும் தனிப்பெரும் குணம் கொண்ட மாமனிதனாகவே அவரை நான் காண்கின்றேன். பெற வேண்டிய தகவல்களை இன்சொல்லுடன் கூடிய கட்டளையாக உரைத்து விடயத்தை முடிக்கும் திட்டமிடல் பணிப்பாளராக அவரை கருத முடியும். இத்தகைய பல்வேறு நற்பண்புகளுடன் பழகிய இவர் ஓய்வுபெற வேண்டியது காலத்தின் கட்டளை என்பதை உணர்வோம். இவரின் ஓய்வுகாலம் சிறக்க இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. சூ. நோபேட் உதயகுமார்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவன்மை படைத்தோன் நன்றாய் வாழ்க



சூரியனை மழைமுகில் மறைத்தாலும் அதன் ஒளி அதற்கூடாகவும் பிரகாசிக்கும் இதேபோல் சைவப்புலவர் சு.தேவமனோகரன் எங்கு நின்றாலும் எத்தனை சபை கூட்டத்தில் நின்றாலும் பிரகாசிப்பவர். யான் 2004ம் ஆண்டு கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு சைவசமய பாட செயலமர்வுக்கு சென்ற வேளை அங்கிருந்தவர்களில் ஒருபெரியவர் எழுந்து கணீர் என்ற குரலுடன் உரையாற்றினார். அன்று முதல் இவரை யான் அறிந்து கொண்டேன். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தேன் என்றவுடக் முகமலர்ச்சியோடு எம்மை வரவேற்றுயானும் வலிகாமம் வலயத்திற்கு அண்மையிலேயே வாழ்ந்தேன் என்பதை தெரிவித்தார். மேலும் நான் ஒரு சைவப்புலவர் என்றதும் தானும் சைவப்புலவரே என்று தெரிவித்தார். அன்று தொட்டு சைவப்புலவர் சு. தேவமனோகரனின் நட்பு வளர்ந்தது. ஆண்டுதோறும் இச்சந்திப்பு நடை பெற்று வந்தது.

2010ம் ஆண்டு அகில இலங்கை சைவப்புலவர் சங்க பொன் விழாவில் யான் செயலாளராக இருந்து நடத்திய காலத்தில் இவரின் தொடர்பு வலுப் பெற்றது. பின் 2013ம் ஆண்டு எமது வலிகாமம் கல்வி வலயத்திற்கு திட்டமிடல் பிரதிப்பணிப்பாளராக வருகை தந்தமை எனக்கு மிக மகிழ்ச்சியைத் தந்தது.

உயர்ந்த தோற்றம், புன்சிரிப்பு, நேர்கொண்ட பார்வை எதற்கும் அஞ்சாத நெஞ்சம் யாருடனும் துணிவாகப் பேசும், பழகும் மனம் கருத்துக்களை நயம்பட முன்வைக்கும் ஆற்றல் என எல்லாவற்றிற்கும் மேலாக நாவலர் போன்று சிறந்த நாவன்மை படைத்தவர் எல்லோருடனும் இனிமையாகப் பழகக்கூடியவர் ஒரு கருத்தை சிறப்பாக முன்னிலைப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்.

ஒரு முறை வலயக்கல்வி அலுவலகத்தில் உலக வங்கி அதிகாரிகள் எமது வலயக்கல்விச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வந்த வேளையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எனமும் மொழிகளிலும் வேண்டிய தகவல்களையும் கருத்துக்களையும் மிகவும் சுவாரஸ்யமாக முன்வைத்தமை என்னை மட்டுமின்றிப் பலரையும் வியக்க வைத்தது.

எமது சைவசமய பாட செயலமர்வுகளிற்கு வருகை தந்து ஆசிரியர்களுக்கு பல கருத்துக்களை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றினால் போல எடுத்துக்கூறி மனதில் பதியவைப்பது மட்டுமின்றி ஆசிரிய சேவையை அவர்கள் சிறப்பாகச் செய்ய பாரட்டுதல்களையும் செய்து வலுவூட்டுவார்.

வலயக்கல்வி அலுவலகங்களில் நடைபெறும் கூட்டங்கள் விழாக்களில் எடுத்துக் காட்டான பாடல் வரிகளும் அவர்களுடனும் சான்றோர் மேற்கோள்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகவே பேசும் ஆற்றல் எல்லோரையும் சிரிக்க வைக்கும் அவரது ஆற்றலுக்கு அளவே கிடையாது.

இத்தகு திறமை படைத்த சைவப்புலவர் சு.தேவமனோகரன் அவர்களை எமது சைவப்புலவர் சங்கத்தில் இணைத்து பரீட்சை செயலாளராக நியமித்த காலத்தில் பரீட்சைகள், மதிப்பீடு, பட்டமளிப்புக்களை சிறப்பாக நடத்தியவர். பட்டமளிப்பு விழாக்களில் சரியாக உதவி செய்வதில் முன்னிற்பார். சுவாரசியமாகப் பேசி பசு மரத்தாணிபோல கருத்துக்களை முன்வைத்தமை இன்றும் எம்காதில் ஒலிக்கின்றது.

மேலும் எழுத்துத்துறையில் நன்கு பிரகாசித்தவர் நல்லைக்குமரன் மலர்கள் சைவநாதம் மலர்களில் பலகோணங்களில் நல்ல கருத்துக்களை எழுதியுள்ளார்கள். பத்திரிகைகளிலும் மாணவர்களுக்கு வழிகாட்டக்கூடிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்வாறு பல்துறை ஆற்றல் கொண்ட ஒருவர் திட்டமிடல் கல்விப் பணிப்பாளராக இருந்து சேவையாற்றி இன்று ஓய்வு பெற்றுள்ளார்கள்.

இனிவருங்காலங்களில் சுதந்திரமாக சைவத்திற்கும், தழிழுக்கும் நற்பணியாற்றுவது சுலபமானது.என நம்புகின்றேன். பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே என்ற வள்ளுவர் குறளுக்குத் தொழிற்பட்ட பெருந்தகையாளர். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் கொள்ளப்படும் எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய நாமிருவர் நமக்கிருவர் என மகள் மாதுமை மருத்துவபீட மாணவியாக நான்காம் வருடததில் கற்று வருகின்றார். மகன் ஜெயபவன் பல்கலைக்கழக கல்வியை எதிர் நோக்கியுள்ளார் என்பது அவரின் நல்ல குணத்திற்கும் சேவைக்கும் கிடைத்த பரிசாகும். இத்தகு பெரியாரின் எதிர்காலம் சிறப்பாக அமைய என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோன்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலங்களில் ஓம் தொலைக்காட்சியில் 26 தினங்களும் வர்ணனைகளைச் செய்யும் வேளையில் திரு. சு. தேவமனோகரனவர்களுமை இடையிடையே வருகை தருவார் ஒலிவாங்கியைக் கொடுத்தவுடன் இனிமையான குரலில் எடுத்துக்காட்டுக்களுடன் நன்கு வர்ணனை செய்வார்கள் மேலும் எனது புத்தூர் கன்னியர் வைரவர் ஆலயத்திற்கு சொற்பொழிவுக்கு அழைத்த போது பத்துநாள் சொற்பொழிவாளர்களில் முதலிடத்தைப் பெற்றவர் சு. தேவமனோகரன்.

*சைவச் சொற் பொழிவாளர்*
*சைவசித்தாந்த பண்டிதர் சைவப்புலவர்*
**செ. கந்தசத்தியதாசன் J.P.**
M.A.B.A. (Hons) PGDE Sc. Trd.
ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்.
சைவப்பிரசார அமைச்சர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நாம் எமது வாழ்நாளில் பலருடன் பழகுகின்றோம் எம்முடன் பழகிய பலர் மிகக் குறைவான காலமே தொடர்பில் இருக்கின்றனர். எனினும் சைவப்புலவர் உயர்திரு. சு. தேவமனோகரன் அவர்களுடனான தொடர்பு மிக நீண்டதாகும். அந்த வகையில் எனக்கும் அவருக்குமான நட்பு 1994 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பமாகியது எனலாம் நாம் அப்போது யாழப்பாண பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா முழுநேர பாட நெறியை ஒன்றாகத் தொடரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அக்காலப் பகுதியிலேயே எமக்கிடையேயான நட்பு ஏற்பட்டது. பின்னர் அவர் திருணம் முடித்தது. எனது உறவினர் ஒருவருடன் படித்தவர் என்பதால் எமக்கிடையேயான தொடர்பு நீடித்தது.

நான் தொடர்ந்து மத்திய மாகாணத்தில் இருந்தேன். திரு. சு. தேவமனோகரன் அவர்களுக்கு திருகோணமலையிலிருந்து மத்திய மாகாணம் கண்டி இராஜவல தமிழ்த்தேசிய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்து சேவையாற்றியதனால் எமக்கிடையேயான நட்பு தொடர்ந்தது எனலாம்.

கண்டிப்பகுதியில் இருவரும் சேவையாற்றிக் கொண்டிருந்த 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டப்படிப்பினை ஒன்றாகத் தொடரக்கூடிய வாய்ப்பு இருவருக்கும் ஏற்பட்டதால் எமது நட்பு மேலும் நெருக்கமடைந்தது. இக்காலப் பகுதியில் அவர்ஆசிரிய ஆலோசகர் உதவிக்கல்விப் பணிப்பாளர் என பல பதவி உயர்வுகளையும் பெற்றிருந்தார். எமது நட்பு தொடர்ந்து கொண்டிருந்தது.

2011 ஆம் ஆண்டு நான் வலிகாமம் கல்வி வலய பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்து சேவையாற்றிக் கொண்டிருந்தபோது அவரும் 2013 ஆம் ஆண்டு வலிகாமம் கல்வி வலயத்துக்கு திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று வந்து தனது சேவையைத் தொடர்ந்தார் இருவரும் ஒரே வலயத்தில் சேவையாற்றியதால் எமக்கிடையேயான நட்பு இன்னும் நெருக்கமாகியது. வலிகாமம் கல்வி வலயத்தில் அவர் எனக்கு ஒரு உயரதிகாரியாக இருந்த போதும் என்னுடன் மிக நட்பாகவே பழகுவார். தான் ஒரு உயரதிகாரியாக என்றும் நடந்து கொண்டதில்லை. பாடசாலை மேற்பார்வையை முடித்துக் கொண்டு புறப்படும் சந்தர்ப்பங்களில் என்னுடன் பல தனிப்பட்ட விடயங்கள் பற்றி நட்புடன் கலந்துரையாடிய பின்னரே செல்வார் இவரின் உயர்வான குணம் மற்றும் கள்ளம்கபடமற்ற உள்ளம் எல்லோருக்கும் அமைவதில்லை. இவரின் நல்ல உயர்வான எண்ணம் போலவே இவரின் பிள்ளைகளும் கல்வியில் உயர்நிலையில் உள்ளனர்.

இவர் தனது ஒய்வுக் காலத்தில் தனது குடும்பத்துடன் மிகச் சிறப்பான முறையில் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

**க. ஜெகதீஸ்வரன்**

ஆசிரியர், யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



'நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்
பண்புபா ராட்டும் உலகு'

முப்பது வருடங்களாக கல்வி உலகிலே பணியாற்றி ஓய்வு பெறவுள்ள வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதி கல்விப் பணிப்பாளராகிய சைவப்புலவர் உயர் திரு சு.தேவமனோகரன் அவர்கள் தமது சேவைக்காலத்தில் திறம்பட செயலாற்றிய ஒருவராவர். ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக சேவையாற்றியுள்ள இவர் நீதியையும் அறத்தையும் போற்றி பிறருக்கும், தமக்கும் பயன்படும் வண்ணம் சேவையாற்றிய ஒருவராவார்.

'கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி' என்ற ஔவையின் கூற்றை நிலைநாட்டிய ஒருவர். இவர் **2006** ஆம் ஆண்டு முதல் எமது பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சி திட்டத்தின் கண்டி பிராந்திய கற்கை நிலைய வருகைதரு விரிவுரையாளராகவும், கற்பித்தல் பயிற்சி நெறியினை மதிப்பீடு செய்யும் முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றிய பின் இடமாற்றலாகி யாழ்ப்பாணம் வருகைதந்து எமது யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் கடந்த **2013** ஆம் ஆண்டு தொடக்கம் கற்பித்தல் பயிற்சிநெறியினை மதிப்பீடு செய்யும் முதன்மையாசிரியராக இன்றுவரை கடமையாற்றி வருகின்றார்.

மனிதநேயம் நிறைந்த இவரது ஓய்வுக் காலமானது குறையா செல்வம் அன்போடு, கூடும் சுற்றம் நிலை பெற்று, மனதில் நிறைவு அடைந்திங்கே நலமாய் வாழ வாழ்த்துகின்றேன்.

**கி. கந்தவேள்**
பிராந்திய உதவிப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண பிராந்திய நிலையம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிரேக்க அறிஞர் டயோஜினஸ், பட்டப் பகலில் விளக்கை ஏந்திய வண்ணம் உண்மையான மனிதனைத் தேடினாராம். இன்று யாராவது அவர் போல் தேடிச் சென்றால் நிச்சயமாக தேவமனோகரன் சேர் அவர்களைக் கண்டுகொள்வார்.

அவருடைய பெயருக்கேற்ப தெய்வீகமான வாழ்க்கையை வாழ்ந்தவர் அவர். கண்டி மாவட்டத்தில் வத்துகாம கல்விக காரியால யத்தில் அவருடன் ஆசிரிய ஆலோசகராக நானும் பணியாற்ற நேர்ந்த போதே நாம் நெருங்கிப் பழகத் தொடங்கினோம். நான் ஓய்வு பெற்ற பின்னர், அவர் உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்தமை கண்டு நான் அளவிலா ஆனந்தமடைந்தேன்.

சிங்கள மொழியல் பிரசுரமாகும் கல்விச் சுற்றறிக்கைகளைப் பெற்று, அவற்றைச் சிரமத்துடன் வாசித்தறிந்து கொள்வதுடன் நில்லாது. என்னிடம் காண்பித்து சிரமமான சொற்களுக்கு விளக்கத்தைக் கேட்டறிந்து கொள்ளும் தன்மை தனது தொழிலில் இருந்த ஆழ்ந்த ஈடுபாட்டின் வெளிப்பாடாகவே எனக்குத் தென்பட்டது.

கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கு எம்முடன் பணியாற்றிய பலரும் விண்ணப் பித்திருந்தாலும் அதில் தீவிர கவனஞ் செலுத்தி தன்னைத் தயார்படுத்திக் கொள்வதில் ஈடுபட்டமையாலேயே அதில் அவரால் தேர்ச்சி பெற முடிந்தது.

2018 சாதாரணதரப் பரீட்சையில் திருக்கேதீஸ்வரம் கோவில் அமைந்துள்ள இடத்தை படத்தில் குறிப்பிடக் கேட்கப்பட்டிருந்தது. நான் பாடப்புத்தகங்கள். முகாமைத்துவ நாட்குறிப்பேடுகள் எல்லாவற்றிலும் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. பரீட்சை நடந்த அன்றே நண்பரை தொலைபேசியில் தொடர்புகொண்டு. மன்னாரில் எவ்விடத்தில் குறிக்க வேண்டும் என்று கேட்டறிந்து கொண்டேன். நான் ஓய்வுபெற்று ஒன்பதரை ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் எம்மிருவருக்மிடையிலான கல்வித் தொடர்புகள் நின்று நிலைப்பதற்கு ஒரு சிறு உதாரணமாக இதனை முன் வைக்கின்றேன்.

ஆசிரிய ஆலோசகர்களுக்கு 'மூத்த அண்ணன்' மனப்பாங்கு இருக்கவேண்டும் என்பார்கள். ஆனால் சிலரிடம் இருப்பது 'மாமியார்' மனப்பாங்கு ஆகும். நண்பர் முதல் வகையைச் சேர்ந்தவர் அவருடன் நெருக்கமாவதற்கு அவருடைய இக்குணமே காரணமாயிருந்திருக்கலாம்.

குறிப்பாக குழுப்பரிசீலனைகளுக்கு நாம் ஒன்றாகச் செல்லும் பொழுது, முஸ்லிம் பாடசாலைகளில் சைவ சமய பாடம் இல்லையே என்று ஒதுங்கியிராது, அவர், தமிழ், சமூகக்கல்விப் பாடங்கள் தொடர்பான அவதானிப்புக்களை மேற்கொண்டு, ஆசிரியர்களுக்கு சிறப்பான ஆலோசனைகளை முன்வைப்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நான் அவதானித்துள்ளேன்.

எமது பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள். எல்லா ஆலோசகர்களிடமும் அன்றி, சிலரிடமே பொதுவாகப் பாடசாலையின் நிலை பற்றிக் கேட்டறியும்போது அதில் இவர் கட்டாயம் ஒருவராக இருப்பார். சிலவேளைகளில் அவர் சந்தித்த சில ஆசிரியர்களின் தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளைக்கூட குறிப்பிடும் போது, நான் வியப்படைவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு குறுகிய நேரத்திற்குள் இவரால் இதெல்லாம் எப்படி சாத்தியமாகிறது என்று, ஆசிரியர்கள் பலருக்கும் கல்விக் காரியாலயத்துடனான செயற்பாடுகளில் சிறந்த வழிகாட்டுதலை இவர் முன்வைப்பதை நான் பலமுறை அவதானித்துள்ளேன்.

தனது மோட்டார் சைக்கிளில் மனைவியை உடன் அழைத்துச் செல்வதற்காக மேலதிக ஹெல்மட்டை எப்போதும் வைத்திருப்பார். அப்போதெல்லாம் தான் செல்லும் வழியில் என்னை இறக்கி விட தவறாமல் அழைக்கும் குணம் இவரிடமிருந்தது. மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்ல குணத்திற்கு இது ஓர் உதாரணம் என்பேன்.

எனது ஊரான உடத்தலவின்னை. ஜாமியுள் அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு வரநேரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் எனது வீட்டிற்கு வந்து மகள்மார் இருவரையும் பார்த்து நலம் விசாரித்துச் செல்லும் பண்பை இவர் ஒருவரிடம் மட்டுமே நான் அவதானித்துள்ளேன். அவசரமான சந்தர்ப்பம் என்றாலும் வீட்டினுள் வராமல் மகள்மாரை வெளியே கூப்பிட்டு இரண்டு வார்த்தை கதைத்துவிட்டே செல்வார். இதனை நல்லதொரு தந்தையின் மனோபாவத்தின் வெளிப்பாடாகவே நான் பார்க்கின்றேன்.

எனது மேலதிக நேர வகுப்புக்களுக்கு இவருடைய மகள் செல்வி தே. மாதுமை வந்து கற்றார். இது எம்மிருவரினதும் உறவை மீளப் புதுப்பித்துக்கொள்ளக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பமாகவே அமைந்தது. இன்று மகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 4 ஆம் வருட மாணவியாக வைத்தியத்துறையில் கற்கிறார் அவருடைய மகன் செல்வன் தே. ஐயபவன் இம்முறை உயர்தரக் கணிதப் பிரிவில் மூன்று A சித்திகளைப் பெற்ற செய்தியை அறிந்து நான் அக மகிழ்ந்தேன். தினை விதைத்தவர்கள் தினையை அறுவடை செய்வது போன்று, அவருடைய கற்பித்தல் பணிக்கு கடவுள் அளித்த பிரதிபலனாகவே நான் இவற்றைக் கருதுகிறேன்.

எந்த ஆண் ஒருவரின் வெற்றிக்குப் பின்னாலும் பெண் ஒருவர் இருப்பது தவிர்க்க முடியாததொன்று. அவருடைய துணைவியார் திருமதி தே. துஷ்யந்தி அவர்கள் நிச்சயமாக அப்படி அமைந்திருப்பார் என்பது எனது நம்பிக்கை. எமது வலயத்துக்கு வெளியே உள்ள கண்டியின் புகழ்பூத்த புனித அந்தோனியார் கல்லூரியில் அவர் கற்பித்தார். ஆகையால் தனிப்பட்ட முறையில் அவரைப் பற்றிக் குறிப்பிட இயலாமைக்கு வருந்துகிறேன்.

"இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் இயற்கையின் அருட்கொடைகள் அனைத்திற்குமாக, இறைவனுக்கு செலுத்தும் வாடகையே ஏனைய மனிதர்களுக்குச் செய்யும் சேவை யாகும்" என்ற பெரியோர் வாக்கிற்கேற்ப நிறைவான சேவைபுரிந்த அன்பு நண்பர் அவர்களினதும் அவரது குடும்பத்தாரினதும் நலத்திற்கும் நல் வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் நிறை விற்கும் பிரார்த்திக்கிறேன்; பிரார்த்தித்துக்கொண்டிருப்பேன்.

9047(P)

**U.L.M. பஷீர்**

வரலாற்றுப்பாட ஆசிரிய ஆலோசகர், (ஓய்வுநிலை)

உடத்தலவின்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# எல்லோரும் நலம் வாழ வழி காட்டுபவர்



நல்லிணுவைப் பதியில் சீர் சிறப்போடு நல்ல குடும்பத்தில் பிறந்து வாழ்ந்த திரு. சு. தேவமனோகரன் பல திறமைகள் கொண்டவர் பல்வேறுபட்ட தொழில் ரீதியான பெருமைகளையம் கொண்டவர். வெளிமாவட்டங்களில் சேவையாற்றியவர் யாருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டவர் கிடைக்கின்ற பணியைத் திறமையாகச் செய்யும் ஆற்றல் கொண்டவர்.

நாவற்குழியைச் சேர்ந்த திரு. செல்லையா குமாரசாமி அவர்கள் வெளியிட்ட நூல் வெளியீட்டு விழாக்களில் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். வாழ்த்துரை வழங்கியுள்ளார். நூலாய்வு செய்துள்ளார். சைவசமய சமூகப் பணிகள் செய்வதில் ஆர்வம் மிக்கவர். பிறருக்கு உதவி செய்வதில் பெரு விருப்புடையவர். அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தோடு இணைந்து சைவப்பணிகள் ஆற்றி வருகின்றார்.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்டவர் திருமணத்தில் எம்முடன் இணைந்து கொண்டவர். தானும் தன்பாடும் என்று இருக்காமல் எம்முடன் சகல வழிகளிலும் ஒன்றாகச் செயற்பட்டவர் குடும்பத்தில் உள்ள அனைவரையும் ஒன்றிணைத்து மதிப்பாகவும் மரியாதையாகவும் வாழந்தவர். உதவி செய்தல், வழிகாட்டல் ஆலோசனை கூறல் பண்பாடாக நடத்தல் சமய விழுமியப் பண்புகளுடன் மனிதநேயம் மிக்கவராகச் செயற்பட்டவர் இத்தகு சிறப்புக்களைக் கொண்டவர் தனியார், கூட்டுத்தாபன, அரச துறைகளில் பல்வேறுபட்ட நிலைகளில் சிறந்த பணியாற்றி ஓய்வு பெறுகிறார் கற்றபடி ஒழுகிய பெருமைக்குரியவர். விழா சிறக்க விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். எல்லோரும் இன்புற்றிருக்க வாழ்த்துகிறேன்.

**பொன்னம்பலம் சுப்பையா**

ஓய்வுபெற்ற அதிபர் J.P,

நாவற்குழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்திகம் உளவள நிறுவனப் பயிற்சியின் போது...



யாழ் பல்கலைக்கழக MED கற்கை ஆரம்ப விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திரு. சு. தேவமனோகரன் அவர்களை மட்டக்களப்பில் வசித்து வந்த காலத்திலிருந்து நான் அறிவேன் 1978 - 1988 வரை எனது வீட்டுக்கு அருகில் தன் தாய்மாமனாரோடு வசித்து குபேரன் ஏஜன்சியில், மாமனாரது வியாபாரம் சிறக்க உதவியவர். தாய்மாமனது குபேரன் ஏஜன்சீஸ் தனியான ஒரு நிறுவனம் இதனைக் கட்டி எழுப்பி மிகச் சிறந்த நிலைக்கு கொண்டுவர இவர் செய்த அர்ப்பணிப்பு அளப்பரியது. வேறு எந்த ஒருவராலும் செய்ய முடியாத அரும்பெரும் செயல்களை இவர் செய்தமையை மட்டக்களப்பு மக்கள் அறிவர். நாமும் பக்கத்திலிருந்த படியால் நேரடியாகவே கண்டோம். பலனை எதிர்பாராத இவரது கடமை உணர்வே அந்த நிறுவனத்தை உயர்தியமைக்கும் இன்று இவரே சிறந்த திட்டமிடல் பணிப்பாளராக விளங்கியமைக்குமான சான்றாகும். மட்டக்களப்பு மக்களோடு பழகிய பண்பு பாராட்டுதற்குரியது.

இளமையிலே எதிர்காலம் சிறக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை நோக்கமாகக் கொண்டு கடின உழைப்பில் ஈடுபட்ட இவர் கடவுள் பக்தி, பிறரோடு அன்பாகவும் பண்பாகவும் பழகும் பண்பு, புத்திக்கூர்மை, முயற்சி ஆகிய பண்புகளில் சிறந்து விளங்கினார் படி முறையாக பட்டதாரியாகி, பின்னர் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். க.பொ.த (சா.த) விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியில் பிரதம பரீட்சகராகவும், க.பொ.த (உ.த) விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் மேலதிக பிரதம பரிட்சகராகவும் ஈடுபட்டவர் ஆசிரியராகி பணிபுரிந்த பின் ஆசிரிய ஆலோசகராகவும் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் வளர்ச்சிக்குப் பங்காற்றியதைக் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்தேன். எல்லோருடனும் கண்ணியமாகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் சு. தேவமனோகரன் அவர்கள் 09.02.2019 அன்று தனது மணிவிழாவைச் சிறப்பிக்கும் நேரத்தில் கடந்த கால அவரது சேவையைத் திறம்பட ஆற்ற உதவிபுரிந்த இறைவனுக்கு நன்றி கூறுவதோடு அவரது சேவையைப் பாராட்டி தொடர்ந்தும் தனது குடும்பத்துடன் நற்சுகம் நீண்ட ஆயுள் பெற்று வாழ இறையாசியை இறைஞ்சி நிற்கின்றேன். இவரது வாழ்வியல் எமக்கும் ஒரு வாழிகாட்டியாக அமைகின்றது.

**ஜோ. பிலோமின்**
மட்/ வலயக் கல்விப் பணிமனை,
சேவைக்கால ஆலோசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Retirement is wonderful



I have been blessed to write about our Deputy Director (Planning) who I had known for many years. He took many roles in his career, not only as a Deputy Director, but also as a counselor, facilitator, father and a good friend. He is a simple and humble person who always had a smile on his face.

I'm very much proud to say that he hails from my home town Inuvil , which is situated in the centre of Jaffna Peninsula .Inuvil enjoys salubrious climate with very good water .The people of this village always led a very peaceful life , and he himself had a successful life in his mother land. He was brought up and taught in a Hindu atmosphere .Therefore he had his early education at Inuvil Central College and Secondary education at Jaffna Hindu College .He entered Peradeniya University and completed Bachelors degree and enrolled himself for his Postgraduate Diploma in Education at University of Jaffna. Then he was selected for Master of Education programme and completed in 2003.

His role as a Deputy Director is entirely different from that of his predecessors, not only looked after the administrative aspect but also the welfare of the co-workers and students .He maintain excellent public relation and successful administration. He is a man of great courage, strength and tactful qualities which allowed him to stand in this position .He also maintains friendly rapport with the teachers who play a vital role in a school. His reward is to be found in the hearts of every individual who are most loyal and grateful for their enjoyable day they spent at Valikamam Zone .He is a versatile genius in his varied activities.

In spite of his many responsibilities and commitments at the Department he always made time for his wife Thushanthi and children Mathumai and Jayabaawan. In his sixty years here, he has been a mentor to all of us. He has taken this department to the leading edge. I thank you for all you have done and all you have taught us and send my very best wishes for a happy retirement.

I pray that God continues to grant you sound health, mercy and blessings. And may you find life after retirement a happy moment with endless sweet memories.

**Miss. Jayanthi Vaithilingam**
*Master Trainer Valikamam Zone*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை உணர்வு கொண்ட சித்தப்பா...



"தோன்றிப்புகலொடு தோன்றுக அன்றில்
தோன்றலித் தோன்றாமை நன்று"

என்ற பெரியோர் வார்த்தையில் தனக்கென ஓர் இடம் பிடித்துக் கொண்டவர் என் சித்தப்பா திரு. சு. தேவமனோகரன் அவரது மணிவிழா ஆண்டிலே அவரை வாழ்த்தும் வாய்ப்பு பெறாமகள் என்ற ரீதியில் எனக்கு கிடைத்ததை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பலர் இந்நூலின் ஊடாக சித்தப்பாவின் சேவைப் பணிகளைப் பற்றி எழுதி உள்ளார்கள். நான் அதற்கு சற்றுமாறாக சித்தப்பா குடும்பம் மீது கொண்ட கடமை உணர்வு தொடர்பாக சில வரி எழுதலாம் என எண்ணுகின்றேன்.

எமது அப்பாவின் குடும்பம் ஓர் பரந்து விரிந்த சிறு கிராமம். அப்பாவோடு சேர்ந்து பத்து சகோதரங்கள் சித்தப்பா உட்பட கூட்டுக்குடும்பமாக மிக எளிமையான குடும்பமாக வாழ்ந்தவர்கள் அப்பாவின் சகோதர்கள் கல்வி அறிவு அனைவருக்கும் போதிய அளவு இருந்து அதனை பயன்படுத்தும் அளவிற்கு பொருளாதாரச் சூழல் இருக்கவில்லை. இருந்தும் இவர்கள்.

"தெய்வத்தால் ஆகாதது என்றனிலும் - அவர்
மெய்வருந்தக் கூலிதரும்" என்பதாகும்.

என்பதற்கு இணங்க தந்தையின் கமத்தொழிலில் ஈடுபட்டார்கள் கற்றலையும் தொடர்ந் தார்கள். அந்த வகையில் சித்தப்பா தனது தாய் மாமனோடும் கூட கடைகளில் நின்ற காலங்கள் உண்டு. இருப்பினும் கல்வி மீது இருந்த நாட்டம் சித்தப்பாவைப் பற்றிக் கொண்டது. ஆசானாகினார். தொடர்ந்து பல பதவிகளைப் பெற்றார் உயர்ந்தார். சிகரம் தொட்டார். இன்று வலிகாம வலயத்திலேயே கல்வித் திட்டமிடல் அதிகாரியாக உள்ளார். இவரது இந்நநிலை வறுமை ஓர் தடை அல்ல கற்பதற்கு என்பதைக் காட்டி நிற்கின்றது.

அண்மைக்காலங்களில் அப்பம்மா நோய்வாய்ப்பட்டிருந்த காலம் சித்தப்பா அப்பம்மாவோடு இருந்து அப்பம்மாவை பராமரித்த விடயம் தொடர்பாக அருகில் இருந்து பார்த்தவன் நான் என்ன நேரம் அப்பம்மா எனக்கு முடியாமல் கிடக்கடா தம்பி என்றவுடன் நேரத்தைக் கூட கவனிக்காது இப்ப வரட்டே அம்மா வைத்தியசாலைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக என்று கேட்ட அந்த விடயம் என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. தன் உடல் நலத்தினை கருதாது தாயின் உடல் நலத்திற்காக மிகப் பாரிய கடமைகளை செய்தார்.

எனது தந்தை இல்லாத சந்தர்ப்பத்தில் சில கற்றல் வழிகாட்டங்களை வழங்கியதோடு எனது கற்றலுக்கான ஆலோசனைகள் வழங்கியதோடு மட்டும் அல்லாது அடிக்கடி கற்றல், கற்பித்தல் தொடர்பாக என்னோடு கலந்தாலோசித்தமை எனக்கு சில சந்தர்ப்பங்களில் மன உறுதியைத் தந்தது.

அவரது கற்றல் போன்றே அவரது புதல்வர்களுக்கும் உரிய கடமைகளை நிறைவேற்றி அவரது மகளை மருத்துவ பீடத்திற்கும் தனது மகனை பொறியியற் பீடத்திற்கும் மேற்படிப்பைக் கற்பதற்கு வழிவகுத்துள்ளார்.

உற்றார் உறவினரைப் பேணுவதில் மூத்தோரைப் பராமரிப்பதில் வயோதிப நினையில் இருப்பவர்களுக்கு ஆறுதல் கூறுவதில் சித்தப்பா தனித்துவம் வாய்ந்தவராக விளங்குகிறார்.

தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வதில் அக்கறை உடையவராகத் திகழ்கிறார். தனது சகோதரர்களை முன்னேற்றமடைய தனது இயலும் தன்மைக்கேற்ப முயற்சி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் கரிசனையுடன் செயற்பட்டவர்.

மணிவிழா ஆண்டிலே சித்தப்பாவை வாழ்த்துவதோடு தனது அண்ணைக்கு உரிய உரிமைகளை எமக்கு தந்ததை இட்டு மகிழ்கின்றேன். மேலும் எந்தக் குறைகளும் இல்லாமல் நோய் நொடிகள் இன்றி நீண்ட காலம் வாழ எங்கள் கருணாகரப் பிள்ளையார் துணை கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**R. சாமந்தி**
பெறாமகள், இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னவரே வாழியவே!



மால்போலும் உருவினரே! மதிபோலும் முகத்தினரே!
ஆல்போலும் உறவினரே! அமுதமொழி ஞானியரே!
வேல்போலும் விழியினரே! விலகாத அன்பினரே!
பலநூறு நிலாக்கண்டு பண்புடையீர் வாழியவே!

மனிதருள் மாணிக்கமே! மாண்புறு பணியாளரே!
புனிதருள் புண்ணியனே! பூவுலகின் கண்ணியரே!
இனிமையில் இமயமே! இடர்களை பதிகமே!
ஏணியாய் உழைத்தவரே! என்றென்றும் வாழியவே!

தேசியப் பரீட்சைகளின் தேசிய வீரனானீரே!
வீசிய தென்றலென விரும்பியுற வாடினீரே!
பேசிய வார்த்தையெலாம் பெரும்சிரிப் பாக்கினீரே!
ஆசிய ஜோதியென அகிலம்போற்ற வாழியவே!

அன்னை யோர் ஆலயமென அடிக்கடி யுரைத்தீரே!
பின்னவர் பெற்றபேறு பெரிதெனச் செப்பினீரே!
மன்னவர் சூழ்திரிபோல் மனங்கவர் உறவுகண்டீரே!
கண்ணவர் கருணைபொழி மன்னவரே! வாழியவே!

மேடைகள் பலகண்டீர் மேதினியில் புகழ்சேர்த்தீரே!
ஓடையில் தெளிநீர்போல் உரைகள் பல செய்தீரே!
தேடலில் எறும்பெனவே! செய்திகள் பல சொன்னீரே!
கோடை நிழல் போன்றவரே! கோடிநாள்கள் வாழியவே!

*சைவப்புலவர்* **திரு. ந. புகன்ஸ்ரீந்திரன்**
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வலிகாமம் வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராக திட்டமிடல் பிரிவில் உன்னதமான சேவையாற்றி இளைப்பாறுகின்ற திரு. மிகு சுவாமிநாதபிள்ளை தேவனோகரன் அவர்களது மணிவிழாவை யொட்டி வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சமயப்பற்றுக் கொண்ட இவர் சிறந்த பேச்சாளருமாவார். இவரது தன்னார்ந்த திறமையினால் ஆசிரியப்பணியை மிகச் சிறப்பாகச் செய்து ஆசிரிய அலோசகராகவும் சேவையாற்றி கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையினூடாக பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார்.

வலிகாமம் வலயத்தில் நீண்ட காலமாக திட்டமிடல் துறையில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து, எல்லாப் பாடசாலை அதிபர்களதும் உள்ளத்தில் நிறைந்துள்ளார்.

அகவை அறுபதைப் பூர்த்தி செய்து சேவையில் இருந்து இளைப்பாறும் திருமிகு. சு. தேவமனோகரன் அவர்கள் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடனும், தகது குடுபம்பத்தாருடனும் இனிதே மகிழ்வுடன் வாழ வேண்டும் என வாழ்த்தி நிறைவு செய்கின்றோன்.

**துரைசிங்கம்**
அதிபர், யாழ்/இணுவில் மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டித் திருத்திய பண்பாளன்



வலிகாமம் வலயத்தில் ஐந்தாண்டுமுத்திட்டம் தயாரிப்பதற்கு அதிபர்கள் எல்லோரும் திகைத்'து நிற்க திட்டமிடல் பண்ப்பாளரும் திட்டிக் கொண்டு தலைமீது வைத்துச் சுமக்கும் பெரும்பாரமாக திட்டமிடல் காணப்பட்ட காலத்தில் புதிதாக வந்தவர் தான தேவமனோகரன் என்கிற தெய்வப்பிறவி.

இவர் பிழைகளை சுட்டிக்காட்டி கூறுவது என்பது கிடையாது. நதங்கள் செயடத நல்ல விடயங்களை பாரட்டுவோர் சிலர் இப்படி செய்திருக்கிறார்கள். சிலர் அதை திருத்திக் கொள்ளுங்கள் செய்தவர்கள் தாருங்கள் செய்யாதவர்கள் செய்து தருவிர்கள் தானே? இதை கொஞ்சம் விரைவாக செய்து தந்தீர்கள் என்றால் நல்லது, நீங்கள் நல்ல உற்சாகமாக இருக்கிறீர்கள் பல திறமையானவர்கள் இருக்கிறீர்கள் அதை வெள்ப்படுத்தினால் போதும் துணிந்து செயற்பாடுங்கள், நான் உங்களுக்கு துணை புரிவேன். இவர் இப்படி நம்பும் போது தான் எப்படிச் செய்வது என்று சிந்தித்து பல பாடசாலைகள் நல்ல முறையில் ஐந்தாண்டுத் திட்டங்களை செய்தன. செய்தவர்களை பாராட்டி மகிழ்வித்தார்.

மேற்பார்வைக்கு பாடசாலைக்கு வந்தால் குறைகளை கண்டுபிடித்து அவற்றை பெரிதுபடுத்தி கூறுவது தான் வழமையில் நடக்கும். மேற்பார்வை குழு வந்தால் அந்த மேற்பார்வைக் குழுவிற்கும் பாடசாலைக்குமிடையில் நல்லுறவு வருவது சாத்தியப்பற்றதே. அனால் இவர் வந்தல் வருகிற குழுவிற்கும் இவருடய இயல்பு வந்துவிடும். பாடசாலையில் உள்ள சிறியநல்ல விடயங்களை கண்டுபிடித்து பெரிதாக பாராட்டுவார்கள். ஆசிரியகள் மகிழும் படி பேசிவிட்டு குறைகளைஎவ்வாறு திருத்தலாம் என்பதையும் கூறி திருத்துவீர்களாக இருந்தால் எதிர்காலத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள் இது உங்களுக்கும் எங்களுக்கும் நல்லது என்று சொல்லி நிறைவு செய்வார்.

வலிகாமம் வலயத்தில் மேற்பார்வை நல்ல முறையில் நடைபெறுவதற்கு இவரது பண்புதான் ஏனையவர்களை மாற்றி அமைத்ததோ என்று எண்ணும் வகையில் இவர் வருவதற்கு முன் மேற்பார்வைகள் நடைபெறுவதற்கு பின்னர் நடைபெறுவதற்கும் பாரிய வித்தியாசம் தெரிந்தது. இவல்களின் மேற்பார்வையின் பின் ஏதேனும் விழாவந்தால் ஆசிரியர்களிடம் யாரை அழைப்போம் என்று கேட்டால் தேவமனோகரன் சேரையே அழைப்போம் என்பார். இவளவிற்கு ஆசிரியர் மனங்களை கவர்ந்து விடுவார். அவரை அழைத்தால் ஆசிரியர்களை அதிபரை பாடசாலை சமூகத்தின் முன்னிலையில் புழந்து கூறுவார். அதே வேளை அதிபர் ஆசிரியர்கள் திருத்த வேண்டும் என்ற விடயங்களையும் நாசூக்காகச் சொல்லி விடுவார். இன் சொல் பேசியே என் இதயம் கவர்ந்த இவர்போல் வேறொருவரில்லை. அவரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோன்.

*சைவப்புலவர்.* **செ.பரமேஸ்வரன்**

அதிபர்

யாழ்/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



முன்திட்டமிடலிற்கு முன் உதாரணமானவர் எமது வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள்.

திருக்கோணேசர் கோயில் கொண்ட திருகோணமலையில் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்து மத்திய மாகாணத்தின் வத்தேகம கல்வி வலயத்தில் இரஜவெல தேசியப்பாடசாலை ஆசிரியராக உப அதிபராகவும், வத்தேகம கல்வி வலயத்தின் நிருவாக சேவையில் இணைந்து வத்தேகம கல்வி வலயத்தின் பதவி உயர்வு பெற்று இன்று வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளரான சேவையாற்றி தனது 30 வருட கால கல்விப் புல சேவையை நிறைவு செய்து இன்று ஓய்வு பெறும் திருவாளர் சுவாமிநாத பிள்ளை தேவமனோகரன் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க கல்விச் சேவையை பாராட்டுவதில் மனமகிழ்வடைகின்றோம்.

கல்விப் புலத்தில் இவரது சேவையானது பாடசாலைக் கல்வியில் மட்டுமல்ல சைவசமயச் சொற்பொழிவுகள் வானொலி நிகழ்ச்சிகள் ஒழுங்கமைத்தல் மற்றும் ஆசிரியர் பயிற்சிகள் போன்றவற்றை ஒழுங்கமைத்து பல கல்வியலாளல்களை உருவாக்கியுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் மத்திய மாகாண ஆசிரியர்களின் ஆசிரியர் பயிற்சி தேசிய கல்வி நிறுவனத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ழேபாது அதில் தனது ஆளுமையை பிரயோகித்து சிறந்த அணியினரை உருவாக்கியவர் அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு பகுதிநேர விரிவுரையாளராக கடமையாற்றி தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

அத்துடனந் தனது பரீட்சித்தல் மற்றும் மதிப்பீடு அனுபவத்தில் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் க.பொ.த (உ/த), (சா/த) மாணவர்களிற்கு சைவசமய பாட கருத்தரங்குகளை மத்திய மாகாணத்தின் பல பகுதிகளிலும் சிறப்பாக ஒழுங்கமைத்து மாணவர்களிற்கு சிறப்பான சேவையாற்றியுள்ளனர்.

அத்துடன் தனது விடா முயற்சியாலும் தனது சிறந்த தொடர்பாடல் திறனாலும் பல்வேறு சிக்கலான விடயங்களையும் இலகுவாக கையாலும் வல்லமை படைத்தவர் அவர் தனது முயற்சியினால் தனது இருபிள்ளைகளையும் மருத்துவராகவும், பொறியியலாளராகவும் உருவாக்கியுள்ளார்.

எந்த சூழ்நிலையையும் தனது நிர்வாகத்திற்கு சாதகமாகக் கொள்ளும் வல்லமை படைத்த எமது பிழரதிக்கல்விப் பணிப்பாளர் அவர்வகள் தனக்கென ஒர் தனித்துவமான முகாமைத்துவ திறனை கொண்டு தனது 30 வருட கல்விச் சேவையில் சிறப்பாக சேவையாற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் உயர்திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்கள் எல்லாம்வல்ல இறைவன் அருளால் தனது ஓய்வுக் காலத்தில் சிறப்பாக அவரது மனைவி பிள்ளைகளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. மே. இந்திரபாலா**

பிரதி அதிபர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் சரிதம்

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் சேவையாற்றிய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் **திரு.சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்**
(B.A., PGDE, M.E.D, M.A, PGDEM, SLEAS II)




யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கில் சுவாமிநாதபிள்ளை இராசமணி தம்பதிகளின் மூன்றாவது புத்திரனாக 09.02.1959 ஆம் ஆண்டு தேவமனோகரன் பிறந்தார். 4 பெண் சகோதரிகளோடும் 5 ஆண் சகோதரர்களோடும் அன்போடும் பாசத்தோடும் ஒற்றுமையாகப் பழகி வாழ்ந்து வந்தார்.

இணுவிலில் பிறந்த தேவமனோகரன் தற்போதைய இணுவில் மத்திய கல்லூரியான இணுவில் அ.மி.த.க பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும் இணுவில் சைவமகாஜனா வித்தியாலயத்தில் சாதாரண தரம் வரையும் கற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தரம் கற்று பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் B.A, M.A, PGDE MED ஆகிய பட்டங்களைப் பெற்றவர். கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் (NIE) P.G.D.E.M பட்டத்தையும் பெற்றார். 1978 ஆம் ஆண்டுமுதல் தாய்மாமனின் குபேரன் ஏஜென்சி தனியார் நிறுவனத்தில் முகாமையாளராகப் பணியாற்றினார் பின்னர் அரச உத்தியோகம் விரும்பி திருகோணமலை குச்சவெளி விவேகானந்த மகா வித்தியாலயத்தில் 1989 முதல் ஆசிரியராக நியமனம் பெற்று பணியாற்றியவர். திருமணத்தின் பின் கண்டி திகண ரஜவல தமிழ்த் தேசிய கல்லூரியில் 1995 இலிருந்து ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் பணியாற்றினார். 2000 ஆம் ஆண்டில் சைவசமய பாட ஆசிரிய ஆலோசகராக வத்தேகம, தெல்தெனியா, கடுகஸ் தோட்ட வலயங்களில் பணியாற்றினார். 2006 ஆம் ஆண்டில் நடந்த போட்டிப் பரீட்சைகளில் அதிபராகவும், அதேவேளை கல்வி நிர்வாக சேவைக்கும் SLEAS தெரிவு செய்யப்பட்டார். அதிபர் பதவியை பெறாமல் கல்வி நிர்வாக சேவைக்குரிய பதவியை பெற்றுக் கொண்டார். 2007 ஆம் ஆண்டு முதல் தெல்தெனிய வலயக்கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர். 2013 ஆம் ஆண்டிலிருந்து மருதனார்மடம் வலிகாமம் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1995ம் ஆண்டு நாவற்குழி சுப்பையா தவமணிதேவி தம்பதியினரின் புத்திரி துஷ்யந்தியை திருமணம் செய்து மாதுமை, ஜயபவன் ஆகிய இருபிள்ளைகளைப் பெற்றெடுத்தார். விஞ்ஞான பட்டதாரி ஆசிரியையான திருமதி. தே. துஷ்யந்தி தற்போது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் உயரியல் பாட ஆசிரியராகப் பணி புரிகின்றார். மகள் மாதுமை கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட 3ம்வருட மாணவியாகக்கற்று வருகின்றார். மகன் ஜெயபவன் க.பொ.த உயர்தரம் கற்று தேறி 3A பெறுபேறு பெற்று பல்கலைகழக பொறியியல் பீட அனுமதியை எதிர்பார்த் திருக்கின்றார்.

ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் சிறந்த ஆசிரியராகவும் பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கவனம் செலுத்தி மாணவர்களை ஊக்கமாகவும், உற்சாகமாகவும் செயற்பட வைத்து க.பொ.த சா/தரம், உ/தரம் வகுப்புகளில் தான் கற்பித்த பாடங்களில் சிறந்த பெறுபேறுகள் பெறவைத்தார். ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் முன்மாதிரியாகவும் சிறந்த ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றி சேவை செய்த வலயப் பாடசாலைகளில் மாணவர்களது விழுமிய பண்புகளை வளர்த்து சிறந்த பெறுபேறுகளைப் பெற வழிகாட்டியதோடு வலயக்கல்விப் பணிப்பாளர் முதல் பலரது பாராட்டுதல்களையும் பெற்றார்.

தெல்தெனியா வலயத்தில் திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய போது தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கும், பொறுப்பாக இருந்து தமிழர் கல்விச் செயற்பாடுகளுக்கும், வளர்ச்சிக்கும் வழி வகுத்தார். 2013 முதல் 2019 ஓய்வு பெறும் காலம் வரை வலிகாமம் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் சிறந்த முறையில் வேலைகளை ஒழுங்கமைத்ததுடன் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

10 வருடங்கள் மட்டக்களப்பில் தனியார் துறையிலும், ஒரு வருடம் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும், 12 வருடங்கள் ஆசிரியராகவும், 6 வருடங்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும், 6 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், 6 வருடங்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றிய காலத்தில் எல்லோருடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழா நாயகனின் பதிவுகள்...



M.A. பட்டமளிப்பு



வின்சொவ்ற் நிகழ்வு



M.A. பட்டமளிப்பு



தி/ விக்னேஸ்வர ம.வி



ரஜவல ம.வி நிகழ்வு



தமிழ் கந்தையா நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாகவும் பண்பாகவும் சேவை மனப்பான்மையுடனும் மற்றவர்களுக்கு உதவுவதில் அக்கறையுள்ளவராகவும் செயற்பட்டார். நேர் மனப்பாங்கு கொண்ட நிலையில் யாரையும் நோகவைக்காத வகையில் வேலைகளைச் செய்விப்பதில் திறமை கொண்டவராக விளங்கினார். சாதாரணமாக தொடர்பு கொள்ளவோ, பிரச்சினை களைக் கதைக்கவோ யாரும் சென்றால் பக்கச் சார் பின்றிய செயற்பாடுகளை அவர் செய்வார்.

நல்ல பேச்சாற்றல் கொண்டவர் சாதாரணமாக கதைக்கும் போது சுவாரசியமாகக் கதைப்பவர். அறிவித் தல்கள் வழங்கும் போது மிகச் சிறந்த ஆளுமையுடன் செயற்பட்டார். கருத்தரங்கு கூட்டங்களில் சிறந்த முறையில் உரையாற்றுபவராகவும் சிறந்த முன்வைப்பாளராகவும் (Presentation) மொழியாற்றலுடன் குரல் வளமுடைய வராகவும் செயற்பட்டார். தமிழ்மொழி ஆற்றலுடன் ஆங்கில, சிங்கள மொழிகளில் உரையாடும் திறன் அவருடைய செயற்பாடுகளுக்கு மேலும் மெருகூட்டியது.



சேவைக்காலத்தில் சுகவீன லீவு பெறாமல், ஏனைய லீவுகள் அதிகம் எடுக்காமல், ஓய்வுக்கு முன்னரான 3 மாதகால லீவு எடுக்காமல் பணியாற்றியமை இவரது சேவை மனப்பான்மைக்குச் சான்றாகிறது. இருக்கின்ற பௌதிக, மனித வளங்களைப் பயன்படுத்திச் சிறந்த சேவையைச் செய்துள்ளார். உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய 4 கோட்டங்களுக்குட்பட்ட 152 பாடசாலைகள் தொடர்பான திட்டமிடலுடன் தொடர்புடைய பணிகளைச் சிறப்பாக ஒழுங்கமைத்துச் செய்துள்ளார்.

வலயக்கல்வி அலுவலகத்தில் வேலை செய்த காலத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகத்திற்குரிய வேலைகளைச் சில மாதங்கள் தனது பணியுடன் சேர்த்துச் செய்தார். சேவைக் காலத்தில் 2000 - 2006 காலப்பகுதிகளில் பகுதிநேர அறிவிப்பாளராக இலங்கை வானொலி மலையக சேவையில் பணியாற்றினார். இதனூடாகக் கல்வித்துறை சார்ந்த விடயங்கள் ஊக்குவிக்கப்பட்டன.

2004 இல் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய தேர்வில் சித்திபெற்று சைவப்புலவராகவும், சைவ சித்தாந்த பண்டிதராகவும் பட்டங்களைப் பெற்றார். 2014 - 2017 காலப்பகுதியில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தேர்வுச் செயலாளராகவும், 2017 முதல் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கல்வி நிறுவகத்தின் இளமாணி கற்கைநெறி (B.ED) கண்டி மத்திய நிலையத்தில் 2006 - 2012 வரை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கற்கை நெறியின் பகுதி நேர விரிவுரையாளராகவும் முதன்மை ஆசிரியராகவும் கண்டி பிராந்திய நிலையத்தில் (2006 - 2012) பணியாற்றினார். பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியிலும் ஈடுபட்டார். க.பொ.த. சாதாரணப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் உதவிப் பரீட்சகராகவும் பிரதம பரீட்சகராகவும் கிட்டத்தட்ட 28 வருடங்கள் பணியாற்றி பரீட்சைத் திணைக்களத்தின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

அரச நிறுவனங்களோடும், பொது அமைப்புக்களோடும் தொடர்பு கொண்டு தனது பிரதேசத்தின் வீதிப் போக்குவரத்து, மின்விளக்குகள் பொருத்துதல் மற்றும் பொதுப் பணிகளிலும் ஈடுபாடு காட்டியவர். பேட்டி காணல், நேர்முகவர்ணனை, கட்டுரைகள் எழுதுதல் போன்ற துறைகளிலும் திறமையாகச் செயற்பட்டவர். பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும், மனைவி மக்களுக்கும், உறவினருக்கும் ஏனையோருக்கும் உதவி ஒத்தாசை வழிகாட்டல் வழங்கி அவர்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டுபவராக இவரது செயற்பாடுகள் அமைந்தன.

கற்ற இடங்களிலும் சேவை செய்த இடங்களிலும் இவரோடு அன்போடு பழகியவர்கள் பலர் அதைவிட தன்துறைசாரா ஏனையோரிடமும் தொடர்பாடலைக் கொண்டிருந்தமை சிறப்பானதாகும். அவர்களில் பேராசிரியர் எஸ். பத்மநாதன், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா, பணிப்பாளர் MYM முஸ்லிம், வழக்கறிஞர் J.P. அன்ரனி, பணிப்பாளர் செ. அழகரத்தினம் போன்றவர்கள் நெருங்கிப் பழகியதுடன் இவரைப் பற்றிய தனித்துவக் குறிப்புக்களையும் பதிவு செய்துள்ளனர்.

☆ "கல்வித் தகைமை உள்ளவர்களிடம் நிர்வாகத்திறைமை குறைவாக இருக்கலாம், நிர்வாகத் திறமை உள்ளவர்களிடம் கல்வித் தகைமை குறைவாக இருக்கலாம் இரண்டும் சேர்ந்தால் பண்பாடு குறையலாம் ஆனால் இவை அனைத்தும் சேர்ந்த சிறந்த குணங்களோடு திரு. தேவமனோகரன் விளங்குகின்றமை மிகச்சிறப்பானது."

☆ "ஒரு விடயத்தைச் செய்யக் கொடுத்தால் மேற்பார்வை இன்றிச் செய்வார். செய்த விடயத்தை செய்து விட்டதாக உறுதிப்படுத்திக் கதைப்பார் இதுவும் தனிப் பெருமையாகும்."

☆ "யாராவது பிழையாக நடந்தால் சுட்டிக் காட்டுவார். சரிவராவிட்டால் சாமபேத, தான, தண்டம் எனப் படிமுறையாக அணுகி உரிய முறையில் செயற்படுவார். அதை உறுதியாகச் செய்து முடிப்பார்."

☆ "வாழ்வில் எதிர்நீச்சலடித்து முன்னேற்றம் கண்டவர்."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ "ஆலோசனை வழங்கல் திட்டமிடல் என்பவை இவரது இயல்பான பண்புகள் இவ்வாறானவருக்கு அதே பணிகள் தொழிலில் கிடைத்தமை மிகப் பொருத்தமானது."

☆ முதியோரைப் பேணல் பெரியோரைக் கணம் பண்ணல் மேலதிகாரிகளுடன் ஒத்துழைத்தல் சகபாடிகளின் கருத்துக்களை கேட்டல் சிறியவர்களை உரிய முறையில் வழிநடத்தல் என்பன இவரது மனிதப்பண்புகளாகும்.

சிறந்த உளவளத்துணையாளரான இவர் உளவளத்துறை நிறுவனமான சாந்திகத்தில் உளவளத்துணை பயிற்சி பெற்று மேலும் சிறந்த உளவளத் துணையாளராகவும் விளங்குகிறார். பொதுப் பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முக்கியமான பணியைகளைச் செய்துள்ளார். இவரது தொடர்ந்த சேவை எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். கல்விச்சிறப்பு, தொழில்சிறப்பு, நிர்வாகச் சிறப்பு, தொடர்பாடல் சிறப்புடன், மனிதப் பண்பு நிறைந்த இவரது பணிகள் மதிப்பிற்குரியவையாகும். இத்தகு பேராளன் மேன்மேலும் பல பணிகளை சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றி சைவத்தமிழர் பண்பாடு வளர்க்க இந்நாளில் மனதாரப் போற்றுகின்றோம். இவற்றைக் கருத்தில் கொண்டே அவரது சிறப்பை உலகம் அறியும் வண்ணம் மணிவிழா நன்நாளில் மணிவிழாக் குழுவினர்கள், பேரறிஞர்கள் முன்னிலையில் "சொல்வேந்தன்" எனும் சிறப்புப் பட்டம் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் B.A, PGDE, MED, MA, PGDEM, SLEAS II அவர்களின் சேவை விபரம்

☆ *1978 - 1988* முகாமையாளர் குபேரன் ஏஜென்சிஸ் (மட்டக்களப்பு)

☆ *1988 - 1989* திட்ட உதவியாளர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தானம்.

☆ *1989 - 1995* ஆசிரியர், பகுதித்தலைவர், உதவி அதிபர் குச்சவெளி விவேகாநந்த வித்தியாலயம். திருகோணமலை.

☆ *1995 - 2000* (ஆசிரியர் - பகுதித்தலைவர்) இரஜவல தமிழ் தேசிய கல்லூரி கண்டி

☆ *2000 - 2007* சைவசமய பாட ஆசிரிய ஆலோசகர் (தெல்தெனியா, வத்தேகம, கடுகஸ் தோட்டை வலயங்கள்)

☆ *2007 - 2013* உதவிக் கல்விப் பணிப்பாளர் திட்டமிடலும், தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கான ஒழுங்கமைப்பும்

☆ *2013 - 2019* திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம், 2017 - 2018 பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் பதில்கடமை. (4 மாதங்கள்)

☆ *2000 - 2006* பகுதிநேர அறிவிப்பாளர் இலங்கை வானொலி மலையக சேவை கண்டி பிராந்திய நிலையம்

☆ *2006 - 2012* (BED, PGDE பாட நெறிகள்) விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் கண்டி மத்திய நிலையம்.

☆ *2014 - 2017* அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தேர்வுச் செயலாளர்.

☆ *2017 - 2018* அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்.

☆ *2017 - 2019* உளவளத்துணை வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்.

**திரு. இ. கணேசானந்தன்**
அதிபர், யா/ இளவாலை மெய்கண்டா ம.வி.
தலைவர், சேவைநலன் பாராட்டு விழாக்குழு.

**திரு. த. சிவகுமார்**
முகாமையாளர்,
ஆசிரிய வளநிலையம், மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் - நவீனத்துவமும் கல்வியும்

பேராசிரியர். சபா. ஜெயராசா



பின்னைப் புதுமைவாதம் என்றும் குறிப்பிடப்படும், மார்க்சியம், உளப்பகுப்புவாதம், இருத்தலியம் முதலாம் அறிவுப் பின்புலங்களைக் கொண்ட பலரின் மாற்று சிந்தனைச் முகிழ்பாக அது அமைந்துள்ளது. அதனை ஒரு கருத்துப் பரவலாக முன்வைத்தார்களே யன்றி ஒரு தனித்த கோட்பாடாக வலியுறுத்தவில்லை.

அவர்கள் முன்வைத்த கருத்துக்களை பின்வருமாறு தொகுக்கலாம்.

அ. பிடிவாதமான ஒருமை நோக்கிலிருந்து விடுபட்டு பன்மை நிலைகளை அங்கீ கரித்தல்

ஆ. மேலாதிக்கம் என்பது ஒன்றுதிரட்டலோடு (TOTALISING) இணைந்தது.

இ. மனிதர் உருவாக்கியவை அனைத்தும் "நூலியம் (TEXT) ஆகும். அவை ஒருவாசிப்பை மட்டும் கொண்டிருக்கும் என அழுத்திக் கூறுதல் மேலாதிக்கச் செயற்பாடாகும்.

ஈ. சொற்கள் நிலைத்த பொருள் கொண்டவையன்று அதனடிப்படையில் சொற்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் கட்டுமானக் குலைப்புக்கு (DECONSTRUCTION) அல்லது தகர்ப்புக்கு உரியவை.

உ. பெரும் தத்துவங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்குரிய பெரும் கதையாடல்கள் (META NARRATIVES) (அதனால் அவர்கள் பின் நவீனத்துவத்தை ஒரு கோட்பாடாக முன்வைக்கவில்லை)

ஊ. உண்மையும் அறநெறியும் சார்புடையவை மனித இயல்புகளுக்கு ஏற்றவாறு அவை வேறுபட்டு நிற்கும் இயல்புடையவை.

எ. ஒதுக்குதலுக்கும் நிராகரிப்புக்கும் உட்பட்ட விளிம்பு நிலையினருக்கும், விளிம்பு நிலைக் கருத்துக்களுக்கும் முக்கியம் தருதல்.

ஏ. ஓர் இலக்கியப்படைப்போ அல்லது வேறெந்தக் கலைப்படைப்போ பிற ஆக்கங்களுடன் தொடர்பு கொண்டோ அவற்றைப் பயன்படுத்தியோ ஆக்கம் பெறும் அது "நூலிய ஊடு தொடர்பு" (INTER TEXTUALITY) என்று குறிப்பிடப்படும்.

ஐ. "அகவயம்", "புறவயம்" என்று கறாராகக் கருத்துக்களை வேறுபடுததிப் பார்த்தல் பொருத்தமற்றது.

ஒ. ஒவ்வொரு பாடமும் ஒவ்வோர் அறிவுப் புலமும் அதற்குரிய மொழிவிளையாட்டைக் (LANGUAGE GAME) கொண்டே நிகழ்த்தப்படுகின்றது.

ஓ. ஒவ்வொரு வரலாற்றுக்கால கட்டத்திலும் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்குரிய கருத்து வினைப்பாடு" (DISCOURSE) உருவாக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நவீனத்துவம் என்பது பரந்துபட்ட சிந்தனை இயக்கம் கலை இலக்கியம், கட்டடக்கலை இசை, ஆடல், சிற்பம், கல்வி, மருத்துவம் அரசியல், திறனாய்வு, முகாமைத் துவம், சட்டம், பெண்ணியம், முதலாம் பல்வேறு துறைகளில் அதன் செல்வாக்கு விரவிப் பரந்துள்ளது. அது நவீனத்துவத்தை (3) மறுதலித்து எழுந்த ஓர் இயக்கம் பழைமைக்கும் புதுமைக்குமிடையே ஒட்டுமை (HYBRID) காணும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

கல்வி என்பது கல்வியியலாளரால் முற்சாய்வுடன் கட்டுமை (CONSTRUCT) செய்யப்படுவதாக பின் நவீனத்துவ வாதிகள் குறிப்பிடுவர். கல்வியில் ஒருமை நோக்கும் ஒரே கலைத்திட்டமும் மேலாதிக்கத்தின் வடிவங்களாகின்றன. மேலாதிக்கமுள்ள பண்பாடே கல்வியில் கோலோச்சும் அவலமான நிலை காணப்படுகின்றது.

பன்மைப் பண்பாடுகள் மாணவரின் பன்மை நிலைகளுக்கு ஏற்றவாறு கல்வியும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். மனித உள்ளமும் தன்னிலையும் சமூகத்தாலே கட்டுமை செய்யப்படுகின்றது. அந்நிலையில் உள்ளார்ந்த திறன் ஒருவருக்கு உண்டென்று கூறமுடியாது. அனைத்துத் திறன்களும் சமூகத்தாற்கட்டுமை செய்யப்பட்டவையே தற்கணிப்பு என்பது கற்றலுக்குரிய அடிப்படை நிபந்தனையாகும். கற்பித்தல் செயற்பாடு ஒருவகைச் சிகிச்சை முறையாகும். அதனூடாக மாணவர் தமது சுய அடையாளத்தைக் கட்டுமை செய்வதற்கு உதவுதல் வேண்டும்.

நனவிலி உள்ளத்தை முதன்மைப்படுத்துதல், கட்டற்ற நிலையில் மிதக்கும் படிமங்களுக்கு முக்கியத்துவம் தருதல், குறித்த பொருள் தொடர்பான பன்முகக் கருத்துக்களைக் கற்பித்தல் முதலியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்படல் வேண்டும்.

ஒற்றைப் பரிமாணத்தில் ஆசிரியர் கற்பித்தலை முன்னெடுக்காது பன்மை முறையியல்களைப் பயன்படுத்துதலைப் பின்நவீனத்துவம் வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு மாணவரையும் தனித்தனி ஆற்றல் கொண்டவர்களாகக் கருத வேண்டுமேயன்றி மீத்திறன் உள்ளவர் மீத்திறன் அற்றவர் என்று வகைப்படுத்துதல் தவறானது.

ஆற்றல் உள்ளவர்/ ஆற்றல் அற்றவர் என்ற இருமை நிலை (BINARY) அணுகு முறையிலிருந்து விடுபடல் வேண்டும். அதிகார நிலைநிறுத்தலுக்கு இருமை நிலை துணை நிற்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. நல்லவர்/ கெட்டவர்/ விவேகி/ அவிவேகி/ திறமையுள்ளவர்/ திறமையற்றவர்/ முதன்மாணாக்கர்/ கடை மாணாக்கர்/ முதலாம் இருமை நிலை எடுப்புக்கள் மேலாதிக நிறுவலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. எமது கல்வி நிலையங்களில் இவ்வாறான இருமை நிலை எடுப்புக்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பின் நவீனத்துவக் கல்வி மானிட வாதத்தை (HUMANISM) நிராகரிக்கின்றது. அனைவருக்கும் பொதுவான மானிட விழுமியங்கள் ஏதும் இல்லை. மரபு வழியான விழுமிய வலியுறுத்தல்கள் ஒடுக்கு முறைக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிலையில் விழுமியக் கல்வி மற்றும் மானிட வாதம் ஆகியவை தொடர்பான மாற்றுக் கருத்தினையே பின் நவீனத்துவ வாதிகள் முன்வைக்கின்றனர்.

பள்ளிக்கூடங்களில் விழுமியங்களைக் கற்பித்தலை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. விழுமியங்கள் அகிலப் பொதுமை கொண்டவையன்று பண்பாட்டுச் சூழலுக்கேற்ப விழுமியங்கள் வேறுபாடு கொள்ளக்கூடியவை. அத்தகைய நடப்பியலில் அனைவருக்கும் பொதுவான விழுமியங்களைக் கற்பித்தல் மேலாதிக்கம் செலுத்துவோரின் திணிப்பு நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கது.

விழுமியங்களில் பிறிதொரு பரிமாணம் ஆண்பாலாருக்குச் சாதகமாக உருவாக்கப்பட்டிருத்தலாகும். அதாவது, பெண்கள் மீது அதிகாரத்தைச் செலுத்துவதற்கு ஏற்புடையதாக அவை சமூகத்தினால் கட்டுமை செய்யப்பட்டுள்ளன.

புறவயநிலை (OBJECTIVITY) என்பதை ஒருமாயைத் தோற்றமாகவே பின் - நவீனத்துவ வாதிகள் கருதுகின்றனர். பண்பாட்டு மேலாதிக்கத்தை கல்வி நிலையில் வலியுறுத்துவதற்குரிய முகமூடியாக அது பயன்படுத்தப்படுகின்றது. புறவயமாக நிரூபிக்கப்பட்ட கருத்து என்று கூறுவதன் வாயிலான, மேலாதிக்கம் நிலை நிறுத்தப்படுகின்றது. ஒடுக்கப்படுவோர் மீது கருத்து நிலை மேலாதிக்கம் செலுத்துவதற்குரிய அறிவாயுதமாக புறவயநிலை என்பது பயன்படுத்தப்படுகின்றது.

காரண (REASON) வழி நிலை நிறுத்தப்பட்டது என்று ஒருகருத்தை முன்வைத்தலும் மேலாதிக்கத்தை வலியுறுத்துவதற்குத்துணை செய்கின்றது. அதுவும் கல்வி நிலையில் பண்பாட்டு மேலாதிக்கத்தைத் திணிப்பதற்குரிய கருவியாகவேயுள்ளது.

மரபுவழியாகக மெய்யியலிலே வலியுறுத்தப்பட்ட கருத்து வடிவங்களை பின் - நவீனத்துவ வாதிகள் தகரத்துள்ளனர். கல்வியில் அத்தகைய முன்மொழிவகள் மரவு வழிக் கல்விச் சிந்தனையாளருக்கு அறைகூவல் விடுப்பனவாய் அமைந்துள்ளன.

புறவய நிலை, காரணநிலை முதலியவற்றை மறுவாசிப்புக்கு உட்படுத்தியமை அவர்கள் முன்னெடுத்த கட்டுமானக் குலைப்புக் கருத்தியலோடு இணைந்தது. மரபு வழிக் கல்வியில் முன்'வைக்கப்பட்ட ஆழ்நிலை உய்ப்பு (TRANSCENDENT) என்பதையும் நிராகரிக்கின்றனர். வரையறுக்கப்பட்ட வரம்புகளையும் கடந்து உன்னதங்களை நோக்கி ஆழ்ந்து செல்லல்," ஆழ்நிலை உய்ப்பு" என்று குறிப்பிடப்படும்.

அதனை எட்டுவதற்கு கல்வியியலாளர் பயன்படுத்தும் மொழியே கேள்விக்குரியது. மொழி என்பது ஒரு சிறைக்கூடம் மாணவர் மொழியால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். மொழியின் ஊசலாட்டத்தையும், சொற்களின் உறுதி குன்றலையும் பின் நவீனத்துவ வாதிகள் விதந்து குறிப்பிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களின் உறுதிகுன்றிய நிலையே ஓர் ஆக்கம் மீதான வாசிப்பைப் பன்முகப்படுத்துகின்றது. பள்ளிக்கூடச் செயற்பாடுகள் வயது அடிப்படையைக் கொண்டிருத்தலையும் பின்னவீனத்துவம் தள்ளுபடி செய்கின்றது. மாணவரை வயது அடிப்படையிலே திரட்டி வகுப்பை உருவாக்குதலும் தவறானது. வயதுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைக் கைவிட்டு மாணவரின் வளர்ச்சிப்படி நிலைகளைக் கொண்ட தனியாள் கற்பித்தலை முன்னெடுத்தலே பொருத்தமானது.

ஒன்றுதிரட்டலைக் கைவிட்டு, சிதறல்களை முக்கியப்படுத்துதல் பின் நவீனத்துவத்தின் கல்வி நோக்கு பின் நவீனத்துவக் கல்வியில் கட்டுமை இயல் (CONSTRUCTIVISM) வலியுறுத்தப்படுகின்றது. மரபு வழிக் கல்வியில் அறிவின் திணிப்பு மீது மேற்கொள்ளப்பட்டது. நவீனத்துவக் கல்வியிலும் திணிப்புக் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. ஆனால் நவீனத்துவத்தில் நிகழ்த்தப்படுவது "நாகரிகமான" திணிப்பு. ஏற்புடைய கல்வியில் மாணவர் தமக்குரிய விளக்கங்களைத் தாமே கட்டுமை செய்து கொள்கின்றனர். தமக்குரிய அறிவைத் தாமே வடிவமைத்துக் கொள்கின்றனர். அந்நிலையில் கூட்டுமொத்தமாக அன்றித் தணித்தனியாக ஒவ்வொரு மாணவரையும் குவியப்படுத்திக் கற்பிக்கும் பொழுதுதான் அது நிறைவு கொண்ட கற்பித்தலாக அமையும்.

பின் நவீனத்துவ வாதிகளின் கல்விச் சிந்தனைகள் சிதறலும் பரவலும் கொண்டவை. அவர்களின் முதன்மையான கருத்து முன்மொழிவுகள் வருமாறு,

அ. லகான் : அறிவும், பண்பாட்டு மொழியியல் தொகுதியும் அகவியமும் (SUBJECTIVITY)

ஆ. பூக்கோ : அறிவும் அதிகாரமும். கருத்து வினைப்பாடும்.

இ. தெரிதா : நூலிய ஊடு தொடர்புகளும் கட்டுமானக் குலைப்பும்

ஈ. லியோதார்த் : பெருங்கதையாடலும், நிகழ்த்துகையும்

மேற்கூறியவற்றை விளக்குவதனால், அறிவுக்கும் சமூக உளமொழியியலுக்குமுள்ள தொடர்புகளை லகான ஆராய்ந்தார். மனித நனவிலி மனம் என்ற ஆழ் மனத்தில் நிகழ்த்தப்படும் மொழி விளையாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார். கருத்துக்கையளிப்பில் குறிப்பான்களே முதன்மை பெறுதலைச் சுட்டிக்காட்டினார்.

பூக்கோ, அதிகாரச் செயற்பாட்டுக்கு அறிவும் கல்வியும் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன என்பதை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் விளக்கினார். ஒவ்வொருகால கட்டத்திலும் மேலாதிக்கத்தை நிறுவும் "அறிவுக்குவியமும்" கருத்து வினைப்பாடும் தொழிற்பட்டமையைச் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட ஒரு நூல், பிற நூல்களின் ஊடு தொடர்புகளால் ஆக்கம் பெறுதலை விளக்கினார், ஒருபனுவலுக்குப்பலவாசிப்புக்கள்உண்டுஎன்பதையும்தெளிவுபடுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் மகளிர் கல்லூரி கட்டடத் திறப்பு விழாவின் போது...




தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கும் பெருங்கதையாடலுக்குமுள்ள தொடர்பை லியோதார்த் தொடர்பு படுத்தினார். பெரும் தத்துவங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்தும் பெருங்கதையாடல்கள் என்பது அவரது முடிவு.

கடந்த நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து தீவிர வளர்ச்சி கொள்ளத் தொடங்கிய பின் - நவீனத்துவ இயக்கம் பல்வேறு திறனாய்வுகளை எதிர் கொண்டது. அவற்றைப்பின் வருமாறு தொகுக்கலாம்.

அ. தத்துவங்கள் எல்லாம் பெருங்கதையாடல்களாயின் பின் நவீனத்துவமும் ஒரு பெருங்கதையாடலே

ஆ. மேலும், ஒடுக்கப்பட்டோரை ஒடுக்கு முறையில் இருந்து விடுவிப்பதற்கான உறுதியான அளவை முறைகளைப் பின் நவீனத்துவம் முன்வைக்கத்தவறிவிட்டது.

இ. சமூக அவலங்களை மேட்டுக்குடியினரின் கண்ணோட்டத்தில் அணுகும் கருத்தியலாகவே அது எழுகோலம் பெற்றுள்ளது. அரசியல் தொடர்பாக விரக்கியடைந்த மத்திய தர வகுப்பினரின் குரலாகவே அது ஒலிக்கின்றது.

ஈ. பின்னைய முதலாளியத்தின் பண்பாட்டு அளவை (CULTURAL LOGIC) என்ற வகையில் அவர்களது எழுத்துக்கள் அமைந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட திறனாய்வுகள் இருப்பினும், அவர்களின் சிந்தனைகள் ஏற்படுத்திய அதிர்வுகள் முக்கியமானவை.

**நோக்கிய நூல்கள்**


Buttler, c. (2002)
Post Modernism, Google Book
Jameson, F. (1999)
The Tuptural Logic of Late
Capitalism, Wikipedia
Terry, Eagleton (1996)
The Ilusion of Post Modernism Google Books
ஜெயராசா. சபா. (2018) அரசியலும் கல்வியும். கொழும்பு: சேமமடு வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிற் கல்வி வளர்ச்சியும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியும் ஒரு கண்ணோட்டம்

**சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், S. தேவமனோகரன்**
*B.A.PGDE, M.A., MEd*
விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம், கண்டி மத்திய நிலையம்

அறிவும் ஆற்றலும் வளர்வதற்கு ஆசிரியர் பணி இன்றியமையாதது. சரியான வழிகாட்டல்களோடு மாணவர்களை அவர்களுடைய திறமைகளைக் கண்ட றிந்து அவர்களைக் கல்வியில் தலை சிறந்தவர்களாக்குவது ஆசிரியர்களின் பணியாகும். குருகுலக்கல்வி முறையில் கற்பித்த காலம் தொடக்கம் வகுப் பறைக் கற்பித்தல் வளம்படுத்தப்பட்ட இன்றைய நவீன தொழில்நுட்ப, தொடர்பாடல் விருத்தியடைந்த காலம்வரை ஆசிரியர்களின் பணி யானது தனித்துவமுடையதாகக் காணப்படுகின்றது. கல்வித்துறையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை நடை முறைப்படுத்தி அவற்றைச் சமுதா யத்தில் எதிரொலிக்கச் செய்பவர்கள் ஆசிரியர்கள்.

இன்று உலகில் சுமார் ஐந்து கோடி ஆசிரியர்கள் உள்ளனர் என்று கணக் கிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு நாடு அவர்கள் ஏற்கும் பாத்திர வகைகள் வேறுபடுகின்றன. இலங்கையில் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்று கின்றனர். ஆசிரியர்கள் வாண்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது முக்கிய மானது. "வாண்மை" என்பது "தொழில்" என்ற எண்ணக்கருவை விட வேறுபட்டது. தனிச்சிறப்பு வாய்ந்த நுண்மதிச் சேவையை வழங்குதல் வாண்மைக்குரிய தனித்துவமாகும். ஆசிரிய வாண்மைக்குரியவர் சமூகத்துக்கு ஆற்றும் தொண்டு மேலானது. சமுதாயச் சிற்பிகளாக இருந்து சமூக மாற்றங்களை பொருத்தமானமுறையில் வழிபடுத்துபவர்கள் ஆசிரியர்கள். சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் தொடர்ச்சியையும் உள்வாங்கும் தொழிற்பாடாகக் கற்பித்தல் பணி விளங்குகின்றது. கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் எண் ஒழுங்கமைப்பு அடிப்படை இலக்கண ஒழுங்கமைப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்த மரபில் வந்தவர்கள் சோக்கிரட்டீஸ் பிளேட்டோ, அரிஸ்ரோட்டல் போன்ற பேராசிரியர்கள். பொருள் உற்பத்தியில் உடல் உழைப்பும் வாய் மொழித் தொடர்புகளும் மேம் பட்டிருந்த நிலையில் கற்பித்தலும் வாய்மொழி வலுவுடையாதாக விளங்கியது.

இலங்கையில் குருசீட முறையில் கற்பித்தல் நடைபெற்றது. மனனம் செய்து அடுத்ததலை முறையினருக்கு கல்வியைக் கையளித்தனர். 1869 ஆம் ஆண்டு பொதுப் போதனைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.இதனாற் பாடசாலை களின் எண்ணிக்கையும் அதிகரித்தன. அதற்கேற்ற ஆசிரியர் தொகை இன்மையால் மாணவர் தலைவர்களை ஆசிரியர்களாக்கும் சட்டாம்பிள்ளை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இது 1929 இல் கைவிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணிகளிலீடுபட்ட சமய நிறவனங்களினால் 1880 இல் ஆசிரியர்களைப் பயிற்சி கொடுக்கும் நோக்கில் பயிற்சிக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1930 களில் டொனமூர் அரசியல் திட்டம் வாக்குரிமை விரிவாக்கல் என்பன ஆசிரியர் கல்வியை விரிவுபடுத்தின. இக்காலப் பகுதியில் 19 சிங்கள, தமிழ் ஆசிரியர் கல்லூரிகள் இருந்தன. இலங்கையில் ஆசிரியர் சம்பளம் 1920 களில் ஏனைய துறைகளை விடக் குறைவாக இருந்தது. சேர்.பொன். இராமநாதன் அவர்களின் முயற்சியால் 1925 இல் புதிய சம்பளத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1927 இல் ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளச் சட்டம்நடைமுறைக்கு வந்தது. 1943 இல் கல்வி தொடர்பான சிறப்புக் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் ஆசிரியர் பயிற்சிக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. கல்வித்தர மேம்பாட்டுக்கு ஆசிரியர் கல்வி மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. 1944 இல் 24 ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் இயங்கின. 1958 இல் இருந்து முழுச்சம்பளத்துடன்பயிற்சி பெறும் வசதிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பல்கலைக்கழகங்கள் வழங்கின. ஆசிரியர் பயிற்சியை வழங்குவதில் பல்கலைக்கழகம், திறந்த பல்கைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், கல்வியியல் கல்லூரிகள் ஈடுபடுகின்றன. இதனால் இலங்கையில் கல்வி அபிவிருத்தி படிப்படியாக ஏற்பட்டு வருகிறது பரீட்சைப் பெறுபேறுகளும் சாதாரண, உயர்தர வகுப்புகளில் அதிகரித்து வருகின்றன.

1869 இல் பொதுப் போதனைத் திணைக்களம் அமைக்கப்பட்டதுடன் இலங்கையின் நவீன கல்வி முறை ஆரம்பமாகியது எனலாம். 1943 இல் கன்னங்கர அறிக்கையின் மூலம் 1945முதல்இலவசக்கல்விஅறிமுகப்படுத்தப்பட்டது. இது இந்தநாட்டிலுள்ளஅனைவரும் கல்வி கற்பதற்கான வழியைஏற்படுத்தியது என்பது யாவருமறிந்த விடயமாகும். 1961, 1964, 1972, 1981 ஆகிய ஆண்டுகளில் கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றுள் 1972 இல் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் முக்கியமானவை. கலைத்திட்ட மாற்றங்கள், ஒன்றிணைந்த கல்வி, தொழில் முன்னிலைப் பாடங்கள், சகலருக்கும் பொதுக்கல்வி போன்றவை இச்சீர்திருத்தத்தில் முக்கியமானவைகள். 1989 இல் ஏற்பட்ட கிளர்சிகளினால் இளைஞர் தொடர்பான ஆணைக்குழு கல்வியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும், அதற்கென ஆணைக்குழு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமெனவும் விதந்துரை செய்தது. இதற்கமைய 1991 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்கச் சட்டப்படி தேசிய கல்வி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு கல்வி நிலை தொடர்பாக ஆய்வு செய்து அதன் முதலாவது அறிக்கையை 1992 இல் ஜனாதிபதியிடம் கையளித்தது. இவ்வறிக்கையில் 9 தேசிய இலக்குகள், அவற்றுக்குப் பொருத்தமான கல்வி இலக்குகள், இவற்றை அடைவதற்கு மாணவரிடத்தே கட்டி எழுப்பப்பட்ட வேண்டிய 5 அடிப்படைத் தேர்ச்சிகள் ஆகியவை முன்வைக்கப்பட்டமை முக்கிய அம்சங்களாகும். தேசிய கல்விக் கொள்கையை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு இவை அடிப்படையாக அமைந்தன. இதனைத் தொடர்ந்து 1997 இல் தேசிய கல்வி ஆணைக்குழு கல்விச் சீர்திருத்தங்களுக்கு சார்பாக 5 கொள்கைப் பரப்புக்களை முன்வைத்தது. அவை,

1. கல்வியியல் சமவாய்ப்பினை விரிவாக்கல்
2. கல்வித்தர அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசிரியர் சேவையும் ஆசிரியர் கல்வியும்.
4. தொழில்நுட்ப செயல் முறைக்கல்வி
5. கல்வி முகாமைத்துவமும் வள ஏற்பாடும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள் எனும் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

இவ்வாறாக காலத்துக்குக் காலம் நாட்டு நிலைமைகளுக்கேற்ப கல்விச் சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டு வரும்போது அவற்றை நடைமுறைப் படுத்துபவர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. இந்த வகையில் கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் தாம் அறிந்து நடைமுறைப் படுத்தும் மகத்தான பணியை ஆசிரியர்கள் மேற்கொள்கின்றார்கள்.

ஏனைய தொழில்களைச்செய்பவர்களிலும் பார்க்க விழிப்புடனும் அர்ப்பணிப்புடனும் வகைகூறலுடனும் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டுமென வலியுறுத்தப்படுவது ஏனைய துறைகளில் ஏற்படும்தவறு திருத்த முடியும் கல்வித்துறையில் ஏற்படும் தவறு ஈடுசெய்ய முடியாது என்பத னாலாகும். ஆசிரியர்களால் கல்விச் செயற்பாடுகள்சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அவை உலக நடைமுறைகள் யாவற்றையும் பாதிக்கும் இதனை வள்ளுவர்,

"கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்களுக்கு"

எனக் கூறினார்.நல்லவை எல்லாம் செய்ய வேண்டியது சான்றாண்மை மிக்க ஆசிரியர் பணியாகும். சுவாமி விபுலாநந்தர் ஒரு சிறந்த கல்வி அமைப்பு முறையே சமூகத்தின் சகல நோய்க்கும் நிவாரணமளிக்குமென்று கூறினார்.

கற்பித்தல் செயற்திறன் வாய்ந்ததாகவும் பயனுறுதியுடையதாகவும் அமைவதற்கு ஆசிரியர்கள் தாம் கற்பிக்கப்போவதைச் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும். சிறந்த முறையில் ஆயத்தம் செய்வது குறித்த நோக்கத்தை அடைவதற்கு வழிவகுக்கும். ஆசிரியர்கள் குறித்த பாடங்களில் புலமையும், நிபுணத் துவமும் கொண்டவர்களாக இருந்தாலும் வகுப்பறைக் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் பாடக்குறிப்பு எழுதுவது மிக முக்கியமானது எனக் காலம் சென்ற பேராசிரியர் சிவஞான சுந்தரம் (நந்தி) வலியுறுத்திக் கூறியுள்ளார். பொருத்தமான கற்பித்தற் துணைச் சாதனங்கள் மூலம் கற்பித்தல் மாணவர்கள் சரியான அடைவை பெறுவதை உறுதிப்படுத்தும். இதனால் வரலாற்றுப் பாரம்பரியத்தில் ஆசிரியர்கள் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றார்கள்.

கணினி, இணையம், மின்னஞ்சல் போன்ற சாதனங்களூடாக சிறந்த தகவல்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இன்றைய உலகில் சாதாரண விடயமாகி விட்டது. இவற்றின் பொருத்தமான பயன்பாட்டைப் பெறுவதுடன் பொருத்தமான நூல்களை நூலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தலும் மாணவர்களை வாசிக்கத் தூண்டுவதிலும் அறிவை விருத்தி செய்யலாம். நூலளவேயாகும் நுண்ணறிவு, கற்றனைத்தூறும் அறிவு என்பவை வாசிப்பதால் ஏற்படும் விருத்தியைக் குறித்து நிற்கின்றது. இன்று சகல துறைகளுக்கும் பொருத்தமான நூல்கள் வெளிவருகின்றன. பாடசாலை நூலகங்களுக்கு பெருமளவு நூல்கள் வந்தடைகின்றன. அவற்றைத் தேவைக்கேற்ப ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்துதல் மிகவும் பயன்பாடானதாகும்.

ஆசிரியர்களின் பணிகளில் வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு மேலாக விளையாட்டு நிகழ்ச்சிகள் சுற்றுலா, பொருட்காட்சி, நூற் கண்காட்சி, மாணவர் மன்ற செயற்பாடுகள் விழாக்கள் மூலம் மாணவர்களது ஆளுமையை முழுமைப்படுத்தலாம். ஆசிரியர் தம் செயற்பாட்டை வளமாக்கு வதில் மாணவர்களிடையே மொழித் தேர்ச்சியை வளர்த்தல் வேண்டும். தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கும், தொடர் பாடலுக்கும் சிறந்த மொழியாற்றல் வளர்க்கப்படல் வேண்டும். மொழியாற்றல் எனும் போது எழுத்தாற்றல், பேச்சாற்றல், வாசிப்பாற்றல் என்பவற்றை வளர்த்தல் ஆகும்.

இன்று பூகோள மயமாக்கல் என்பது பிரபலமடைந்து வருகிறது. உலகமயமாக்கலில் முக்கியமானது தொடர்பாடலாகும். தொடர்பாடலுக்கு மொழி அவசியமாகும். தமிழ் மொழியுடன் ஏனைய மொழிகளில் திறமையும் புலமையும் வளர்த்தல் ஆசிரியர் தம் வாண்மை விருத்திக்கும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கும் மிகவும் பயன்படக்கூடியதாகும்.

சமூக பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி அடிப்படையானது. மாறிவரும் உலகிற்கு ஏற்ப கல்வி வளர வேண்டுமானால் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்கள் தமது தனித்துவமான ஆளுமையூடாக வளரத்தெடுக்க உறுதி கொள்ள வேண்டும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடையறாத தொடர்ச்சியான நிகழ்வாகும். ஒரு பக்கத்தில் ஒரு பிள்ளை தான் கற்க விரும்புவதை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உடையது. மறுபுறத்தில் ஆசிரியர் முழு வகுப்பிற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பாடமொன்றைக் கற்பிக்கின்றார். ஆசிரியர் முழுப்பாடத்தையும் போதிப்பவராக இருந்த நிலை மாறி மாணவர்கள் கற்பதற்கு வசதி செய்பவராகத் தொழிற்படுகின்றார். (facilitator) மாணவர்கள் கற்பதற்கு வழிகாட்டி மேற்பார்வை செய்தல் அவசியமாகும்.

மாணவர்களின் குறை நிறைகளைக் கண்டறிந்து தேவையான விடத்து உளவளத்துணையளிப்பவராக (சீர்மியம்) செயற்பட வேண்டும் (counselling) வழிகாட்டல் ஆலோசனைகள் கூறல் மூலம் (Guide) மாணவர்களை கற்றற் செயற்பாடுகளில் விருப்பத்துடன் ஈடுபடச் செய்தல் அவசியம்.

தாம் கற்பிக்கும் பாடத்துறையில் தாம் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நூல்களை எழுதி வெளியிடல் ஆசிரியர்கள் முன் வந்து செய்ய வேண்டிய பணிகளில் ஒன்றாகும். எவ்வளவு புறக் காரணிகள் இருந்தாலும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு கல்வித் தரமானது “வெள்ளத்தனையது மலர் நீட்டம் என்பது போன்றும்” “நீரளவேயாகுமாம் நீராம்பல்” என்பது போன்றும் ஆசிரியின் கல்வித் தராதரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

இதனால் புதிய கல்விச் சீர்திருத்தங்களில் பல முன்மொழிவுகள் இடம்பெற்றுள்ளன.

1. தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை நிறுவப்பட்டது.
2. கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழக கல்வித்துறை ஆகியவற்றினூடாக ஆசிரியர் பயிற்சி நடைபெறுகிறது.
3. பயிற்சி கொடுத்த பின்ஆசிரிய நியமனங்கள் வழங்குதல்.
4. ஆசிரியர்களுக்கென வடிவமைக்கப் பட்ட ஆங்கிலப் பயிற்சி
5. புதிய தொழில்நுட்ப பாடங்களை கற்பிப்போருக்கான சிறப்புப் பயிற்சி வழங்குதல்.

என்பன தேசிய மட்டத்தில் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இன்று பெருமளவான ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆசிரியருக்கென ஆசிரியர் சேவை ***06.10.1994*** இல் ஆரம்பிக்கப்பட்டு இத்தினம் சர்வதேச ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம்” என்பதும் எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதும் உலகில் ஆசிரியர்களின் வகிபங்கை எடுத்துக் காட்டுகின்றது. ஆசிரியர்களுக்கான பதவியுயர்வுகள், உரிய சம்பளங்களைப் பெற்றுக்கொள்ளுதல், தேவையான உயர்கல்வியைப் பெறுதல் போன்றவற்றில் இருக்கும் தடைகள் நீக்கப்பட்டு ஆசிரியர்கள் தம் வாண்மை விருத்தியடைய சமூகம், மாணவர், பெற்றோர், அதிபர், கல்வி நிருவாகிகள், கல்வி அமைச்சு எனப் பல்வேறு மட்டங்களிலும் தகுந்த உதவியளிக்க வேண்டும்.

ஆசிரியர்களும் தமது தர மேம்பாட்டையும் அதன் மூலம் கிடைக்கும் உயர்வுகளையும் நாட்டின் கல்வி அபிவிருத்தியையும் கருத்திற் கொண்டு தமது கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர் பயிற்சிக்கு மேலாக உயர் கல்வித் தகைமைகளையும் பெற வேண்டும். சேவை முன் பயிற்சியை (Pre service) கல்விக் கல்லூரிகளிலும், பணியிடைப் பயிற்சியை (In serviced Training) பாடசாலைகளில் கற்பிக்கும் போது ஒழுங்கமைக்கப்படும் கருத்தரங்குகள், குறுகிய கால பயிற்சிகள் மூலமாகவும் தொடர் பயிற்சியை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பல்கலைக்கழகங்களில் முழுமையாகத் தங்கியிருந்து பயிற்சி பெறுதல் மூலமும் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

சாந்துணையும் கற்க வேண்டும் என வள்ளுவர் கூறுவர். ஆசிரியர்களும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். புதிய கல்விச் சீர்திருத்தம் டெலர் என்பவரின் நான்கு கற்றல் தூண்களை அடிப்படையாகக் கொண்ட மைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Delor report அவை,

1. அறிவதற்குக் கற்றல் (Learning to know)
2. செய்வதற்குக் கற்றல் (Learning to do)
3. ஆவதற்குக் கற்றல் (Learning to be)
4. வாழக்கற்றல் (learning to live together) என்பவையாகும்.

இந்த அடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தாம் கற்பிக்கும் வகுப்புக்களில் மாணவர்களின் அடைவு தொடர்பான ஆய்வுகள் செய்து குறை நிலையில் உள்ள பெறுபேறுகளை மேலும் வளர்ச்சியடை வதற்கான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவதன் மூலம் கல்வித் தரம் பெறுபேறு, பண்பாடு, விழுமியம், மரபுரீதியாக வளர்க்கப்பட்டு வந்த உறுதியான நடைமுறைகள் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதுடன் கல்வியை தர ரீதியாகவும் (பண்பு ரீதியாகவும்) (Quality) அளவு ரீதியாகவும் (Quantity) வளர்த்து புதிய நூற்றாண்டில் எமது நாட்டின் கல்வி ஏனைய தென்னாசிய நாடுகளை விடக்கூடிய நிலையில் உள்ளது என்னும் சிறப்பை மேலும் நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

கல்வி வளர்ச்சிகளில் ஆசிரியர்களின் பங்களிப்பு கல்வி வளர்ந்து வந்த வரலாறு கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர்கள்ன செயலுருவம் கொடுத்தமை இன்றைய நிலையில் ஆசிரியர்களது செயற் பாடுகளும் மேலும் கடைப்பிடிக்க வேண்டியவைகளும் எடுத்துக் கூறப்பட் டுள்ளன.


**உசாத்துணை நூல்கள்**

1. ஆசிரியர் இயல் கலாநிதி சபா ஜெயராசா
2. கல்வியியற் சிந்தனைகள்., கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை
3. ஆரம்பக் கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் தேசிய கல்வி நிறுவகம்.
4. பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள் 1997 ஜனாதிபதியின் துரித செயற்குழு.


BED மாணவர்களால் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டு கல்வியியல் கட்டுரைகள் 17 இல் எழுதிய கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் சைவ சமயம்

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சு. தேவமனோகரன்
*B.A. Dip in ED, M.A., MEd, SLEAS III*
உதவிக்கல்விப் பணிப்பாளர் தெல்தெனியா

இலங்கையில் சைவசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. இலங்கையிலுள்ள பஞ்ச ஈஸ்வரங்கள் இதற்குச் சான்றாகும். சைவ சமத்தை நிலை நிறுத்துவதில் ஆலயங்களில் பங்கு முக்கியமானது. மலையகத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு ஆலயங்கள் நிலைக் களனாக அமைந்துள்ளன. ஆலயங்கள், பாடசாலைகள், இந்து நிறுவனங்கள் சைவ சமய வளர்ச்சிக்கு உயர் பங்களிப்பைச் செய்கின்றன.

ஆலயங்களில் சமய வழிபாடுகள் முறையாக இடம் பெறுகின்றன. மகோற் சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மக்கள் சமய நம்பிக்கையுடன் ஆலயங்களில் வழிபடுகின்றனர். கண்டியில் கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம், மாத்தளையில் முத்துமாரி அம்மன் ஆலயம், பிரசித்தி பெற்ற ஆலயங்களாக விளங்குகின்றன. ஆகம முறையிலமைந்த ஆலயங்கள், என்ற வேறுபாடின்றி இங்குள்ள ஆலயங்கள் சமயப்பணியையும் சமூகப் பணியினையும் செய்து வருவது கண்கூடு. அறநெறிப் பாடசாலைகள் பெரும்பாலும் ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஆலயங்களில் நடைபெற்று வருகின்றன.

பாடசாலைகளில் காலைக் கூட்டம் சைவ சமய ஆராதனைகளுடன் ஆரம்பிக்கின்றன. சைவ சமய பாடம் கற்றல் கற்பித்தல் பணி சிறப்பாக நடைபெறுகின்றன. மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில், விவேகானந்த சபைப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். சமய விழாக்கள் நவராத்திரி விழா நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுச் செய்யப்படுகின்றன.

ஆலயங்களில் மாத்திரமன்றிப் பாடசாலைகள் அறநெறிப் பாடசாலைகளிலும் நடைபெறுகின்றன. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மூலமாகவும் சைவசமய விழாக்களினூடாகவும் சைவசமய கலாசார விழுமியப் பண்புகள் வளர்க்கப்படுகின்றன.

இந்து கலாசார மன்றங்கள் இசை, நடன வகுப்புகளைநடத்துவதற்கான ஒழுங்கமைப்பைச் செய்து வருகின்றன. இசை, நடன, கலை விழாக்கள் நவராத்திரி விழாக்களினூடாக சைவசமய பண்பாட்டு அம்சங்கள் வளர்க்கப்படுகின்றன.

ஆசிரிய ஆலோசகர்கள், சைவசமயம் தொடர்பான கல்விப் பணிப்பாளர், இந்து கலாசார அமைச்சு, அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து கலாசார திணைக்களம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமைய வளர்ச்சிக்கு கருத்தரங்கு நடத்துவது, பாடநூல்களை வழங்குவது ஆலோசனை வழங்குவது போன்ற பணிகளில் முனைப்புடன் செயலாற்றுகின்றமை குறிப்பிடத்தக் கதாகும்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் நாவலப்பிட்டியைக்களமாகக் கொண்டு சைவசமயப்பணியை மிகச் சிறப்பாக வளர்ப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றியுள்ளார். அக்காலப் பகுதியில் பணியாற்றிய ஆசிரியர்களும் சைவசமயம் வளர்ப்பதில் பங்காற்றியுள்ளனர்.

இன்றைய நிலையில் பாடசாலையில் சைவசமயப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். சமய ஆராதனை களில் சிவபுராணம் சொல்லிக் கொடுக்க வேண்டும். மாணவர்கள் தேவார திருவாசகங்களை மனனம் செய்வது ஊக்கப்படுத்த வேண்டும். குருபூசை தினங்கள், சமய முக்கியத்துவம் வாய்ந்த தினங்கள்அனுட்டிக்கப்பட வேண்டும்.

சைவ சமய பாரம்பரியக் கலைகளான காவடி, கரகம், கும்மி போன்ற கலைகள் இன்றும் ஆலய விழாக்களில் இடம்பெற்று வருவதனை காணலாம். திருவெம்பாவைப் பூசை வானொலியில் நேரடி அஞ்சல் கண்டி கட்டுக் கலை செல்வ விநாயகர் ஆலயத்தில் இருந்து இடம்பெறுவது வழமையாகும்.

மேலும் சைவசமய விழிப்புணர்வும் சைவசமய பண்பாட்டு விழுமிய அம்சங்களை மேம்படுத்தும் செயற்பாடுகள் அவசியமானது. அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் சைவப்புலவர் பரீட்சை நடத்தும் போது மலையக சைவ சமய ஆர்வலர் களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று அவர்களை ஊக்குவித்து வருவது சிறப்பம் சமாகும். இன்று பல சைவப்புலவர்கள் உருவாகியுள்ளனர். சைவசமய வளர்ச்சி சமூக வளர்ச்சிக்கு அடிப் படையானதாகும்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

**பஞ்ச பூதங்கள்**

1. நிலம் (பிருதுவி) - திருவாரூர், காஞ்சி
2. நீர் (அப்பு) - திருவானைக்கா
3. தீ (தேயு) - திருவண்ணாமலை
4. காற்று (வாயு) - திருக்காளத்தி
5. ஆகாயம் (வான்) - சிதம்பரம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் சைவநாதம் பொன்விழா மலர் 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையில் வினாக்களுக்கு விடையளிக்கும் போது கவனிக்க வேண்டியவை

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், **சு. தேவமனோகரன்**

- நீண்ட காலம் படித்த விடயங்களில் வருகின்ற வினாக்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் விடையளிக்க வேண்டி யது முக்கியமானதாகும்.

- படித்தவற்றில் முக்கியமானவற்றைச் சிறு குறிப்புக்களாகக் குறித்து வைத்திருப்பது நன்று வினாப்பத்திரத் தைப் பெற்றவுடன் அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக் கொண்டு எந்தெந்த வினாக்களுக்கு விடையளிக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

- இவ்வருடம் மூன்று மணித்தியால வினாப்பத்திரங்களுக்கு வாசிப்பதற்கு 10 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை வினாப்பத்திரத்தில் பார்த்துத் தெரிந்து அந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

- விடையளிக்கும் போது கட்டமைப்பு வினாக்கள், கட்டுரை வினாக்கள், பல்தேர்வு வினாக்கள் ஒவ்வொன் றுக்கும் அதற்குரிய முறையில் விடை யளிக்க வேண்டும்.

- தெரிவு வினாக்களைத் தெரியும் போது பூரணமாக விடையளிக்கக் கூடிய வினாக்களைத் தெரிவு செய்து எழுத வேண்டிய வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்க வேண்டும்.

- நேரத்தை ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வகையில் ஒதுக்கி அதற்குள் எழுதி முடித்து விட வேண்டும். முழுமையாக எழுதி முடித்த பின் திருப்பிப் பார்க்க வேண்டும்.

- விடை எழுதும் போது வினாக்களின் இலக்கங்கள் சரியாக எழுதப்படல் வேண்டும். ஒரு வினாவிற்குத் தொடர்ச் சியாக விடை எழுத வேண்டும். பகுதி வினாக்கள் எனின் பகுதிகளைக் குறித்துத் தொடர்சியாக எழுத வேண்டும்.

- வினாக்களுக்கு விடை எழுதிய பின் மீதி இடம் 4, 5 வரிகள் இருந்தால் அதை விட்டு விட வேண்டும். புள்ளிகள் போட்டுக் கூட்டுவதற்கு அது பயன்படும்.

- ஒவ்வொரு தாளிலும் சுட்டெண், பக்க எண் குறிப்பிடப்படல் வேண்டும்.

- ஒவ்வொரு பாட வினாத்தாளுக்கும் முகப்புப் பத்திரம் தருவார்கள். அதில் பாடம், பாட இலக்கம், சுட்டெண், எழுதிய பக்கங்கள் போன்ற கேட்கப் பட்ட விபரங்களை மாத்திரம் எழுதுதல் வேண்டும்.

- பரீட்சை மண்டபத்திற்குள் கொண்டு போகக்கூடிய பேனா, பென்சில், அடி மட்டம். கணித உபகரணங்களைக் கொண்டு செல்ல வேண்டும். அடையாள அட்டை எந்த நாளும் கொண்டு போக வேண்டும். அனமதி அட்டை முதல் நாளே கொண்டு சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டும் தேவையெனில் முதலே பிரதி எடுத்து வைத்துக் கொள்ளலாம்.

- கொண்டு போகக்கூடாத பொருள் களைக் கொண்டு போகக்கூடாது.

- பரீட்சைக் காலங்களில் குறித்தநேரம் படிப்பதுடன் குறித்த நேரம் நித்திரை, மன அமைதி, உகந்த உணவு முறை என்பன முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

- தெளிவாக விடயங்களை இருவர் சேர்ந்து கலந்துரையாடிக் கற்கலாம்.

- பரீட்சைக்கு முதல் நாள் கூடிய நேரம் விழித்திருந்தால் அடுத்தநாள் பரீட்சை எழுதுவதற்கு மனநிலை இடையூறாக இருக்கும்.

- முடிந்த வினாப்பத்திரம் தொடர்பான கலந்துரையாடல்கள், சிந்தனைகள் இருக்கக்கூடாது. அடுத்து வரும் பாடங்கள் பற்றிச் சிந்திப்பது நன்று.

- பரீட்சை மண்டபத்தில் எழுதுவதற்குத் தேவையான விடை எழுதும் தாள்கள் தருவார்க்ள முடிந்த வரை விரைவாக மதிநுட்பமாக விடையளிக்க வேண்டும். வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய விடையளிக்க வேண்டும்.

- பரீட்சை மண்டபத்திற்கு உரிய நேரத்திற்கு முன்பாகவே சென்று விட வேண்டும் உடல் நலம், உளநலம் பேணி, நோயின்றி, வேறு பிரச்சினைகள் இன்றிப் பரீட்சையை மனமகிழ்வுடன் எதிர்கொண்டு சிறப்பாக எழுதிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- 

- பரீட்சைக்கு பாடசாலைகள் முன்னுரிமை கொடுத்துக் கற்றல் வழிகாட்டல்கள் வழங்குவார்கள். பரீட்சைக் காலத்தில் பெற்றோரும் மற்றோரும் பரீட்சார்த்திகளுக்குச் சாதகமாக நடந்து கொள்ள வேண்டும். பரீட்சைக்காலம் மனநிறைவாகவும் அமைதியாகவுமிருந்து நல்ல மனநிலையில் பரீட்சைக்குச் சென்று பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஒழுங்கமைத்து நடத்தும் பரீட்சைக்கு ஒத்துழைப்பு வழங்கி ஒவ்வொருவரும் மிகச் சிறந்த முறையில் நுட்பமாகவும் புத்திசாலித்தனமாகவும் வினாக்களிற்கு ஏற்ற முறையில் விடையளித்தால் சிறந்தொரு பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம்.

- நேரம் முடிவடைய 10 நிமிடத்திற்கு முன்பே எழுதிய விடைத்தாள்களை ஒழுங்கு படுத்திக் கட்டி வைத்துக் கொண்டு தொடர்ந்து எழுதலாம்.

- மனச்சோர்வின்றி பயமின்றிப் பரீட்சையை துணிவுடன் எழுதிச் சித்தியடையலாம்.

**(04.08.2000 தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்தது.)**

- பரீட்சார்த்திகள்பரீட்சைக்குத்தோற்றும்எந்தப்பாடமென்றாலும்வினாப்பத்திரத்தின் முகப்பில் தரப்பட்டுள்ள அறிவித்தல்களை முதலில் தெளிவாக வாசிக்க வேண்டும். வழமையாகக் கேட்கப்படும் முறையில் ஏதேனும் மாற்றங்கள் இருக்கலாம். (உ-ம்) வழமையாக 1 ஆம் வினா கட்டாய வினா என்றால் இந்த முறை வேறேதேனுமொரு வினாவையும் கட்டாய வினாவாகக் கேட்கப் படலாம், வேறும் ஏதாவது மாற்றங்கள் இருந்தாலும் அறிவுறுத்தல்களை வாசிப்பது ஒழுங்கான முறையில் விடையளிக்க உதவியாக இருக்கும்.

9047(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தரப்பட்ட வினாக்கள் யாவற்றையும் முழுமையாக வாசித்து நீங்கள் இலகு வாக, முழுமையாக விடையளிக்கக் கூடிய வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
- விடையளிக்கும் போது எல்லா வினாக் களுக்கும் விடையளிக்கக்கூடிய வாறு நேரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். சிலர் இறுதியில் ஒரு வினாவுக்கு விடை யளிக்க நேரமில்லை, நேரம் போதாது என எழுதுவார்கள். இதற்கு எவ்வித அனுதாபமும் விடைத் தாள் புள்ளியிடும் போது கிடைக்காது.

- எழுதிக் கொடுக்கும் விடைத் தாள்கள் எல்லாவற்றிலும் சுட்டெடன் எழுதப்பட்டிருந்தல் வேண்டும். விடைத்தாள்களில் அடிக்கப்பட்ட கோடுகளுக்குள்ளேயே விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கான அல்லது அதன் பகுதிக்கான விடை எழுதி முடியும் போது சிறிதளவு இடைவெளி இருத்தல் வேண்டும். இது ஒரு விடையிலிருந்து இன்னொரு விடையை வேறுபடுத்துவதற்கும் அதற்கான புள்ளிகளை விடைத்தாள் பரீட்சகர்கள் இடுவதற்கும் உதவும்.

- ஒரு வினாவிற்கு விடையளிக்கும் போது அதன் பகுதிகள் யாவற்றுக்கும் தொடர்ச்சியாக விடையளிக்க வேண்டும் இன்னொரு வினாவிற்கு விடை எழுதிய பின்னர் 2ஆம் பக்கத் தொடர்ச்சி என 8 ஆம் பக்கத்தில் எழுதுவது எவ்வளவு திறமையாக எழுதினாலும் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்காது.

- முடிந்தவரை வாசிக்கக்கூடியதாகவும், தெளிவாகவும் விடைகள் எழுதப்படல் வேண்டும். சிறு வினாக்கள் மற்றும் ஒரு சொல்லில் விடையளிக்கும் வினாக்களை விரைவாகச் செய்து மீண்டும் ஒருமுறை சரிபார்க்க வேண்டும்.

- விடை எழுதுவதற்கு எத்தனை தாள்கள் வேண்டுமானாலும் கேட்டுப் பெறலாம். அதற்கு வரையறை இல்லை. ஒவ்வொரு தாள்களுக்கும் பக்கம் அல்லது தாள்களின் தொடர் இலக்கம் போட்டுக் கொள்ள வேண்டும். இது விடைகளின் ஒழுங்கமைப்புக்கு உதவும்.

- பரீட்சை மண்டபத்திற்குள் தேவைப் படும் பென்சில், பேனா, நிறப்பென் சில்கள் போன்ற அனுமதிக்கப் பட்ட பொருள்களை ஒவ்வொரு வரும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். இன்னொருவரிடம் அவற்றைக் கேட்டால் இருவரினதும் பரீட்சை மனநிலை குழம்ப நேரிடும். பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துவது பரீட்சையை திருப்தி யாகவும் திறமையாகவும் செய்வதற்குப் பெருந்துணையாக இருக்கும்.

- நேரத்தை அவதானித்து எழுத வேண்டிய வினாக்கள் எல்லாவற் றுக்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் விடையளிக்க வேண்டும். இறுதி விடை எழுதும் போது விடைத்தாள் களைப் பத்து நிமிடத்துக்கு முன்பே ஒழுங்குபடுத்தி தேவையாயின், ஒரு மேலதிக விடை எழுதும் தாளையும் சேர்த்துக் கட்டி விட வேண்டும். விடைகள் எழுதிய ஒழுங்கில் விடைத் தாள்களைச் சேர்த்து இடது பக்க மேல் மூலையில் கட்டி மேற்பார்வை யாளரிடம் கையளிப்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

- பரீட்சைக்குச் செல்லும் போது நேர அட்டவணைப்படி பாடங்களைப் படித்து குறிப்பிட்ட நேரத்திற்கு முப்பது நிமிடத்திற்கு முன்பே அடையாள அட்டை, உறுதிப்படுத்திய அனுமதி அட்டை மற்றும் தேவையான ஆவணங்களுடன் சென்று பரீட்சையில் விடை எழுதி சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**(21.01.2018 தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்தது.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயமும் நடைமுறை வாழ்க்கையும்

**சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சு. தேவமனோகரன்**
*B.A. PGDE MAMED PGDEM SLEAS III*

சமயம் மக்கள் வாழ்க்கையை வளம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நம் முன்னோர்கள் சமயவழி நின்றனர். சைவசமயத்தில் கூறப்பட்ட விடயங்களைத் தமது நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றினர். நாளாந்தக் கடமைகளை இறை வணக்கத்துடன் ஆரம்பவித்தனர். ஆலயத்தையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருத்தல், சுற்றாடலை தூ ய்மையாகப் பராமரித்தல், குளித்துத் தோய்த்துலர்ந்த ஆடை அணிதல், ஆலய வழிபாடு செய்தல் என்பன ஆரோக்கிய வாழ்விற்கு வழி செய்தன.

மனித வாழ்வு இயற்கையுடனும் சமயத்துடனும் இணைந்துள்ளது. நாம் அவற்றுக்கு அப்பால் சென்றுவிடாமல் இயற்கைச் சமநிலையுடன் சுற்றாடலைப் பாதுகாத்து வாழ்ந்தால் நோய் அணுகாது. மனச் சந்தோசத்துடன் வாழலாம். நாயன்மாருடைய வாழ்க்கைவரலாறு, அவர்கள்பாடிய தேவாரதிருவாசகம் மனிதவாழ்வு மேன்மையடையக் கூடிய வகையில் அமைந்துள்ளது மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அவர்கள் நடைமுறை வாழ்க்கையுடன் சேர்த்து சமயக் கருத்துக்களையும் கூறியுள்ளனர். சமயப் பணிகள், சமூகப் பணிகள் செய்வதன் மூலம் திருப்தியடைந்து வாழலாம் என்பதை அவர்கள் தம் வாழ்க்கையனுபவங்களூடாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

அர்த்தமுள்ள இந்துமதம் அவரவர் கடமைகளை வகுத்துள்ளது. ஒவ்வொரு வரும் தத்தமது கடமைகளைச் சரியாகச் செய்து திருப்தியாகவும் சந்தோசத் துடனும் வாழ இந்துமத நடைமுறைகள் வழிவகுத்துள்ளன. சமய சமூகப்பணிகளில் ஈடுபட்ட அறிஞர்கள், பெரியோர்கள் நடைமுறை வாழ்க்கை எவ்வாறு அமைந் தால் நன்று என்பதனை வாழ்ந்து காட்டி னார்கள்.

இலங்கையில் நல்லை நகரில் தோன்றிய நாவலர் அவர்கள் தாம் வாழ்ந்த காலச்சூழ் நிலையில் சைவத்தையும் தமிழையும் எவ்வாறு வளர்க்கலாம் என்பதனை தான் செய்த பணிகளினூடாகக் காட்டியவர். செய்யுள் இலக்கியத்திலிருந்து உரைநடை இலக்கியம் தோன்றிய காலப் பகுதியில் சைவசமய நெருக்கடிகளுக்குள் வாழ்ந்தவர். சைவசமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு சமயக் கருத்துக்களை வசன நடையில் எழுதி வெளியிட்டார். சைவசமயப் பிரசங்கம் நடத்தி மக்களிடையே சமய விழிப்பணர்வையும் பக்தி உணர்வையும் ஏற்படச் செய்தார். சமய இலக்கியங்களை உரைநடையில் எழுதிப் பதிப்பித்தார். வசனநடை கைவந்த வல்லாளர் என்று கூறுமளவிற்கு அவரது வசனநடை அமைந்து மக்களை சமய வாழ்க்கையில் ஈடுபடச் செய்தது.

ஆலயங்களில் புராணபடனம் செய்வதை நடைமுறைப்படுத்தினார் பாலபாடம், சிவாலய தரிசன விதி, நித்திய கருமவிதி, பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம் போன்ற நூல்களை இலகு தமிழில் யாவரும் படிக்கக்கூடிய வகையில் செய்தார். சமயப்பணி, தமிழ்ப்பணி என்பவற்றுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தமையால் அவர் வாழ்ந்த காலம் முக்கியமான காலமாக அமைந்தது. சைவசமயத்தையும் தமிழையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனத இரு கண்களாகப் போற்றிப் பாதுகாத்தார். "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி' எங்கே" எனும் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் வாசகம் அவரது சைவசமயத் தமிழ்ப்பணிகள் எந்தளவு முக்கியமானதை என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

நல்லூர் ஆலயம் முன்பாக நாவலர் மண்டபம் அமைந்துள்ளது. நாவலர் கலாசார மண்டபம் நாவலர் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ளமை நாவலரை இன்றும் நினைவுகூரும் வகையில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" எனும் பட்டமளித்துக் கௌரவித்தமை இவரது பேச்சாற்றலுக்குத் தக்க சான்றாகும்.

நாவலர் அவர்கள் சமயத்தை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி மக்கள் வாழ்க்கை வளம்படப் பணியாற்றினார். இவரது செயற்பாடு பின்வந்த காலங்களில் சமயச் செயற்பாடுகள் நிறுவனம் சார்ந்ததாக வளர்ச்சியடைய வழிவகுத்தது. சைவ பரிபாலன சபை, சைவாசிரியர் கலாசாலை போன்றன தொடர்ந்தும் சமயப் பணி ஆற்றின.

ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வாழ்க்கை அமைந்தன. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கமைய ஊர்கள் தோறும் கோயில்கள் பூசைகள் மணியோசைகள் ஊர் மக்களைச் செயற்பட வைக்கின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மிக நீண்ட காலமாக புகழ்பெற்று விளங்குகிறது. நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலம் மிகவும் முக்கியமானதாகும். குடாநாடு முழுவதும் பக்திமயமாகக் காணப்படும். 25 தினங்கள் திரு விழாக்கள் நடைபெறும். பல இடங்களிலிருந்தும் அடியவர்கள் வந்து வழிபடுவார்கள். வீதி ஒழுங்கள் மற்றும் விடயங்களில் முன்னாயத்தங்கள் செய்து திட்டமிட்டு திருவிழாக்காலம் மிகவும் பக்திச் சூழலுடன் காணப்படுவது சிறப்பானதாகும். விரதமிருந்து உடலாரோக்கியத்தைப் பேணல், வீதி வலம் வருதல், அங்கப் பிரதிட்டை செய்தல் ஆலயப்பணி செய்தல் மூலம் உடலுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்தல். ஆலயச் சுற்றாடலைத் தூய்மை செய்து நோய்களைத் தவிர்த்தல், உண வளித்தல் தாகசாந்தி செய்தல் மூலம் பிறருக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் சைவ சமயம் கூறும் நடைமுறை வாழ்க்கையை எவ்வாறு கடைப்பிடித்து வாழலாம் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

சைவசமயப் பழக்கங்களை இளமையில் இருந்தே பிள்ளைகளுக்குப் பழக்குவதால் வளர்ந்து பெரியவர்களாகும் போது நற்பழக்கங்கள் வழக்கங்களாகிவிடு கின்றன. விபூதி பூசுதல், பெரியவர் களைக் கனம் பண்ணல், ஆலய வழிபாடு காலையில் நேரத்துடன் எழுதல், பாடங்களைப் படித்தல் போன்ற செயற் பாடுகள் இளமைக்காலத்தில் கஷ்டமாக இருந்தாலும் பழகிய பழக்கங்கள் வழக்கங் களாகிப் பின்னர் தாமாகவே அவற்றை மறக்காது செய்வதற்குத் தூண்டுகிறது.

சைவசமயத்திலே கூறப்பட்டுள்ளவை நடைமுறை வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்வதற்கு வழிவகுத்துள்ளன. ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் காரண காரியத் தொடர்பிருக்கின்றன. விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் இருக்கின்றன. நாமும் சைவ மேன்மையடைவோம் வாழ்க்கையை வளமாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலாலி கணினி வள நிலையத் திறப்பு விழாவின் போது...



இணுவில் இந்துக்கல்லூரி முத்தமிழ் விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விழுமியங்களைப் பின்பற்றி நலமாய் வாழ்வோம்!

**சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சு. தேவமனோகரன்**
*B.A. Dip in ED, M.A., MEd, SLEAS III*
பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்..... எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறை வில்லை" என்பது திருஞானசம்பந்தரின் வாக்கு. நல்லதை எண்ணி நல்லதைச் செய்து வாழ்ந்தால் பெரும் நன்மையுண்டு. மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வழிசெய்வது மனிதப் பண்புகள் மனித விழுமியங்கள். "கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர் கட்கு" என்பது திருக்குறள். சான்றாண்மை மேற்கொள்பவர்களுக்கு நல்லன எல்லாம் கடன் என்று இதற்குப் பொருள் கூறுவர். ஒவ்வொருவரும் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்து தமக்குரிய ஒழுக்கத்தை பேணி நடப்பது முக்கியமானதாகும். அன்பு, கருணை, தன்னைப்போல் பிற உயிர்களையும் மதித்தல், இரக்கம் பிறர்க்கு உணவளித்தல், சகிப்புத்தன்மை, பொறுமை, நேர்மை, நல்லொழுக்கம், உண்மை பேசுதல், பிறர்க்கு இன்னா செய்யாமை, பிறர்க்கு உதவி செய்தல் போன்ற பண்புகள் தம்மையும் பிறரையும் மகிழ்விக்கும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" எனும் குறள் இன்னாதவற்றைச் செய்பவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்பதைக் காட்டுகிறது. சுவாமி சித்பவானந்தர் கூறுகிறார். "பிறருக்கு நன்மை செய்யப்பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு" ஒருவருக்கொருவர் உதவிசெய்து அனைவரும் நன்மை பெற்று வாழ்ந்த வாழ்க்கையைக் கூட்டுக்குடும்ப வாழ்க்கை வாழ்ந்தவர்களிடம் காணலாம். குழுவாகச் செயற்படும் போது ஒற்றுமை, புரிந்துணர்வு, கூட்டுப்பொறுப்பு, சிறந்த கருத்துப் பரிமாற்றம், தொடர்பாடல், ஆலோசனை, வழிகாட்டல் நல்லவற்றை பின்பற்றும் பண்பு, பிழைகளைத் திருத்திவிடும் பண்பு, அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் என்பன இயல்பாக ஏற்படுகின்றன.

"நகுதற்பொருட்டன்றுநட்டன்அவனைமிகுதிக்கண்மேற்சென்றுஇடித்தற்பொருட்டு" எனும் வள்ளுவர் குறள் சிரிப்பதற்கு மட்டுமல்ல நண்பன், அவனிடம் காணப்படும் பிழையான செயல்களைக் கண்டித்து திருத்த வேண்டுமென்பதாகும். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிழைகளைக் கண்டிக்க வேண்டும். இவ்வாறாக நல்ல பழக்கங்களைப் பழக்கினால் பிள்ளைகள் வளரும்போது அவை வழங்கங்களாகிப் பின்பற்றப்படும். இளமையில் பழக்கினால் அவை சிலையில் எழுதப்பட்டது போல் உறுதியாக இருக்கும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப்பணி, சமூகப்பணி செய்வதன் மூலம் மனித விழுமியப்பண்புகளைப் பேணலாம். சமயப் பணியில் ஆலயத் தொண்டு செய்தல்,ஆலயச் சுற்றாடலைப் பேணுதல். ஆலய வழிபாடு, விரத மிருத்தல், ஆலயத்துக்கு வருபவர்களுக்கு உதவியளித்தல் மூலம் மனத்திருப் தியடையலாம். அதே போன்று சமூகப் பணியிலும் மனம் திருப்தியடையலாம். பிறர்க்கு உணவளித்தல், நல்லவற்றை உப தேசித்தல், மற்றவர்கள் பின்பற்றக்கூடிய வகையில் நடத்தல் வேண்டும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்
நூலோர்தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்பது ஜீவராசிகளுக்கு உணவளித் தலின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இதனால்தான் எம் முன்னோர்கள் தான தருமங்கள் செய்வது. வசதியற்றவர்களுக்கு உதவுவது போன்ற நற்செயல்களைச் செய்வதில் ஈடுபாடு காட்டினார்கள். பிறருக்கு நன்மை செய்ய எமக்கும் நன்மைகள் தேடிவரும். சமய சமூகப்பணிகளை எம் முன்னோர் சிறப்பாகச் செய்துள்ளனர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சமய சமூகப்பணிகளைத் தான் வாழ்ந்த காலப் பகுதியில் மிகச் சிறப்பாகச் செய்துள்ளார். தனியொருவராக இருந்து சமய சமூகப்பணிகளைச் செய்த அவரை இன்றும் அனைவரும் போற்றுகின்றனர்.

நாவலர் அவர்கள் வீடுகளில் பிடியரிசி பெற்று ஏழைகளின் பசியைப் போக்கி னார். சைவசமய விழுமிய நூல்களை எழுதி வெளியிட்டார். விழுமியக் கருத்துக்களை மக்கள் பின்பற்றக்கூடிய வகையில் பிரசங்கங்கள் செய்தார். நித்திய கரும விதிகள் எனும் நாளாந்தம் செய்ய வேண்டிய கடமைகளை எழுதி வெளி யிட்டார்.

ஒவ்வொருவரும் தமது கௌரவத் தைப் பேணுதல் வேண்டும். தம்மையும் சுற்றாடலையும் சுத்தமாகப் பேண வேண்டும். உரையாடும்போது பண்பாக உரையாட வேண்டும். இதனை வள்ளுவர் குறள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

எமக்குக்கிடைத்த வாழ்க்கைக் காலத்தைப் பயனுள்ள வழியில் பயன்படுத்த வேண்டும். இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். நன்றியுடனும் நட்புடனும் பழகுதல் வேண்டும். புரிந்துணர்வுடன் வாழப் பழகுதல் வேண்டும். வீட்டிலும், சமூகத்திலும், பணியாற்றுமிடங்களிலும், ஏனையோருடன் புரிந்துணர்வுடன் நடத்தல் வேண்டும்.

குழுவாக ஒற்றுமையுடன் செயல் படுவது மிக முக்கியமானது "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்று சொல்வார்கள். மற்றவர்கள் கருத்தையும் உள்வாங்கிச் செயற்பட்டால் எல்லோரும் நன்மை பெறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியப்பண்புகளைப் பின்பற்று வதற்கும் ஏனைய செயற்பாடுகளைப் பயனுள்ளதாக்குவதற்கும் திட்டமிடல் முக்கியமானதாகும். எமது நாளாந்தக் கடமைகளை முன்னுரிமை அடிப் படையில் திட்டமிட்டுச் செய்தால், செய்ய வேண்டிய விடயங்களைச் சரியாகச் செய்யக்கூடியதாக இருக்கும்.

வீட்டிலும், பணி செய்யுமிடத்திலும் எமது கடமைகளைத் திட்டமிட்டுச் செய்தால், நேரத்தையும் சிக்கனப்படுத்திக் கொள்ளலாம். வேலைகளையும் இலகு படுத்திச் சிறப்பாகச் செய்யலாம். இதனைத் தான் கண்ணதாசன் “அர்த்தமுள்ள இந்து மதம் என்ன சொன்னது அது அவரவர் கடமைகளை வகுத்துத் தந்தது” என்று கூறினார். எம்மை நாம் ஒழுங்கமைக்கத் திட்டமிட்டு எமது செயற்பாடுகளை விழுமியப் பண்புகளுடன் செய்வது எமக்கு நன்மை கிடைக்க வழிவகுக்கும். ஆகவே மனித விழுமியப் பண்புகளைப் பின்பற்றி நலமாய் வாழ்வோம்.

நல்லைக் குமரன் மலர் - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தோம்பலின் சிறப்பு

**சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சு. தேவமனோகரன்**
*B.A. Dip in EDU, M.A., MEd, SLEAS III*
பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்

"அன்பே சிவம்" அன்புடன் ஒருவரோடு ஒருவர் பழகுவதால் மனமகிழ்ச்சியும் நன்மையும் கிடைக்கிறது. அன்பால் முடியாதது எதுவுமில்லை இதனால்தான் "அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ்" எனக் கூறினார். அன்பை வெளிப்படுத்து வதற்குப் பல வழிகளுள்ளன. அன்பான பண்புகளில் விருந்தோம்பல் பண்பும் சிறப்பானது. நம்முன்னோர்கள் தமக்குள்ளே அன்பு பாராட்டி ஒருவ ருடன் ஒருவர் சிறந்த அன்பு பாராட்டி வாழ்ந்துள்ளனர். அன்போடு பழகுவ தோடு மட்டும் நின்றுவிடாது சிறந்த விருந்தோம்பல் பண்பையும் கொண்டி ருந்தனர்.

அன்போடு பழகி விருந்தோம்பல் பண்பையும் கொண்டிருப்பவர்கள் மிகவும் சந்தோசமாகவும் மன அமைதியுடனும் காணப்படுகின்றனர். இதனை வள்ளுவர் "இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விரும்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று"

இல் வாழ்க்கையே விருந்தோம்பலுக்குத் தான் எனவும் விருந்தினர் ஒருவர் வெளியே இருக்க தாம் உண்ணுதல் சாவா மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் அது விரும்பத்தக்கதல்ல என்று கூறுகிறார்.

எமது வீட்டுக்கு வருபவர்களை அன்போடு வரவேற்று உபசரிப்பதன் மூலம் நாமும் திருப்தியடைகிறோம். வருபவர்களும் திருப்பதியடைகிறார்கள். நாம் செய்யும் விருந்தோம்பல் சிறந்த அறப்பணியாக அமைகிறது. அறம் செய விரும்பு என்பது எமது மனதில் அறம் செய்யும் பவண்பை மேம்படுத்து வதற்காகக் கூறப்பட்டதாகும். அறங்க ளிலே சிறந்த அறம் இல்லறம் இல்லற தர்மத்தில் இருப்பவரின் முக்கிய பண்பு விருந்தோம்பலாகும்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை"

இது இல்லற நிலையிலிருக்கும் ஒருவர் நால் வகை வாழ்க்கை நிலைகளில் ஏனைய நிலைகளிலிருக்கும் பிரமச்சரியம், வானப் பிரஸ்த்தம், சந்நியாசம் என மூன்று தரத்தவர்களையும் பேணிப் பாதுகாப்பது கடமையெனக் கூறப்பட்டுள்ளது.

விருந்தோம்பல்பண்பு ஒவ்வொருவருடையகலாசாரப்பின்னணியையும்கொண்டதாக விளங்குகிறது. பண்டி கைகள் திருநாட்கள் என்பவற்றை நாம் கொண்டாடும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தோம்பல் முக்கிய இடம்பெறுகிறது. தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகப் பொங்கப்படுகிறது. அவ்வாறு பொங்கல் செய்து உறவினர், நண்பர்கள், அயலவர் களுடன் சேர்ந்து உணவுண்பதைக் காண் கின்றோம்.

அதேபோன்று தான் சித்திரை வருடம், ஆடிப்பிறப்பு போன்ற பண்டிகைகள், விழாக்களின் போதும் ஒருவருடன் ஒருவர் விருந்து பரிமாறி விருந்தோம்பல் பண்பை அர்த்த முள்ளதாக்குகின்றனர்.

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"
"வித்தும் இடல் வேண்டும் சொல்லோவிருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

மக்கள் பண்பாட்டுடன் விருந்தோம்பல் பண்பும் பின்பற்றப்பட்டுக் கொண்டிருக் கிறது வீடுகளில் நடக்கும் கொண்டாட் டங்கள் நிகழ்வுகளின் போதும் விருந் தோம்பல் முக்கிய இடம்பெறுகிறது. திருமணம், குடிபுகுதல் பிறந்த நாள் மற்றும் நிகழ்வுகளிலும் நிகழ்வைத் தொடர்ந்து விருந்துபசாரம் நடை பெறுவது விருந்தோம்பலின் முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது.

ஆலயங்களிலும் திருவிழாக்களின் போது வரும் அடியவர்களுக்கு உணவளிப்பது சிறந்த சேவையாகக் கருதப்படுகிறது. ஆலய சூழலிலே திரு விழாக் காலங்களில் உணவு சமைத்து அடியவர்களுக்கு வழங்கப்படுகிறது. செல்வச்சந்நிதி நல்லூர் முருகன் ஆலயம், நயினாதீவு, நாகபூசணி அம்மன் ஆலயம், வீரமா காளி யம்மன் ஆலயம், இணுவில் கந்தசுவாமி கோவில், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் போன்ற பெரும்பாலான ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் அடியவர்களுக்கு உணவளிப்பது முக்கியமான விடயமாகப் காணப்படுகிறது. இதனையே,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"
எனக் கூறப்படுகிறது.

ஆலயங்களில் இவ்வாறான நடைமுறைகள் ஊர் நன்மைக்காகவும் சிறப்புக்காகவும் தாமே விரும்பிச் செய்வதனை நாம் காணலாம்.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு"

வந்த விருந்தினரை உபசரித்து இன்னும் யாராவது விருந்தினர்கள் வருவார்களா எனப் பார்த்திருக்கக் கூடியவர்கள் வானத்தவர் எனும் தேவர்களுக்கு நல் விருந்தாவார்கள் என வள்ளுவர் கூறுவது விருந்தோம்பல் பண்பின் மிகச் சிறந்த நிலையை எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார்கள் வாழ்ந்த வாழ்க்கை யிலும் விருந்தோம்பல் பண்பின் சிறப்பை நாம் காணலாம், பஞ்சமான காலங் களில் படிக்காசு பெற்று மக்களுக்கு உணவளித் தமை திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் திரு வீழிமீழலையில் படிக்காசு பெற்று உணவளித்துள்ளார்கள்.

இளையான் குடிமாற நாயனார் வயலில் விதைத்த நெல்லையே விருந்தினர் வந்த நேரத்தில் எடுத்துகொண்டு வந்து உணவு வாங்கிக் கொடுத்தமையை அறிகிறோம். சிறுத்தொண்ட நாயனார் அடியவர்களுக்கு உணவளிக்கும் பண்பை உயர்வாகக் கொண்டிருந்தார். இறைவனே அவரிடம் வந்து அவரது விருந்தோம்பலை சோதித்து அவருக்கு காட்சி கொடுத்தமையை நாம் அறிகிறோம்.

வள்ளுவர் தான் படைத்த திருக்குறளில் விருந்தோம்பல் எனும் அதிகாரத்தில் விருந்தோம்பல் தொடர்பாகக் கூறியுள் ளார். இலக்கியங்களிலே விருந்தோம்பலின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

சுவாமி சிற்பவானந்தர் கூறுவர் "உலகிற்கு நம்மை செய்யப்பிறந்த நீ தீமையாவது செய்யாதிரு" என்ற இது உலகிற்கு நன்மை செய்ய என்பது ஏனையோருக்கு ஏதோ ஒரு வழியில் உதவுவது இதில் உணவளித்தல் மட்டுமன்றி ஏனைய உதவிகளையும் செய்யலாம் என்பது சாதாரணமாக ஒருவரால் மற்றவர்களுக்குச் செய்யக்கூடிய சிறு உதவிகள் வழிகாட்டல்களைச் சொல்லலாம். அவற்றுள் விருந்தோம்பல் முக்கியமானது.

"பண்பெனப்படுழுவது பாடறிந்து ஒழுகதல்" எனத் தொல்காப்பிய இலக் கணத்தில் கூறப்பட்டுள்ளது. ஒருவருக்குச் சிறந்த பண்பாக அமைவது அவர்கள் தாம் செல்லும் இடங்களிலுள்ள நடைமுறை யிலுள்ள பண்புகளை அறிந்து அதற்கேற்ப நடப்பதென்பதாகும். அந்த வகையில் நாமும் எமது பண்புகளில் எம்மக்கள் பண்புகளில் விருந்தோம்பல் பண்பு முக்கியமானதாகக் காணப்படுகிறது. எம்மால் முடிந்தவரை விருந்தோம்பல் பண்பைக் கடைப்பிடித்து வாழ்வை வளமாக்க வேண்டும்.

"கிள்ளக் கிள்ளத் தேயிலையும் வளருதுபார்
சேவை செய்யச் செய்ய நன்மை வந்து விளையுதுபாரு"

என்பது திரைப்படப் பாடலொன்றில் வரும் அடிகளாகும். சேவை செய்வது ஆனந்தமாகும். விருந்தோம்பல் செய்வதன் மூலம் ஏனையோரையும் மகிழ் வித்து நாமும் மகிழ்வடையலாம். நம் முன்னோர் வழிவந்த விருந்தோம்பல் பண்பை தாமும் தளராது செய்து இதனால் கிடைக்கும் பயனை நாமெல்லோருடன் பெற்றுப் பெருமையடைவோமாக.

நல்லைக் குமரன் மலர் - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயிலிட்டி கலைமகள் பாடசாலை விழாவின் போது...



ஸ்கந்தவரோதயா பரிசளிப்பு நிகழ்வின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல ஆசான்

**கலைமாமணி எஸ்.ரி அருள்குமரன்** *B.A. (Hons) M.A. Merit Dip in Em Dip in PSY PGDE*
ஆசிரியர் யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, நிர்வாக பணிப்பாளர்,
புத்தாக்க அரங்க இயக்கம், *(ITM)* மல்லாகம்.

காலச்சக்கரத்தின் சுழல்விற்குள் நடந் தேறும் மாற்றங்கள் மகத்துவமானவை பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் மனித வாழ்வில் ஏற்படுகின்ற உறவுப்புரிதல் களும் உணர்வு பிணைப்புக்களும் பிரிக்க முடியாதவையாகவும் தவிர்க்க முடியாதவையாகவும் நிகழ்ந்து விடுகின்றன.

இப் பின்னணியில் வாழ்வுப் புலத்தில் முதன்மையான ஒரு மனிதராக வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக்கல்வி பணிப் பாளராக (திட்டமிடல்)உயர் திரு சுவாமி நாதபிள்ளை - தேவமனோகரன் அவர்கள் விளங்குகின்றார். இவரது நட்புறவுடன் கூடிய வழிகாட்டல் பசுமையாகவும் இனிமையாகவும் விளங்குகின்றது.

கல்வி நிர்வாக சேவை தரம் 11 இனை சேர்ந்த இவர் திறந்த பல்கலைகழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை பயிலுகின்ற ஆசிரிய மாணவர்களுக்கு மேற்பார்வையாளராக செயற்படுகின்றார்.

அதிகாரம் என்பது தமக்கு கீழ் உள்ளவர்களது நலனோம்பல் சார்ந்த தாகவும் அவர்களிற்கு பணி செய்தலினை மகோன்னதமானதாக விளங்குகின்றது. இப்பின்ணனியில் தேவமனோகரன் சேர்பழகுவதற்கு இனிமையானவராகவும், எளிமையானவராகவும் விளங்குகின்றார்.

கல்விப் புலத்தில் பணியாற்றுவது என்பது மகிழ்வுக்குரியதாகும். காரணம் எதிர்கால தலை முறையினை தகவமைக் கின்ற காத்திரமான பணியாகும். இவ்வகையில் கற்றலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களை மேற்பார்வை செய்து கற்றலில் சிறப்பு தேர்ச்சியினை அடைந்து கொள்வதற்கான வழிகாட்டியாக செயற்பட்டு வருகின்றார். எனது அனுபவத்தில் நான் பட்ட பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை கற்ற வேளையில் வழிகாட்டியாக செயற்பட்டு மேற்பார்வையினை மேற்கொண்டி ருந்தார். இக்காலப் பகுதியில் எளிமையா கவும்,நட்புறவுடனும் பழகி வழிகாட்டலை மேற்கொண்டிருந்தார்.

இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் தன்துறை சார்ந்த பணியினை மேற் கொள்ளவும் இறை அருள் துணை நிற் கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர் தேர்வும் பட்டமளிப்பும்

சைவசித்தாந்த பண்டிதர், சைவப்புலவர்,
**சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்** *SLEAS, M.A,MED,PGDEM,PGDE*
தேர்வுச் செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், பிரதிக்கல்விப்பணிப்பாளர்
திட்டமிடல், வலிகாமம் கல்வி வலயம்.

"அன்பே சிவம்" சிவபெருமனை முழுமுதற்கடவுளாக் கொண்டமைந்தது சைவசமயம். சைவசமயம் மக்கள் வாழ்க்கையை வளம்படுத்துவதற்கான வழி வகைகளைக் கூறுகிறது. சைவ நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாறு இதனைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. இலங்கையில் சைவசமயத்தைப் போற்றிப் பாதுகாப்பதில் ஆறுமுகநாவலர் அவர்களின் பணி மகத்தானது. அவரைத் தொடர்ந்து இன்று வரை சைவர்களின் வாழ்வை வளமாக்குவதில் சைவமக்கள் தனித்தும் நிறுவனமாகவும் செயற்பட்டு வந்துள்ளமை கண்கூடு.

நிறுவன அமைப்பில் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சைவப்பணியைச் செய்து வருகிறது. இவ்வருடம் தனது 55 ஆவது வயதில் பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் பல சைவசமயப்பணிகளை ஆற்றிவருகிறது. அதில் முக்கியமான பணி சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சையை நடத்திப் பட்டமளிப்பு விழா வினைச் செய்வதனைக் குறிப்பிடலாம். பட்டம் பெறுவதற்கு சைவ சமயத்தைச் சார்ந்த அனைவரும் தகுதியுடையவர்களாவர். மேலும் சைவ சமயத்தை பாடசாலைப்பாடத்திட்டத்திற்கமையக் கற்று க.பொ.த. சா.தரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தவர்கள் சைவசமய அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம், இந்துசமய பாடங்களில் சித்தி பெற்றவர்கள் மேலும் இலகுவாகக் கற்க முடிகிறது. உயர்தர வகுப்பில் இப்பாடங்களைக் கற்காவிடினும் பட்டப்படிப்பிற்கு தோற்றுவதற்குத் தடை இல்லை.

முற்காலத்தில் சைவசமயத்தைப் பின்பற்ற முடியாத அந்நியர் ஆட்சிக் காலத்திலும் சமயதீட்சை பெற்றார்கள். தற்காலத்தில் தீட்சை பெறுவது குறைவடைந்துள்ளது. சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்குத் சமயதீட்சை பெறுவதும் முக்கியமானதாகும்.

இளஞ்சைவப்புலவர் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டவர்களுக்குக் கல்வியியல் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இலங்கையில் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் தேசிய கல்வியியல் கல்லூரிச் சான்றிதழ் பெறுவதற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளஞ்சைவப்புலவர் சைவப்புலவர் பட்டச் சான்றிதழ் சிறந்த வரப்பிரசாதமாக உள்ளது.

இதற்கு மாத்திரமன்றி சைவர்கள் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடைவதற்கு வயது ஒரு தடை அல்ல என்ற வகையில் சைவர்கள் வயது வேறுபாடின்றி இப்பரீட்சைக்குத் தோற்றி பட்டம் பெறலாம்.

வருடாந்தம் கார்த்திகை மாதத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு சித்திரை மாதத்தில் பரீட்சை நடைபெறுகிறது. விண்ணப்பங்கள் கூடுதலாகக் கிடைக்கு மிடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைப்பதும் அவ்விடங்களிலேயே பரீட்சைக்கு வழிகாட்டல் வகுப்புக்கள் நடந்துவதும் சங்கத்தின் செயற்பாடுகளாக அமைகின்றன.

இலக்கியம், உரைநடை, வரலாறு, சாத்திரம், இலக்கணம் எனும் ஐந்து பாடங்கள் பரீட்சிக்கப்படுகின்றன. இவற்றுக்கான பாடத்திட்டம், நூல்கள் பற்றிய விபரங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது தரப்படுகின்றன. சைவசமய பாடத்தை முறைப்படி கற்று,மெய்கண்ட சாத்திர நூல்கள், திருமுறைகள் சைவசமய நூல்களைக் கற்பதன் மூலம் மேற்படி பாடங்களின் சித்தி பெறக் கூடிய நிலையை அடையலாம் இவ்வருடம் பட்டம் பெறும் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

ஆரம்பகாலங்களில் பெரும்பாலான சைவப்புலவர்கள் யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றனர். காலக்கிரமத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் சைவப் புலவர்கள் பட்டங்களைப் பெற வாய்ப்புக்கிடைத்தது. கடல் கடந்த நாடுகளிலும் சைவர்கள் வாழ்கின்ற நாடுகளில் சைவப்புலவர் பட்டங்கள் பெற்று வருகின்றார்கள். இதற்குச் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களும் சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்களும் திரு.செல்லத்துரை, நாவரசன் அவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

சைவசமய நெறியில் வாழ்வதற்கும் சைவசமய பாடங்களைப் பாடசாலை களிலும் தனிப்பட்ட முறையில் கற்பிப்பதற்கும் சைவப் புலவர்களாக இளஞ் சைவப் புலவர்களாக இருப்பவர்களுக்குச் சிறந்த தகைமை கிடைக்கிறது. எனவே சைவர்களாகிய நாம் சைவ சமய நெறியில் நிற்பதற்கும் சைவ வாழ்வு வாழ்வதற்கும் எம் எதிர்கால சமுதாயத்திற்கு சைவச் சிறப்புக்களை எடுத்துக்கூறுவதற்கும் சைவநெறி நின்று வழிகாட்டி வாழ்வை வளம்படுத்தச் சைவப்புலவர்களாகவும் இளஞ்சைவப்புலவர்களாகவும் பட்டங்கள் பெறுவோம், பெறுவதற்கு முயற்சிப் போம் அதற்கு சமகாலச் சாதக சூழ்நிலையைப் பயன்படுத்திக் கற்றுப்பட்டம் பெறுவோம்.

சைவப்புலவர் சங்கம் கூட்டங்களை ஒழுங்காக நடத்துவது சைவப்புலவர் இளஞ் சைவப்புலவர்களுக்கான பட்டப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோருவது, வகுப்புக்கள் நடத்துவது, பரீட்சை நடத்துவது பெறுபேறுகளை வெளியிடுவது, பட்டமளிப்பு விழா, சைவ மகா நாடு நடத்துவது, குருபூசைகள் நடத்துவது, தீட்சை கொடுப்பது, மாணவரிடைய சமய அறிவை வளர்க்கும் போட்டிகளை நடத்திப் பரிசில்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவது, சமயச் சான்றோர்களைக் கௌரவிப்பது, சைவ நாதம் நூல் வெளியிடுவது, சமயப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் கதாப்பிரசங்கங்கள் செய்வது, மற்றும் சமயப் பணிகளில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

55 ஆவது ஆண்டில் வெற்றி நடைபோடும் சங்கம் 60 ஆவது ஆண்டில் மேலும் பல சைவப்புலவர்களையும் இளஞ்சைவப்புலவர்களையும் உருவாக்குவதோடு மணிவிழாக் கொண்டாட்டங்களை அதற்கென அமைக்கப்பட்ட ஒரு கட்டிடத்தில் நடத்துவதற்கு அனைத்துச் சைவப்புலவர்களும், சைவர்களும் முன்வர வேண்டும்.

காணிக் கொள்வனவுக்கும் கட்டிடம் அமைப்பதற்கும் இப்போதே நிதியை சேகரிக்க வேண்டும். சைவப்புலவர் பட்டம் பெற்ற எல்லோரும் தம் சங்கத்துடன் இணைந்து சைவப்பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு"

சைவநாதம் - 5 (வெளிவந்த கட்டுரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ விழுமியப் பண்புடன் வாழ்வோம்

சைவப்புலவர், திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்
தேர்வுச் செயலாளர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் *M.A MED BA PGDE PGDEMSLEAS* கல்வித்திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்

மனிதப் பிறவி எடுத்ததன் பயன் இந்த மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவர்களையும் வளமுடன் வாழ வைத்து நாமும் மகிழ்வுடன் எல்லோருடனும் அன்புடன் நடக்க வேண்டுமென்பது நம் முன்னோர் வாழ்ந்து காட்டிய வழியாகும். “பிறருக்கு நன்மை செய்யப்பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு” என்று சுவாமி சிற்பவாநந்தர் கூறுகிறார்.

நம்முன்னோர் வாழ்க்கை வரலாறு எமக்கு நல்ல பாடமாக அமைகிறது. நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என அரசர்களிடம் புலவர் பெருமக்கள் ஏனையோரையும் ஆற்றுப்படுத்தியது சங்க காலத்திலெழுந்த திருமுருகாற்றுப் படை நூலால் அறிகிறோம். மனித விழுமியப்பண்பென்றால் மனிதன் மனிதனாக நடப்பது தான் திருக்குறள் மிகச் சிறந்த விழுமியப் பண்புகளை எடுத்துக் கூறுகிறது. இதனால் திருவள்ளுவரைத் தெய்வப் புலவர் என்று கூறுகிறார். கடவுள் வாழ்த்துப்பாடி இறைவனை சிறப்பித்துப்பாடியவர் இரண்டாவதாக மழை வளம் பற்றிப் பாடியுள்னார். நீரில்லாமல் மனித, உயிர்களின் வாழ்க்கை சிறப்புற அமையாது என்பதனால் அவ்வாறு பாடியுள்ளார். “தானம் தவம் இரண்டும் தல்காவியன் உலகம் வானம் வழங்காது எனின்” அதைத் தொடர்ந்து அதிகார வைப்புச் சிறப்பாகச் செய்து மனிதன் மனிதனாக வாழ வழிவகுத்துள்ளார்.

உலகிலுள்ள பல மொழிகளைப் பேசுவோரும் திருக்குறளை மொழி பெயர்த்துப் படிக்கிறார்கள் என்றால் அது சிறந்த விழுமியப் பண்புகளைக் கொண்டமைந்த நூலாக விளங்குகின்றமையாகும். தொடர்ந்துவந்த நாயன்மார்கள் தமது தேவார திருவாசகங்களூ டாக மனித விழுமியப் பண்புகளை எடுத்துக் கூறியுள்ளனர். நாளாந்த வாழ்க்கையின் மனிதன் வாழும் வழிகளை இலகுவாக எடுத்துக் கூறியுள்ளமை கண்கூடு. தமக்குள் பகையின்றி இறைவழிபாடு செய்து தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைத்த சிறப்புக்குரியவர்களாக நாயன்மார் விளங்குகின்றனர். அவர்களது வாழ்க்கை வரலாறு அவர்கள் பாடியுள்ள சைவசமய இலக்கியங்கள் இன்னும் திருமுறைகளில் ஆவணமாக உள்ளது.

சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் ஆன்மீக விடுதலை போன்ற கருத்துக்களை இலகுவாக மக்கள் புரிந்து பின்பற்றி வாழக் கூடிய வகையில் பாடித்தந்துள்ளனர்.

9047(17)

“ மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை.....” என்ற தேவாரம் மனித வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வழி வகுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க
வேண்டுகின்றேன். முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல் வேனைப்
பக்தி நெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம்
அறுவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கு அருளியவாறு..."
"பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ பாவியேனுடைய"
"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"
"பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்"
"பிறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார் பிறவாமை
வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனை என்றும் மறவாமை
வேண்டும்..."
"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"
திருநீலகண்டத்து குயவனார்க் கடியேன்"

இவ்வாறு திருமுறைகளினூடாகச் பல சைவ விழுமியப் பண்புகள் எமக்குப் புலப்படுத்ததுப்பட்டுள்ளன. திருமுறைகளுக்குப் பின்னர் திருவருட் பயன் மூலம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளுண்மை தொடர்பான உண்மைகள் புலப்படுத்தப்பட்டுள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்களை மிக இனிமையாகவும் எளிமையாகவும் திருவருட் பயனால் அறிந்து கொள்ளலாம். ஆகவே சைவ சமயம் சிறந்த விழுமியப் பண்புகளை எடுத்துக்காட்டுகிறது. இலக்கியங்கள் மட்டுமல்லாது விழாக்கள் திருவிழாக்கள் பண்டிகைகள் ,விரதங்கள் மக்கள் நெறிமுறை தவறாது வாழும் வகையை எடுத்துக் காட்டுகின்றன.

ஆகவே விழுமியப் பண்புகள் எல்லோருக்கும் தெரிந்தவை தான் மற்றோருடன் இனிமையாகப்பேசிமகிழ்வுடன்வாழ்வது மற்றவர்களுக்கு உதவுவது நல்லபழக்கங்களைப் பிள்ளைகளுக்குப் பழக்குவது ஆசார சீலர்களாக வாழ்வது மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிக்காமலிருப்பது கற்றபடி நடப்பது பெற்றோர் மற்றும் பெரியோரைப் பேணுவது போன்ற நல்ல பழக்கங்களைப் பின்பற்றுதலைக் கூறலாம். தெரியாத சிறியவர்களுக்கு எடுத்துக் கூறலாம். அது தான் இளமையில் கல்வி சிலையிலெழுத்து என்று கூறுவார்கள் மேலும் "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருக்கக் காய்கவர்ந்தற்று" என்பதனூடாக விழுமியப் பண்புகளின் சிறப்பைக் காணலாம்.

ஆனால் தெரிந்தவைதானே என்று அலட்சியமாக இருப்பவர்கள் தான் விழுமியப் பண்புகளை மேம்படுத்தச் சிக்கல்படுகின்றனர். எமக்கு நல்லன செய்யவேண்டும் எனில் நாம் பிறருக்கும் நல்லது செய்து வாழ வேண்டும். நாம் முன் மாதிரியாக வாழந்துகாட்ட வேண்டும் விழுமியப்பண்புகள் மனிதனை மேம்பாடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை அதை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் நாம் போதிப்பதுடன் சாதிப்பவர்களாகவும் வாழ்ந்து விழுமியப் பண்புகளை மேம்படுத்திச் சைவசமய வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்வோமாக.

(சைவநாதம் - 6 (வெளிவந்த கட்டுரை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கல்வி வளர்ச்சியில் திரு.சு. தேவமனோகரன் அவர்களின் பங்களிப்பு

மாணவி. சு. உதயமலர்
ஆசிரியர் க/ வ/ அம்பாள் த.வி. அம்பாகக்கோட்டை.

மலையகம் என்பது இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அம்சமாக காணப்படுகின்றது. மலையகத் தமிழர் என்ற பதம் பொதுப்படையாகத் பெருந்தோட்டங்களில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் யாவரையும் குறிப்பிடுகின்றது. இம் மலையக த்தில் சிறந்த கல்விச் சூழலை உருவாக்குவதில் ஆசிரியர்களே முதலிடம் பெருகின்றனர். அந்த வகையில் 1995ஆம் ஆண்டு திரு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்கள் மலையகத்தில் கண்டி மாநகரில் அமைந்துள்ள திகன பிரதேசேத்தைச் சேர்ந்த க/வ/ இராஜவெல்ல இந்து தேசிய கல்லூரிக்கு ஆசிரியராக வருகை தந்தார்.

அக் காலத்தில் மாணவர்களின் விருத்திக்கும் மேம்பாட்டிற்கும் ஏற்றவாறு சைவசமயம் சமூகக் கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களை மிகவும் நுணுக்கமாக கற்பித்தார். சந்தர்ப்பங்களுக்கு தகுந்தவாறு திரு.சு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்கள் மாணவர்களோடு பெற்றோராகவும் மூத்தோராகவும் நெருங்கி உரையாடுவார்.

திரு.சு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்கள் மாணவர்களின் நலிவான அம்சங்கள்,குறைபாடுகள் தேவைகள் என்பவற்றை அறிந்து ஒரு சிறந்த ஆலோசகாராகவும் மாணவர்களினதும் பாடசாலைகளினதும் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துன்னும் ஏதுவான வகையில் திட்டமிடல் சகல இணைப்பாடவிதமான செயல்களிலும் பங்கு கொண்டு பாடசாலையையும் முன்னேற்றினார்.

திரு.சு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்கள் இவ்வாறு சேவையாற்றியதோடு தன்னைளும் கல்வியில் உயர்த்திக் கொண்டு மலையக வலயக்க் கல்விப் பணிமனையில் ஆசிரியர்களுக்கு ஒர வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் ஆசிரியர் ஆலோசகர் என்ற பதவியை ஏற்றார். அப்பதவியில் மலையாக ஆசிரிய கல்வித் தரத்தினை உயர்த்திக் கொள்ள ஆலோசனைகள் பல அவரல் வழங்கப்பட்டது.

திரு.சு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்கள் ஸ்ரீ.டு.நு.ஸ்ரீ பரீட்சையில் சித்தி அடைந்து தெல்தெனியா கல்வி வலயத்தில் கல்விப்பாளாராக பொறுப் பெற்றர்ா. அக்காலப் பகுதியில் அவ்வலயத்தில் காணப்பட்ட தமிழ் பாடசாலைகளின் எண்ணிக்கை 14 ஆகும். அப்பாடசாலைகளுக்கு வேண்டிய அனைத்து சலுகைகளை போராடி பெற்றுக் கொடுத்தார். சாதரண தரப் பரீட்சைக்கு மாணவர்களுக்கு கருத்தரங்குகள், வினாத்தாள் என்பவற்றை பெற்றுக் கொடுத்து மலையக சமூகத்தில் பெறுபேற்றை அதிகரிக்க யெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினார். தெல்தெனிய வலய தமிழ் பாடசாலைகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவும் காணப்பட்டார்.

திரு.சு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்களின் கல்விப் பணியில் அவரிடம் கல்வி கற்ற மாணவி என்ற வகையில் கற்றுக் கொண்ட அனுபவங்கள் பல அன்பு, இரக்கம், என்பவற்றை ஒரு ஆசிரியர் கொண்டு இருக்க வேண்டும் என்பதை கற்றுத் தந்தார். ஒரு மனிதன் எந்தப் பதவிக்குச் சென்றாலும் ஏனையோரையும் சக மனிதர்களையும் மதிக்க வேண்டும். தன் நிலையில் இருந்து மாறக்கூடாது. என்பதை கற்றுத்தந்தார். தன்னிடம் ஏதும் குறையுண்டா, தான் பேசியது சரியா என தனது செயற்பாடுகளை ஏனையோரிடம் சரிபார்க்கும் கொள்கைகளை கற்றுத் தந்தார்.

நல்லதோர் பணியில்
நன்மைகள் நிலைக்கச் செய்து
மாணவர் உள்ளந்தன்னை
மாண்புற விளங்க வைத்து

திரு.சு. தேவமனோகரன் ஆசிரியர் அவர்கள் மேன்மைகள் பலவும் பெற்று உத்தம குணங்கள் பெற்ற சமூகம் போற்றும் ஒரு மனிதனாக வளமுடன் வாழ வாழ்த்துகிறோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலிகாமம் கல்வி வலயத்தின் முன்னாள்

திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்

**சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர்**

உயர் திரு சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்

B.A, M.A., M.ED,PGDE,PGDEM, SLEAS

அவர்களின் அகவை அறுபதில்

சேவை நலன் பாராட்டு விழாவில்

**09.02.2019 சனிக்கிழமை**

பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன், பேராசிரியர் க. தேவராஜா

ஆகியோர் முன்னிலையில்



# சொல்வேந்தர்

எனும் பட்டம் சூட்டி வாழ்த்தி வழங்கிய

பாராட்டுப்பத்திரம்



சைவமும் தமிழும் சிறந்தோங்கும் இணுவைப் பதியில்
சுவாமிநாத பிள்ளை பெற்றெடுத்த பேராளன்
சைவப்புலவன் தேவ மனோகரனே நிமிர்ந்த நடையும்
சீர் கொள் தோற்றமும் நேரிய பார்வையும் கொண்டோன்
சைவ சித்தாந்தத்தோடு பல்கலையில் பல கலை கற்றுப்
பல பட்டங்கள் பெற்றோன் நல் ஆசானாய் ஆசியர்க்கு
ஆசானாய் கல்வியுயர் அதிகாரியாய் நாற்றிசையும்
நற்பணி புரிந்தோன் நாவன்மை, சொல் வன்மை சேர்
ஆசானே புன்முகச் சிரிப்புக் கொண்ட தேவ மனோகரனே
சொல் வேந்தர் எனும் பட்டம் சூட்டி மகிழ்கின்றார் கற்றறிந்தோர்.
வாழ்க வாழ்க சொல் வேந்தரே வாழ்க வாழ்க

பாவாக்கம்
சைவச்சொற்பொழிவாளர் சைவப்புலவர்
செ. கந்தசத்தியதாசன் M.A

மணிவிழா குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களது 60 ஆவது வயது பூர்த்தியில் அவரது சேவை நலம் பாராட்டு விழாவிற்கு சிரமம் பாராது சமூகமளித்த அனைவரையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.

சமூகமளித்து ஆசியுரை வாழ்த்துரை கூறியவர்களுக்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கௌரவித்தவர்களுக்கும் விழா மலர் தேவ தீபத்துக்கு செய்திகள் வழங்கியவர்களுக்கும் விழா சிறப்புற பல வகைகளிலும் உதவியவர்களுக்கும் மலர் வெளியீட்டுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தவர்களுக்கும் விழா மண்டபத்தை தந்து சகல ஒழுங்கமைப்புக்களையும் தமது பாடசாலை நிகழ்வு போல் நடத்திய இணுவில் மத்திய கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் மேலும் இவ்விழா சிறக்க விழாக்குழு மலர்க் குழுவாகச் செயற்பட்டு நூல் வெளியீடு விழா நிகழ்வு ஒழுங்கமைப்பு விழாவிற்கு வந்து கௌரவம் செய்தவர்கள் அனைவரையும் நெஞ்சுள்ளவரை நினைவிருக்கும் வகையில் நன்றி கூறுகிறோம். விழாவிற்கான சிற்றுண்டி ஒழுங்கமைப்பு, போட்டோ, வீடியோ மற்றும் சகல உதவிகளையும் செய்தவர்களுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். விளம்பரங்கள் தந்து வாழ்த்தியர்களுக்கும் பத்திரிகை பிரசுரித்து உதவியவர்களுக்கும் மலரை அச்சிட்டவர் (தீபம் பிறின்டேர்ஸ்) நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**ஞானசூரியர்**
இணைப்பாளர்

**செ. இலகுநாதன்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா சிறப்புற வாழ்த்துவோர்

# NRS OPTICALS

VISION IS EVERYTHING

NRS

No.130, 1st Cross Street, Jaffna.

nrsopticals@gmail.com

021-2226615, 077-0296557, 0778694625



# SIVAKANESAN TEXTILES


Wholesale & Retail

Dealers in Textiles Specialist in Wedding Sarees

# 41, Grand Bazaar, Jaffna. Tel : 021 222 2063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்

பிரபல கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்கள்

இல. 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021 222 2901 / 021 222 5003, பெக்ஸ் : 021 222 4869

## සිටි හාඩ්වෙයාර් සහ ස්ටෝර්ස්

ගොඩනැගිලි ද්‍රව්‍ය බෙදාහරින්නෝ

55, 57, ස්ටැන්ලි පාර,
යාපනය.

දු:ර : 021 222 2901
ෆැක්ස් : 021 222 4869

## Fine Selection

Fancy Goods & Electrical Items, Bata, CD
No. 77, K.K.S Road, Chunnakam
TP : 021 2240005, 0778689375

Name :........................................
Address :........................................

Wicknesh - 0779587001

கற்பகவிநாயகர் துணை



## KAJAMUGAN
*Hardware*

Leading Hardware Merchant in
Jaffna Pennisulla

**Prop. E.S.P.Nagarathnam**
**147, 149, Stanley Road, Jaffna**
**Tel. : 021 222 2833**
**Fax : 021 222 2368**

**Office**
**103, Old Moor Street, Colombo 12**
**Tel. : 0112 542985**
**Fax : 0112 542984**

kajamuganhw@hotmail.com

## அபிராமி பசன் கவுஸ்



உங்கள் ஆடைத்
தெரிவுகளுக்கு நாடவேண்டிய
ஒரே இடம்



கே.கே.எஸ். சுன்னாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් **KIRUBAA LEARNERS**

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS

DS - 589

அரச அங்கிகாரம் பெற்ற வடக்கின் முதல் தர
சாரதிப் பயிற்சி பாடசாலை

**226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**021 222 4353, 021 492 3200**

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




0777 225292
kirubaalearners
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | | |
|---|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | சித்தங்கேணி 021 225 2500 | பருத்தித்துறை 021 226 1100 | நெல்லியடி 021 226 0700 | சாவகச்சேரி 021 227 0700 |
| ஆவரங்கால் 021 222 6688 | திருநெல்வேலி 021 221 4488 | கச்சேரி 021 222 6699 | தெல்லிப்பளை 021 224 3737 | முழங்காவில் 021 300 6544 |
| விசுவமடு 021 320 1515 | பூநகரி 021 320 1818 | கிளிநொச்சி 021 228 5505 | மன்னார் 023 225 1656 | வவுனியா 024 222 7777 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா சிறப்புற வாழ்த்துபவர்




## எம் அன்பான வடிக்கையாளர்களே

ஆண்டு அறுபதில் காலடி வைத்து உங்கள்
சேவைகளுக்காக பல விருதுகளை வென்றெடுத்து எம்மை
அங்கிகரிப்பட்ட உணவு தயாரிப்பு நிறுவனமாக
சிறக்க செய்தமைக்கு
மனம் மார்ந்த நன்றிகள்
என்றும் உங்களுக்கு!

அண்ணா நிர்வாகம் மற்றும் ஊழியர்கள்

ISO 14001 GMP

ANNA INDUSTRY - 0212241565,0217200800
ANNA INTERNATIONAL(PTE)LTD - 0112436063,0112424877
Web: www.annacoffee.com
E.mail: annacoff@gmail.com





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தீபம் பிறிண்டேர்ஸ், இல. [illegible] கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org